பொழிவு - 18
குவிப்பு - 06
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
யூன் 2015
(ISSN 1800-2641)

Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை මන්නා

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 68 / News / 2015"

## திருகோணமலைக்கு புதிய ஆயர்




திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் நியமிக்கபட்டுள்ளார். கடந்த யூன் மாதம் 3ஆம் திகதி திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி அவர்கள் வெளியிட்ட ஊடக வெளியீட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருகோணமலை ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை பணி ஓய்வுபெற விரும்பி அனுப்பியிருந்த விண்ணப்பத்தை திருச்சபையின் சட்டத்தொகுப்பு 401 – 01 இன் பிரகாரம் ஏற்றுக்கொள்வதோடு திருகோணமலை மறைமாவட்டத்தில் தற்போது ஆயரின் பிரதிநிதியாகச் (Episcopal Vicar) செயல்படும் அருட்தந்தை கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளாரை திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமித்துள்ளார்."

(புதிய ஆயரின் வாழ்க்கைக் குறிப்புகளை 4 ஆம் பக்கத்தில் காணலாம்.)

## தொடர்ந்து செபிப்போம்!



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தொடர்ந்தும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் நிலையில் தொடர்ந்தும் அவருக்காகச் செபிக்கும்படி இறைமக்கள் அனைவரையும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபை வேண்டி நிற்கின்றது.

## மன்னார் ஆயரின் உடல்நிலை தொடர்பாக மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் ஏ. விக்ரர் சோசை அடிகளார் விடுக்கும் விசேட அறிக்கை



மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களின் உடல்நிலை தொடர்பாக பல தரப்புக்கள் மத்தியில் இருந்தும் அக்கறையும் கரிசனையும் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எச். கே. டி. எஸ். குலரெட்ன அவர்களின் தகவலை அடிப்படையாகக்கொண்டு ஆயர் அவர்களின் தற்போதைய உடல்நிலை தொடர்பான தகவல்களை வழங்குகின்றோம்.

மே மாதம் 2ஆம் திகதி மூளையில் ஏற்பட்ட இரத்தக் கசிவு காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நரம்பியல் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த ஆயர் அவர்கள், துரதிஸ்ரவசமாக மே மாதம் 17ஆம் திகதி பக்கவாதத்தினாலும் பாதிக்கப்பட்டார். இதனிமித்தம் அவருடைய வலது கை மற்றும் வலது கால் பாதிப்படைந்துள்ளன.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## இரக்கத்தின் புனித ஆண்டு
### திருத்தந்தையால் பிரகடனம்



இரக்கத்தின் புனித ஆண்டு (The Holy Year of Mercy) என்ற சிறப்பு யூபிலி ஆண்டு 2015ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதி முதல், 2016ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் திகதி வரை கொண்டாடப்படும் என திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்தார். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நிறைவுற்றதன் 50ஆம் ஆண்டையொட்டியே இந்த சிறப்பு யூபிலி ஆண்டை திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ளார். கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதி அன்று இந்தச் சிறப்பு யூபிலி ஆண்டுக்கான பிரகடனத்தை திருத்தந்தை அறிவித்தார்.

## வித்தியாவின் படுகொலை எழுப்பியிருக்கும் வினாக்கள்




மேற்படி தலைப்பைக் கொண்ட யாழ். மறைமாவட்ட நீதி சமாதன ஆணைக்குழுவின் அறிக்கையை 2ஆம் பக்கத்தில் காணலாம்

## துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும் மன்னார் மண்ணின் மைந்தர்களான ஐந்து அருட்சகோதரர்கள்





மன்னார் மண்ணின் மைந்தர்களும், டி லாசால் துறவற சபையைச் சேர்ந்தவர்களுமான ஐந்து அருட்சகோதரர்கள் கடந்த மே மாதம் 12ஆம் திகதி தமது துறவற வாழ்வில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் கொண்டாடினார்கள். அருட்சகோதர் எஸ். ஈ. றெஜினோல்ட், அருட்சகோதரர் எஸ். சந்தியாகு, அருட்சகோதரர் பி. பொணவஞ்சர், அருட்சகோதரர் எஸ். சி. விஜயதாசன் மற்றும் அருட்சகோதரர் ஆர். ஜோசப் ஜெயகாந்தன் ஆகியோரே வெள்ளி விழாக் கண்ட அருட்சகோதரர்கள் ஆவர். இவர்களுடைய வெள்ளி விழாத் திருப்பலி கடந்த மே மாதம் 17ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் தலைமையில் கொழும்பு, முகத்துவாரம் புனித சூசையப்பர் சிற்றாலயத்திலே எளிமையாக நடைபெற்றது. துறவற வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அருட்சகோதர்கள் ஒவ்வொருவருக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பாக மன்னா தனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு

### சிறப்பு ஆசிரியர் தலையங்கம்

## வித்தியாவின் படுகொலை எழுப்பியிருக்கும் வினாக்கள்

**யாழ. மறைமாவட்ட நீதி சமாதன ஆணைக்குழுவின் அறிக்கை**

கடந்த வாரம் புங்குடுதீவில் வி. வித்தியா எனும் பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வின்பின் கொல்லப்பட்ட நிகழ்வு மீண்டுமொருமுறை இப்பகுதி மக்களைப் பேரதிர்ச்சிக்கும், சோகத்திற்கும் உள்ளாக்கியிருக்கின்றது. இந்தத் துயர சம்பவத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள இவரின் பெற்றோர், சகோதர, சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினரின் துயரத்தில் கல்விச்சமூகம் மட்டுமன்றி ஒட்டுமொத்த சமூதாயமும் கலந்துகொண்டுள்ளது. இந்நிகழ்வு சுட்டிக்காட்டும் ஒருசில முக்கிய உண்மைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். இனிமேல் இதுபோன்ற நிகழ்வுகள் இங்கும் எங்கும் நிகழக்கூடாது என்பதே எமது விருப்பம்.

### குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை

இதுபோன்ற நிகழ்வு இங்கு நடைபெற்றது இது முதல் தடவையல்ல. புங்குடுதீவில் மட்டும் 1999ம் ஆண்டு சாரதாம்பாள் என்ற பெண்ணும் 2005ம் ஆண்டு சுதர்சினி என்ற பெண்ணும் கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவையிரண்டின் குற்றமும் இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரின்மீதுதான் சுமத்தப்பட்டிருந்தது. இவற்றின் விசாரணைகளில் எதுவித முன்னேற்றமும் தென்படவில்லை. குற்றவாளிகள் இனம்காணப்பட்டுத் தண்டிக்கப்படவுமில்லை. இந்நிகழ்வுக்கான நீதி வழங்கப்பட்டிருக்குமாயின் இதுபோன்ற வன்கொடுமைகள் நிகழாமல் தடுத்திருக்கலாம்.

### பொலிசாரின் அசமந்தப்போக்கு

அண்மைக்கால நிகழ்வுகளைப் பார்க்கும்போது வடபகுதியின் பல்வேறு இடங்களில் பெரும் எண்ணிக்கையிலான பொலிசாரைக்கொண்ட பல்வேறு காவல் நிலையங்கள் இருந்தும் இங்கு பணிபுரிகின்றவர்களின் அசமந்தப்போக்கு சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்குத் துணைபோவதாக இல்லை. வித்தியா என்னும் தமது மகள் பாடசாலையால் இன்னும் வீடு வந்து சேரவில்லையென்று புங்குடுதீவு காவல்நிலையத்தில் முறையிடச் சென்றபோது, "அவள் ஒருவேளை அவளது காதலனுடன் ஓடி இருக்கலாம் காலையில் வந்துவிடுவாள்" என்று பொறுப்பற்றவிதத்தில் அங்கு அந்நேரத்தில் பணியில் இருந்த காவல்துறை அதிகாரி பதில் அளித்தமை இதற்கு நல்லதொரு உதாரணம். இதுபோலவே 3 மாதங்களுக்கு முன்பு கனகராயன்குளத்தில் சரண்யா எனும் பெற்றோரை இழந்த பெண் மர்மமான முறையில் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்தபோதும் பொறுப்பான பொலிசாரின் நடவடிக்கைகள் மெத்தனமாகவே இருந்துள்ளன. பின்னர் பொது மக்கள் இம்மாணவியின் மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று கொடுத்த அழுத்தத்தின் காரணமாகத்தான் அவளது உடல் திரும்பவும் தோண்டியெடுக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இவளும் வன்புணர்வுக்குள்ளான உண்மை வெளிவந்தது. சில வாரங்களுக்குமுன் தகுந்த ஆதாரத்துடன் கணிசமான தொகுதி போதைப்பொருளுடன் (கஞ்சா) பிடிபட்டபோது குற்றவாளிகளுக்குப் பிணை வழங்குவதற்குத் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத பொலிஸ் பொறுப்பதிகாரி யாழ் நீதவானின் கடும் கண்டனத்திற்கு உட்படுத்தப்பட்டமையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். கடுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் இதுபோன்ற மோசமான குற்றச்செயல்களைக் கணிசமானளவு தவிர்த்திருக்கலாம்.

### தடுப்பு நடவடிக்கைகள்

புங்குடுதீவில் வித்தியாவிற்கு நடந்த கொடூரம் குடாநாட்டில் மட்டுமல்ல பல்வேறு இடங்களிலுமுள்ளவர்களை அதிர்ச்சியில் உறையவைத்தது உண்மையே. பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல எல்லோரும் தமது அதிருப்தியையும், கண்டனத்தையும் வெளிப்படுத்துவது முறையே. இத்துடன் நின்றுவிடாது இனிமேல் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நிகழாதிருக்கக் காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியம். சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குப் பொலிசார் இருக்கின்றனர் என்று நாம் ஒதுங்கி இருந்துவிட முடியாது.

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர், பெற்றோரை உள்ளடக்கிய கல்விச் சமூகத்தவர், சமயத்தலைவர்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் கூடி அண்மைக்காலமாக எமது சமூகத்தின் சீரான வாழ்வில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஓட்டைகளை அடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பிள்ளைகள் பாடசாலைக்குப் போய்வருவதற்கான - குறிப்பாக தூர இடங்களில் இருந்தும் சனநடமாட்டமில்லாத பகுதிகளுடாகவும் தனியாகப் போய்வருவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றித் தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## நினைவுகூர்ந்து செபிப்போம்



நோபேட் அடிகளாரின் 6ஆம் ஆண்டு நினைவு
**யூன் 20**



விக்ரர் அடிகளாரின் 2ஆம் ஆண்டு நினைவு
**யூலை 04**

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அமரர் அருட்பணி. சீமான்பிள்ளை நோபேட் அடிகளார் இறைபதம் எய்திய 6ஆம் ஆண்டு நிறைவு யூன் மாதம் 20ஆம் திகதி ஆகும். அமதிகள் சபையைச் சேர்ந்த அருட்பணி. விக்ரர் குரூஸ் (அமதி) அடிகளார் இறைபதம் அடைந்த இரண்டாம் ஆண்டு நிறைவு யூலை மாதம் 4ஆம் திகதி ஆகும். இறையடி சேர்ந்த இக்குருக்களுக்காக இத்தினங்களில் சிறப்பாக வேண்டிக்கொள்வோம்.

## மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2015

### ஆனி

01- புனித அந்தோனியார் திருவிழா ⁒ படகுதுறை
கர்த்தர் ஆலயத் திருவிழா ⁒ சுண்டிக்குளி
02- தூய சகாயமாதா திருவிழா ⁒ கல்நாட்டி
04- புனித நீக்கிலாஸ் திருவிழா ⁒ வாழ்க்கைப் பெற்றான் கண்டல்.
07- கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தப் பெருவிழா.
⁒ நற்கருணை ஆண்டவர் விழா ⁒ யோசேப்வாஸ் நகர், கீரி
12- இயேசுவின் திருஇருதயப் பெருவிழா ⁒ குருக்கள் மறைக்கோட்ட ரீதியில் ஒன்றுகூடி நற்கருணை வழிபாட்டில் ஈடுபடுவர். கபயன்குடியிருப்பு, சிதம்பரபுரம்
13- புனித அந்தோனியார் திருவிழா ⁒ வவுனியா, செட்டிகுளம், தட்சனாமருதமடு, தள்ளாடி, பள்ளங்கோட்டை, கறுக்காக்கும், கொக்குப்படையான். சிறுத்தோப்பு, கோவில்குளம், துவரங்கேணி, பிடாரிகுளம், உவரி, கனகராயன்குளம், ஒலிமடு, சிறுக்கண்டல், நெடுங்கண்டல், ஆச்சிபுரம், தரவன்கோட்டை, மன்னார் டிப்போ, பெரியதம்பனை, கல்மடு, சுவாமித்தோட்டம், கயுவத்தை, இலுப்பைக்கடவை, குருக்கள் புதுக்குளம்.
14- அந்தோனியார் விழா ⁒ சிறுக்கட்டு (செல்பெட்டி), பனிக்கர் புளியங்குளம், கூமாங்குளம்.
16- திருஇருதய ஆண்டவர் விழா ⁒ வேப்பங்குளம் (இலுப்பைகுளம்)
17- தூய அந்தோனியார் திருவிழா ⁒ பொன்தீவுகண்டல், பாலைப்பெருமாள்கட்டு
18- புனித அந்தோனியார் திருவிழா - ஸ்ரேசன்
19- புனித சவேரியார் திருவிழா ⁒ சிலாவத்துறை
21- பாப்பரசர் தினம் (காணிக்கை ஆயர் இல்லத்திற்கு அனுப்பப்படும்)
⁒ புனித சவேரியார் திருவிழா ⁒ மணற்குளம்
- திருஇருதய ஆண்டவர் திருவிழா ⁒ வேலர் சின்னக்குளம் (ஓமந்தை)
22- புனித சவேரியார் திருவிழா ⁒ அலைகல்லு போட்டகுளம் (ஓமந்தை), நடுக்குடா, சாவற்கட்டு முதலியார்குளம்
23- மடுத்திருப்பதியின் ஆடித்திருவிழாவிற்கான கொடியேற்றம் - நவநாள் ஆரம்பம்
27- திரு இருதய ஆண்டவர் திருவிழா ⁒ பரிகாரிகண்டல்
- புனித இராயப்பர் திருவிழா ⁒ முறியாகுளம்
- புனித சவேரியார் திருவிழா ⁒ சாவற்கட்டு
29- புனித இராயப்பர் திருவிழா ⁒ உயிலங்குளம்
30- புனித அந்தோனியார் ⁒ பெரியகட்டு (பம்பைமடு பங்கு)

■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## இத்தாலியில் இருந்து ஓர் இனிய மடல்!

அன்று இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் பசியால வாடியபோது மோயீசன் மூலம் மன்னா என்னும் உணவு அளித்து அவர்களின் வயிற்றுப்பசியை இறைவன் போக்கினார். அதேபோல் இன்று மன்னா என்னும் ஆன்மீகப் பத்திரிகை மூலம் புலம்பெயர்ந்து வாழும் எமது ஆன்மீகப் பசியை இறைவன் போக்குகின்றார். ஆன்மீகப் பசியை மட்டுமல்ல எம் உயிரான தமிழ்ப பசியும் இந்த மன்னா பத்திரிகை வாயிலாக இறைவன் தீர்த்துவைக்கின்றார்.

மன்னாவே! உனது பணிக்கு புலம்பெயர் நாட்டில் வாழும் நாம் நன்றியும் வாழ்த்தும் கூறுகின்றோம்.

எம் தாய் மொழியாம் தமிழ் மொழியையும் தமிழர் பண்பாட்டையும் வளர்ப்பதோடு எம் இறை விசுவாசத்தை இன்னும் ஆழப்படுத்துவதற்கு எமது மண்ணில் இருந்து எமக்கு ஒரு துடிப்புமிக்க ஆன்மீக இயக்குனரை - இயல், இசை, நாடகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் சிறப்புமிக்க அருட்பணியாளர் விமல்ராஜ் (அமதி) அடிகளாரை எங்களுக்குத் தந்தமைக்காக இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

இத்தாலி பலர்மோவில் வாழும் நாம் ஒரு பங்கு மக்கள் போன்று இறைவிசுவாசத்தில் வளர்வதற்கு மரியாயின் சேனை, சூசையப்பர் சபை, ஞானப்பிரகாசர் இளையோர் ஒன்றியம், அன்னை திரேசா சபை என்று பத்திற்கும் மேற்பட்ட ஆன்மீக சபைகளை உருவாக்கி ஆன்மீகத்தில் உறுதியுடன் வாழ்கின்றோம். மேலும் கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி ஞாயிறு மாலை தவக்காலத்தின் முக்கிய ஒரு நிகழ்ச்சித்திட்டமாக 150க்கும் மேற்பட்ட கலைஞர்களை உள்வாங்கி "கல்வாரி இரத்தம்' எனும் பெயரிலான திருப்பாடுகளின் காட்சி பெரியளவில் மேடையேற்றப்பட்டது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## வாழ்த்துகிறோம்



மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை ஆயராக நியமனம் பெற்ற (1992) தினம் யூலை 6 ஆகும். ஆயர் அவர்களுக்கு மன்னார் மறைமாட்ட இறைமக்களின் வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

## மன்னார் ஆயர் நலம்பெற வேண்டி இந்து குருமார் பேரவை பிரார்த்தனை

மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை விரைவில் குணமடைய வேண்டும் என்று வேண்டி பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மன்னார் மாவட்ட இந்து குருமார் பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இது குறித்து பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; மன்னார் மறைமாவட்ட ஆயர் நோய்வாய்ப்பட்டதை அறிந்து மிகவும் வேதனையடைந்தோம். அவர் விரைவில் குணமடைந்து பணிதொடர வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்புமாகும். அவர் பூரண நலம்பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திடீர் சுகவீனத்தால் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மன்னார் ஆயரின் உடல்நிலை முன்னேற்றம் கண்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. அவரது உடல் நலம் அபாய கட்டத்தில் இல்லை என்றும் அவரது தலையில் ஏற்பட்டுள்ள உள்ளக இரத்தக்கசிவை அகற்றுவதற்காக நரம்பியல் சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மன்னார் ஆயரைப் பார்வையிட வருவதை தவிர்க்குமாறு அன்பான வேண்டுகோள்


கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வரும் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களைப் பார்ப்பதற்காகப் பார்வையாளர்கள் தற்போது அங்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு மருத்துவர்கள் கோரியுள்ளனர் என்று மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்ரர் சோசை தெரிவித்தார்.

ஆயருக்காகத் தொடர்ந்து செபிக்கும்படியும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவர்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய அறிக்கை

## - இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை -


இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையானது உலகின் சில பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் கொடூரமாய் படுகொலை செய்யப்படுவதையிட்டு ஆழமான கரிசனை கொண்டுள்ளது. இவர்கள் தங்களது செபம் மற்றும் வழிபாடுகளின் போது எவ்வாறு மிருகத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள் என்பதை மிகுந்த வருத்தத்தோடு அவதானித்திருக்கிறோம். பல குழந்தைகள் மற்றும் மனித சமுதாயத்தின் அப்பாவிகள் இப்படிப்பட்ட சொல்லமுடியாத, மிருகத்தனமான வன்செயல்களுக்குப் பலியாகி வருவதை கேள்வியுற்று அதிர்ச்சி அடைகின்றோம்.

அந்தவகையில் ஒருவர் தனது சமய மார்க்கத்தைப் பின்பற்றும் மிக முக்கிய அடிப்படை உரிமையானது மனிதாபிமானத்திற்கு முரணான செயற்பாடுகளால் மீறப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். உயிர் என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட இறைவனது அதி உன்னத கொடை. எனவே ஒவ்வொருவருக்கும் தனது தெரிவிற்கு ஏற்றாற்போல சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரம் உண்டு. அந்தவகையில் ஒருவரது சமய மார்க்கம் மட்டும் அவரது மரணத்திற்குக் காரணமாக அமைந்துவிட முடியாது, ஏனென்றால் எவருமே கடவுளின் பெயரினால் கொலைசெய்ய முடியாது.

இந்த சகோதர சகோதரிகளுடைய விசுவாசத்தின் உன்னத தியாகத்தை அதியுயர் மதிப்பும் மரியாதையும் மிக்க ஒன்றாக நாங்கள் கருதுகின்றோம். இவ்வருந்தத்தக்க இழப்பினால் துயருறும் அனைவருடன் நாமும் ஆழமான செபத்தில் இணைந்துகொள்வோம். இறைவன் அவர்களது குடும்பங்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும் ஆறுதலும் திடமும் தேற்றுதலும் அளிப்பாராக!

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## ஆயர் உடல்நலம் தேற மன்னார் மறைமாவட்டத்தில் விசேட வழிபாடுகள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் உடல்நலம்தேற மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றுள்ளன.

ஆயர் அவர்கள் பூரண உடல்நலம் பெற்று தன் பணிகளுக்குத் திரும்பவேண்டும் என செபிக்குமாறு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. ஏ. விக்ர் சோசை அடிகளார் மன்னார் மறைமாவட்ட இறைமக்களைக் கேட்டிருந்தார். இதற்கமைவாக கடந்த யூன் மாதம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆலயங்களில் ஆயருக்காக சிறப்பு செபவழிபாடுகள் இடம்பெற்றன.

## மடு அன்னையின் ஆடித் திருவிழா



மடு அன்னையின் ஆடித் திருவிழாவிற்கான ஆயத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. யூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் நவநாள்கள் ஆரம்பிக்கப்படும். யூலை மாதம் 1ஆம் திகதி மாலை 6.15 மணிக்கு வேஸ்பர் நற்கருணை ஆராதனையும், 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். இவ்விழாவிற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மடுப்பரிபாலகர் அருட்பணி. எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் ஒத்துழைப்போடு இடம்பெற்று வருகின்றன.

## குடும்பங்களுக்கான சிறப்பு நற்செய்தி விழாவும் குணமளிக்கும் வழிபாடும்

### சகோதரர் லலித் பெரேரா சிறப்புத் தியான உரை



அர்ப்பண வாழ்வு ஆண்டு 2015ல் "குடும்பங்களில் அர்ப்பண வாழ்வு" என்ற மையப்பொருளில் மன்னார் மறைமாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

இந்தவகையில் மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மறைமாவட்டத்தின் வவுனியா, முருங்கன், மன்னார், மடு ஆகிய அனைத்து மறைக்கோட்டங்களிலும் குடும்பங்களுக்கான சிறப்பு உரைகள் இடம்பெற்றன.

கொழும்பிலிருந்து வருகைதந்திருந்த 'உயிர்த்த ஆண்டவர் குழுமம்' (Risen Lord Community) என்ற அமைப்பைச் சார்ந்த கத்தோலிக்க அருங்கொடைக் குழுவினர் இந்த உரைகளை வழங்கினர். சிறப்புத் தியான உரையை சகோதரர் லலித் பெரேரா வழங்கினார்.

மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அடிகளார் இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கமைப்புச் செய்திருந்தார்.

## "தந்தையே எம்மை ஒன்றுபடுத்தும்!"

## உயிர்த்த ஆண்டவர் குழுமத்தோடு இணைந்து மடு அன்னையின் திருத்தலத்தில் ஒன்றிப்பு திருவிழிப்பு ஆராதனை!

FATHER MAKE US ONE

மடுத்திருப்பதியில் பரிசுத்த பாப்பரசர் அவர்கள் சிங்கள மற்றும் தமிழ் மக்கள் இழந்த ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்ப அவர்களுக்கு உறுதுணையாக இருக்கும்படி தேவஅன்னையிடம் முன்வைத்த கோரிக்கைக்கு இணங்க, "தந்தையே எம்மை ஒன்றுபடுத்தும்" எனும் மையப்பொருளில் ஒன்றிப்புத் திருவிழிப்பு ஆராதனை மடுத்திருத்தலத்தில் இடம்பெற்றது.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு திருப்பலியோடு ஆரம்பித்த இந்நிகழ்வு, மே மாதம் 31ஆம் திகதி காலை திருப்பலியோடு 7.00 மணிக்கு நிறைவுபெற்றது.

இம்முயற்சியானது வடபகுதியின் மன்னார் ஆயர் மேதகு இரா யோசேப்பு ஆண்டகையினதும், தென் பகுதியின் காலி ஆயர் மேதகு ரேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகையினதும் ஆதரவுடனும் மற்றும் இலங்கையின் ஏனைய ஆயர்களினது ஆசீர்வாதத்தோடும் உயிர்த்த ஆண்டவர் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது.

### தாழ்வுபாடு ஆலயத்தில்

## திருச்சிலுவைக் கன்னியர் அறுவரின் நித்திய வாக்குத்தத்தம்

கடந்த யூன் மாதம் 2ஆம் திகதி திருச்சிலுவைக் கன்னியர்கள் ஆறு பேர் தமது நித்திய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார்கள். இந்த நித்திய வாக்குறுதித் திருப்பலியை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ர் சோசை அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். நித்திய வாக்குறுதியை வழங்கிய ஆறு அருட்சகோதரிகளும் பின்வருமாறு :

1. அருட்சகோதரி பற்றிசியா பற்றிக்
   - நாவற்காடு புனித சிந்தாத்துரை மாதா பங்கு.
2. அருட்சகோதரி பிரபாஜினி பிரான்சிஸ்
   - செட்டிகுளம் புனித லூர்து அன்னை பங்கு
3. அருட்சகோதரி றென்சி அந்தோனி லெம்பேட்
   - முத்தரிப்புத்துறை புனித காணிக்கை மாதா பங்கு
4. அருட்சகோதரி அனிஸ்ரா டெபறேறா
   - முத்தரிப்புத்துறை புனித காணிக்கை மாதா பங்கு
5. அருட்சகோதரி றோஜினி பிகிராடோ
   - பள்ளிமுனை புனித லூசியா அன்னை பங்கு
6. அருட்சகோதரி றேனுகா சிமியோன்
   - அடம்பன் காத்தான்குளம் புனித சூசையப்பர் பங்கு

திருச்சிலுவைக் கன்னியர்களின் இலங்கை மாகாண முதல்வர் அருட்சகோதரி விக்ரரின் மற்றும் அவருடைய ஆலோசகர்கள், குருக்கள் துறவியர் எனப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நித்தியத்திற்கும் தம்மை இறைவனுக்கு வாக்குத்தத்தம் செய்த அருட்சகோதரிகளுக்கு மன்னா தனது வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது.

## பாப்பரசர் தினம் 21.06.2015

மையப் பொருள்

"உங்கள் உடனிருப்பு விசுவாசத்தில் எம்மை வளரச் செய்கிறது"

"Your presence makes us grow in faith"



### மன்னார் மறைமாவட்ட

## சமூகத்தொடர்பு அருட்பணி தினம் 12.07.2015 (ஞாயிறு)

சமூகத் தொடர்பாடல் தினத்தையொட்டிய திருத்தந்தையின் செய்தி 12ஆம் பக்கத்தில். இத்தினத்திற்கான சுவரொட்டி (பனர்), வழிபாட்டுக் குறிப்புகள் (முன்னுரை, வாசகம், மன்றாட்டு, மறையுரைக் குறிப்புக்கள் போன்றவை) மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தினால் பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

- இயக்குனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமாதானத்தின் தூதுவர்' பாலஸ்தீன ஜனாதிபதிக்கு பாப்பரசர்பாராட்டு

பாலஸ்தீனத்தின் 19ம் நூற்றாண்டைச் சேர்ந்த இரு அருட்சகோதரிகளை திருநிலைப்படுத்துவதற்கு வத்திக்கான் மேற்கொண்டிருந்த நடவடிக்கை காரணமாக வத்திக்கானுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான உறவுகளில் புதிய அத்தியாயங்கள் ஆரம்பித்திருக்கும் நிலையில் வத்திக்கானில் கடந்த 16.05.2015 அன்று சனிக்கிழமை இடம்பெற்றிருந்த சந்திப்பொன்றின்போது பாலஸ்தீன ஜனாதிபதி மொஹமட் அப்பாஸை 'சமாதானத் தூதர்' என பாப்பரசர் பிரான்சிஸ் பாராட்டியுள்ளார். வத்திக்கானின் அப்போஸ்தலிக்க மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இருவரும் நினைவுப்பரிசுகளைப் பரிமாறியநிலையில் பாப்பரசர் பிரான்சிஸ் மொஹமட் அப்பாஸை சமாதானத்தின் தூதுவர் என விளித்துள்ளார்.

போரின் உள்ளுணர்வினை முற்றாக அழிப்பதற்காக மொஹமட் அப்பாஸ் முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாக பாப்பரசர் குறிப்பிட்டிருந்தார். 2014ஆம் ஆண்டில் இஸ்ரேலுக்கும் மேற்குக்கரைக்கும் விஜயம் மேற்கொண்டிருந்த பாப்பரசர் அப்பாஸ் மற்றும் இஸ்ரேல் ஜனாதிபதி சிமோன் பெரஸ் ஆகியோரை சமாதானத்தின் மனிதர்கள் என அழைத்திருந்தார். ஒட்டமேன் ஆட்சிக் காலத்தில் பாலஸ்தீனத்தில் இருந்த இரு அருட்சகோதரிகளை புனிதர்களாக அறிவிக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அப்பாஸ் வத்திக்கான் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



வத்திக்கானுக்கு வருகை தந்துள்ளார். கிறிஸ்தவத்தின் ஆரம்பக் காலத்திலிருந்து முதற்தடவையாக அப்பிராந்தியத்தைச் சேர்ந்த இருவர் புனிதர்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருத்தந்தை, அர்ப்பணிக்கப்பட வாழ்வு வாழ்வோர் சந்திப்பு

உரோம் மறைமாவட்டத்தில் அர்ப்பணிக்கப்பட வாழ்வு வாழும் ஆயிரக்கணக்கான துறவறத்தாரை கடந்த 16.05.2015 சனிக்கிழமையன்று அருளாளர் ஆறாம் பவுல் அரங்கத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் சந்தித்தார். காலை 11.00 மணிக்கு ஆரம்பித்த இந்நிகழ்வின் முதல் கட்டமாக பாடல்கள், செபங்கள், உலகின் பல்வேறு பகுதிகளில் பணிசெய்தவரின் சாட்சியங்கள் போன்றவை இடம்பெற்றன. இராண்டாவது கட்டமாக உரோம் மறைமாவட்ட திருத்தந்தையின் பிரதிநிதி கர்தினால் வல்லினி அவர்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வரவேற்றுப் பேசிய பின்னர் நான்கு பேரின் கேள்விகளுக்கு திருத்தந்தை பதில் அளித்தார்.

அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் சிறப்பையும் அடைபட்ட துறவு வாழ்வு பற்றியும் கூறிய திருத்தந்தை இறைவன் நம்மை முதலில் சந்தித்ததை நாம் மறந்தால் செபத்தின்மீதான ஆர்வம் குறையும் என்று கூறினார். திரு அவை மற்றும் அன்னை மரியின் அடையாளமாக அருள்சகோதரிகள் உள்ளனர். திரு அவை பெண்கள் மையத் தன்மை கொண்டது. இதனால் திரு அவை





இயேசுவின் மணவாட்டி என்று அழைக்கப்படுகின்றது என்பதை மறக்க வேண்டாம் என்றும் திருத்தந்தை கூறினார். அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு வாழ்வோர் ஆண்டு இவ்வாண்டில் சிறப்பிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# குடியேற்றவாசிகளை பாதுகாக்க ஒன்றிணையுமாறு பாப்பரசர் அழைப்பு

உயிருக்கு ஆபத்தானதும் அபாயகரமானதுமான பயணங்களை மேற்கொள்ளும் குடியேற்றவாசிகளை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகமும் ஐரோப்பாவும் தீவிரப்படுத்த வேண்டுமென பாப்பரசர் பிரான்ஸிஸ் அழைப்பு விடுத்துள்ளார். மீட்புப் பணிகளில் அதிகளவில் ஈடுபட்டுவரும் இத்தாலிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்திருக்கும் பாப்பரசர், இவ்விவகாரத்தில் பரந்தளவிலான தலையீடு அவசியமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

10 ஆயிரத்திற்கும் அதிகமான குடியேற்றவாசிகள் இத்தாலி கரையோரப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். ஆனாலும் கடந்த 20.04.2015 அன்று திங்கட்கிழமை 400 பேர் கடலில் மூழ்கிப் பலியாகியுள்ளனர். கடந்த வருடம் 1 இலட்சத்து 70 ஆயிரம் மக்கள் அபாயகரமான பயணங்கள் மூலம் இத்தாலிக்குள் நுழைந்துள்ளனர். பெரும்பாலானவர்கள் மத்திய கிழக்கு ஆபிரிக்காவில் இடம்பெறும் மோதல்கள் மற்றும் வறுமை காரணமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆனால் இந்நிலைமையில் எந்தவிதமான குறிப்பிடத்தக்களவான முன்னேற்றமும் இல்லையென ஐரோப்பிய ஒன்றியத்தின் பேச்சாளர் கூறியுள்ளார். இத்தாலியின் புதிய ஜனாதிபதி செவிர்யோ மட்டரியோவுடனான உத்தியோகபூர்வ சந்திப்பிலேயே பாப்பரசர் இத்தாலி அரசுக்கு நன்றி கூறியுள்ளார்.

தமது உயிர் அச்சுறுத்தல் காரணமாக அகதி அந்தஸ்தைக் கோரும் குடியேற்றவாசிகளுக்கு தகுந்தமுறையில் உபசரிப்பு வழங்கும் இத்தாலிக்கு பாப்பரசர் நன்றி கூறியிருந்தார். ஆனாலும் அபாயகரமான பயணங்களைத் தடுப்பதற்கு பரந்தளவிலான தலையீடு அவசியம் என்பதை பாப்பரசர் சுட்டிக்காட்டியிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. சர்வதேச மற்றும் ஐரோப்பிய மட்டத்தில் இவ்விவகாரத்தில் பூரண ஆதரவை வழங்குவதற்கான முயற்சிகளில் நாம் வெறுப்பை வெளிப்படுத்தக்கூடாது என்றும் பாப்பரசர் கூறியிருந்தார்.

# திருகோணமலையின் புதிய ஆயர் நோயல் இம்மானுவேல் அடிகளார் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள்

புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் 1960ஆம் ஆண்டு மார்கழி மாதம் 25ம் திகதி திருகோணமலையில் பிறந்தார். இவர் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் தனது ஆரம்பக்கல்வியை முடித்து அங்குள்ள புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் இணைந்தார். பின் மேற்படிப்புக்காக கண்டி தேசிய குருமடத்திற்குச் சென்று அங்கு 1978 – 1981 வரை மெய்யியலைக் கற்றார் அதனைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள புனித பவுல் குருமடத்தில் இறையியலைக் கற்றார்.

இவர் 1986ஆம் ஆண்டு வைகாசி மாதம் 21ம் திகதி திருகோணமலை புனித மரியாள் பேராலயத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இதனைத் தொடர்ந்து சில காலம் பல பங்குகளில் மறைபரப்புப் பணியை மேற்கொண்டார். பின்னர் மேற்படிப்புக்காக 2001ஆம் ஆண்டு உரோமாபுரி ஊர்பானியா பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நன்னெறியில் (Moral Theology) பட்டம் பெற்றார். அதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மறைமாவட்ட புனித மரியாள் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றினார். அதன்பின் இருதயபுரம், அக்கரைப்பற்று, அய்த்தியம்மலை ஆகிய பங்குகளில் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்தார். பின் 1993 – 1999 மறைக்கல்வி, திருவழிபாடு, வேதாகம நடுநிலையத்தின் இயக்குனராக கடமையாற்றினார். அதன்பின் 2001 – 2011 வரை கண்டி தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். தற்போது ஆயராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இவர், திருகோணமலை மறைமாவட்டத்தின் நிதியாளராகவும், அம்மறைமாவட்டத்தின் உயர்பணிக் குழுமத்தின் (Council of Consultors) அங்கத்தினராகவும் கடமையாற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு குறைந்த சம்பளம் பாப்பரசர் கண்டனம்

ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுப்பது மோசமான ஊழல் என்று புனித பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஆண்களைவிடப் பெண்களுக்குக் குறைவாகச் சம்பளம் கொடுப்பதை எல்லோரும் எப்படி ஏற்றுக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. இது நிச்சயமாக மோசமான ஊழல்தான். கிறிஸ்தவர்கள் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் சமமான அளவு சம்பளம் பெறுவதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என பாப்பரசர் தெரிவித்தார்.

# கலாஜோதி தேசிய விருது பெற்ற சகோதரிகள்





மன்னார், மடு வீதி, தம்பனைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த செல்வி ஜீவராஜி தேவராசா அவர்கள் "சாமஸ்ரீ கலாஜோதி" எனும் விருதினையும், அவருடைய சகோதரி திருமதி ஜீவராணி ரஜிகுமார் அவர்கள் "சாமஸ்ரீ தேசகீர்த்தி கலாஜோதி" எனும் விருதினையும் பெற்றுள்ளனர். அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் இவர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

அகில இன நல்லுறவு ஒன்றியமானது தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்தும்முகமாக சமய சமூக கலை கலாச்சார ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட புத்திஜீவிகளையும், வர்த்தகர்களையும் விருது வழங்கி கௌரவித்து வருகின்றது. இதன் 25வது விருது வழங்கும் விழாவானது கடந்த 18.04.2015 அன்று வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாக கௌரவ அல்ஹாஜ் றிஷாட் பதியுதீன் (கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்) அவர்களும் விசேட அதிதியாக கௌரவ அல்ஹாஜ் எம். எஸ். எஸ். அமீர் அலி அவர்களும் (சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதியமைச்சர்), சிறப்பு அதிதிகளாக கௌரவ ஏ. எல். என். மைமுனா அகமட் (முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி) மற்றும் கௌரவ அல்ஹாஜ் றிப்ஹான் பதியுதீன் (வட மாகாண சபை உறுப்பினர்) ஆகியோரும் மேலும் பலரும் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 100க்கும் மேற்பட்ட புத்திஜீவிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் விருது வழங்கி கௌரவம் அளிக்கப்பட்டது.

### செல்வி ஜீவராஜி தேவராசா அவர்கள்

முருங்கன் பரிகாரிகண்டல் அ.த.க பாடசாலை மற்றும் கட்டையடம்பன் ம. வி. போன்றவற்றின் பழைய மாணவியாவார். பள்ளிப் பருவத்திலிருந்தே நடனம், நாடகம், கூத்து, அறிவிப்பு, சிறுகதை போன்ற துறைகளில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றார். பல மேடை நிகழ்வுகளிலும், போட்டி நிகழ்வுகளிலும் கலந்து வெற்றிபெற்றுள்ளார். 2012ம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட நாடக விழாவில் கலந்து சிறந்த நடிகைக்கான தேசிய விருதினைப் பெற்றுக்கொண்டார். அத்துடன் "வேடம் தாங்கி' எனும் குறுந்திரைப்படத்தில் கதாநாயகியாகவும் நடித்துள்ளார். தற்சமயம் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வருகின்றார். நாடகத் துறையில் ஆர்வமிக்க இவர் எழுத்துத் துறையிலும் கால்பதித்துள்ளதால் இவரது சிறுவர் கதை நூல் ஒன்று மிக விரைவில் வெளியாகவுள்ளது.

கலைத்துறை மட்டுமன்றி பல சமூக சேவைகளிலும் இவர் ஆர்வம் காட்டி வருகின்றார். குறிப்பாக உளசமூகத் தலையீட்டுக்கான கற்கை நெறியினை பூர்த்திசெய்து கடந்த காலங்களில் இளைஞர்கள் சேவை மன்றம் வவுனியா காரியாலயத்தில் உளவளத் துணையாளராகவும் கடமைபுரிந்துள்ளார்.

### திருமதி ஜீவராணி ரஜிகுமார் அவர்கள்

"சாமஸ்ரீ தேசகீர்த்தி கலாஜோதி" எனும் விருதினைப் பெற்றுள்ளார். இவர் யாழ் சாவகச்சேரிப் பிரதேசத்தை பிறப்பிடமாகவும் தம்பனைக்குளம், மடுவீதி, மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியை நிறைவுசெய்து தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம், இப்ஸ் ஸ்ரீலங்கா நிறுவனத்தில் முறையே "உளவளத் துணையாளர் டிப்ளோமா", "உள சமூகத் தலையீட்டுக்கான டிப்ளோமா கற்கை நெறிகளை நிறைவுசெய்துள்ளார்.

சிறு வயதிலிருந்தே பாடல், நடனம், நாடகம், அறிவிப்பு, சிறுகதை போன்ற துறைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். தனது 10வது வயதிலிருந்தே பல மேடை நிகழ்வுகளிலும், போட்டி நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்து வருகின்றார். குறிப்பாக சக்தி தொலைக்காட்சி நடாத்திய சக்தி 'சூப்பர் ஸ்ரார்' இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் நடாத்திய 'தென்றல் சிங்கிங் ஸ்ரார்' யாழ் எவ். எம் நடாத்திய 'தங்கக் குரல் தேடல்' போன்ற நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்துள்ளார்.

இவர் மன்னார் மடு பெரியதம்பனை ம.வி., மடு கட்டையடம்பன் ம.வி, நானாட்டான் மோட்டக்கடை சிவராஜா வித்தியாலயங்களில் கர்நாடக சங்கீத ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இவர்கள் இருவரையும் மன்னா வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் இன்னும் பல சிறப்புக்களை இவர்கள் பெற இறையாசீர் வேண்டுகிறோம்.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் அல்லிராணிக் கோட்டையை பாதுகாக்க தடுப்புச் சுவர் நிர்மாணம்

மன்னார் சிலாபத்துறையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க டொரிக் மண்டபம் என அழைக்கப்படும் அல்லி இராணிக் கோட்டையினைப் பாதுகாக்கும் வகையில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன. பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்த காலப்பகுதியில் டொரிக் மண்டபம் என அழைக்கப்படும் அல்லிராணிக் கோட்டை ஆளுநர் பிரடெறிக் நோர்த்தினால் அமைக்கப்பட்டது. கடலலையின் தாக்கம் காரணமாக தற்போது இக்கோட்டை சேதமடைந்து அழிவுறும் நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில் அல்லிராணிக்கோட்டையைப் பாதுகாக்கும் நோக்கில் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் 60 மில்லியன் ரூபா செலவில் பாதுகாப்புத் தடுப்புச் சுவர்களை அமைத்து வருகின்றது.

இலங்கையின் கரையோரத்தை நிர்வகித்த முதலாவது பிரித்தானிய ஆளுநரான பிரடெறிக் நோர்த் கி.பி. 1798 முதல் 1805ஆம் ஆண்டுவரை கரையோர வர்த்தகத்தைக் கண்காணிக்கும்முகமாகவும் தமது வாசஸ்தலமாகவும் இந்த மாளிகையைப் பயன்படுத்தி வந்துள்ளார். மன்னார் அரிப்பு கடலுக்கு அருகில் உள்ள ஒரு கற்பாறையின்மேல் செங்கற்களையும் சுண்ணாம்பையும் கொண்டு மிகவும் பாதுகாப்பான முறையில் திட்டமிட்டு இது அமைக்கப்பட்டுள்ளது.

இம்மாளிகையில் நான்கு சிறிய அறைகளைக்கொண்ட கீழ்மாடி காணப்படுவதுடன் அதன் மத்திய பகுதியில் உள்ள படிக்கட்டு ஊடாக மேல் மாடிக்குச் செல்லமுடியும். மிகப்பெரிய சாப்பாட்டு அறையும், ஆளுநரின் உறங்கும் அறையும் மாடியில் அமைந்துள்ளன. இந்த மாடிக்கட்டிடத்தின் அருகில் இரு கட்டிடங்கள் காணப்பட்டுள்ளன. அவை தற்போது முற்றாக சிதைவடைந்து அத்திவாரம் மட்டுமே எஞ்சியுள்ளது.



இந்த மாளிகையின் வடிவமைப்பு பிரடெரிக் நோர்த் ஆளுநராலேயே மேற்கொள்ளப்பட்டது. பெரிய தூண்களைக் (டொரிக்) கொண்டு கிரேக்க நாட்டு நிர்மாணக் கலை அடிப்படையில் இது அமைக்கப்பட்டது.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் டொரிக் கோட்டையை மையமாக வைத்து முத்து வியாபாரமும் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போது டொரிக் மண்டபம் என இது அழைக்கப்படுகின்றது. அல்லிராணிக் கோட்டை சிதைவடைந்து பராமரிப்பற்றதாகக் காணப்பட்டநிலையில் கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் தடுப்புச் சுவர்களை அமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 39ஆவது பங்காக கட்டைக்காடு பங்கு உதயமாகியது









மன்னார் மறைமாவட்டத்தின் 39ஆவது பங்காக கட்டைக்காடு பங்கு கடந்த மே மாதம் 10ஆம் திகதி அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையின் ஆசியுடன் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அவர்களினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

அன்றைய தினம் முதல் நிகழ்வாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் மற்றும் நானாட்டான் பங்கின் பங்குத்தந்தை அருள்ராஜ் குரூஸ் அடிகளார், கட்டைக்காடு பங்கின் புதிய பங்குத்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளார் ஆகியோர் மாலை அணிவிக்கப்பட்டு பேண்ட் வாத்திய இசைக்குழுவினரால் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டனர்.

அன்றைய நாள் திருப்பலியை புதிய பங்குத்தந்தை டெஸ்மன் குலாஸ் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்க ஏனைய குருக்களும் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருப்பலி முடிவில் புதிய பங்குத்தந்தையை வரவேற்கும்முகமாக ஒருசில கலை நிகழ்வுகளும் பங்கு உதயமாகியதன் ஞாபகார்த்தமாக மரக்கன்றுகளும் குருக்களினால் நட்டு வைக்கப்பட்டன.

இப்புதிய பங்கானது நானாட்டான் பங்கின் துணை ஆலயமாக இருந்துவந்தது. இப்போது புதிய பங்காக உதயமாகி காத்தான்குளம், பாலைக்குளி, மணற்க்குளம் ஆகிய துணை ஆலயங்களைக்கொண்டு அமைந்துள்ளதுடன் இப்பங்கானது மன்னார் மறைமாவட்டத்தின் 39ஆவது பங்காகவும் முருங்கன் மறைக்கோட்டத்தின் 11 ஆவது பங்காகவும் உதயமாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தகவல்: திரு. அ. அர்ஜுன், கட்டைக்காடு.

## கற்கிடந்தகுளம் வீதிப் புனரமைப்பை அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்

மன்னார் கற்கிடந்தகுளம் கிராம பிரதான வீதியை புனரமைக்கும் பணி கடந்த மே மாதம் 01ஆம் திகதி அன்று வடமாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரனால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மன்னார் - மதவாச்சி ஏ-14 பிரதான வீதியின் கற்கிடந்தகுளம் கிராம சந்தியில் இருந்து கற்கிடந்தகுளம் தேவாலயம் வரை செல்லும் குறித்த பிரதான வீதியானது நீண்ட காலமாக புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் அவ்வீதி வழியே பயணிக்கும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலையில் கிராம மக்களின் நலனை கருத்தில்கொண்டு குறித்த வீதியைப் புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை வடமாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரன் ஆரம்பித்துவைத்தார்.

## மடுவில் சதொச கிளை திறப்பு

மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'சதொச' விற்பனை நிலையத்தை கைத்தொழில், வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் கடந்த மே மாதம் 05ஆம் திகதி திறந்துவைத்தார்.

பிரசித்திபெற்ற மடு மாதா ஆலயத்திற்கு வருகைதரும் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களது நலன் கருதியும், பிரதேச மக்களின் நன்மை கருதியும் இந்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசின்கீழ் கைத்தொழில், வணிகத்துறை அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களில் 'சதொச' நிறுவனமும் ஒன்றாகும். 100 நாள் வேலைத்திட்டத்துக்கு அமைவாக இந்த 'சதொச' நிறுவனக் கிளைகள் பதுளை, ஹாலி எல ஆகிய பல பிரதேசங்களில் திறந்துவைக்கப்பட்டன.

## வஞ்சியன்குளப் பங்கு
### மறைக்கல்வி மாணவர்களின் சுற்றுலா

வஞ்சியன்குளப் பங்குத்தந்தை அருட்பணி. ஞானாதிக்கம் அடிகளாரின் தலைமையில் 162 மறைக்கல்வி மாணவர்களும் 11 மறையாசிரியர்களும் கடந்த 14.04.2015 அன்று சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்கும் சென்றனர்.

தலைமன்னார் புனித லோரன்சியார் ஆலயம், பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம், தோட்டவெளி வேதசாட்சிகள் இராக்கினி ஆலயம், யோசவாஸ் நகர் திருஇருதய ஆண்டவர் ஆலயம், தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயம், ஆயர் இல்ல சிற்றாலயம், பள்ளிமுனை புனித லூசியா ஆலயம், தள்ளாடி புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய தேவாலயங்களைச் சென்று தரிசித்ததோடு மாணவர்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் மிகுந்த சந்தோஷத்துடனும் அன்றைய தினத்தை பக்தியுடன் செலவிட்டனர்.

தகவல்: மறைவாழ்வுப் பணியாளர் சீ. ஜெயந்தன்

## வஞ்சியன்குளம் மண்ணில் மலர்ந்த முதல் குருமணி

வஞ்சியன்குள கிராமம் நூறுவீதம் கத்தோலிக்க மக்களைக் கொண்ட கிராமம். ஆயினும் நீண்டநாள் கனவு, எதிர்பார்ப்பு, கவலை எம்மிடையே ஒரு குரு இல்லையென்று. இறைவனின் அருளால் முதல்முறையாக கிளரீசியன் சபையின் மூலமாக அருள்பணி. ச. யேசுதாசன் (டின்சன்) அடிகளாரை தனது பணிக்காக இறைவன் எம் மத்தியில் இருந்து தேர்ந்தெடுத்ததை நினைத்து கிராம மக்கள் அனைவரும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

இவர் கடந்த 08.04.2015 அன்று குருவாக திருநிலைப் - படுத்தப்பட்டார். இவர் தனது முதல்திருப்பலியை நன்றித்திருப்பலியாக வஞ்சியன்குளம் புனித இராயப்பர் ஆலயத்தில் 10.04.2015 அன்று ஒப்புக்கொடுத்தார். அன்றைய தினம் ஊரின் பிரதான வீதியின் இரு பக்கங்களும் அலங்கரிக்கப்பட்டு, மோட்டார் சைக்கிளில் புதிய குரு பவனியாக அழைத்துவரப்பட்டார். பின்னர் மாலை அணிவித்து கலாச்சார பண்பாட்டுக்கமைய கவி பாடப்பட்டது. பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்திய இசையுடன் ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார். பின்னர் தனது நன்றிப்பலியை ஒப்புக்கொடுத்தார். திருப்பலி முடிவில் சிறிய உரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அன்றைய தினம் வஞ்சியன்குளம் மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இறைவனுக்கு நன்றி கூறினார்கள்.

தகவல்: ஆலயசபை செயலாளர் சீ. ஜெயந்தன்

## வேப்பங்குளப் பங்கில் அர்த்தமுள்ள முதியோர் அர்ப்பண விழா

வேப்பங்குளம் புனித சூசையப்பர் முதியோர் சங்க, "முதியோர் அர்ப்பணிப்பு விழா" கடந்த 24.04.2015 அன்று வெள்ளி மாலை 6.30 மணிக்கு வேப்பங்குளம் புனித சூசையப்பர் திருவிழாவின் மூன்றாம் நவநாள் திருப்பலியின்போது வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

பங்குத்தந்தை லக்ஸ்ரன் டி சில்வா அடிகளாரின் வழிகாட்டலில், யேசுதாசன் (அமதி) அடிகளாரின் நெறிப்படுத்தலில் அர்த்தமுள்ள அர்ப்பண காணிக்கையாக ஊன்றுகோல், மூக்குக் கண்ணாடி, மருந்து, வேட்டி சால்வை ஆகியவை ஒப்புக்கொடுக்கப்பட்டு முதியோருக்காக செபிக்கப்பட்டதோடு அருட்பணியாளர்கள், பொதுநிலையினர் அனைவரும் முதியோரிடம் ஆசி பெற்றமை மனநெகிழ்வுதரும் நிகழ்வாக அமைந்திருந்தது. சங்க உறுப்பினர் அல்லாத முதியோரும் விழாவில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல்: முதியோர் சங்கத் தலைவர்- திரு. சு. அலேஸ்

## ஆயரின் நலம் விசாரித்தார் அமைச்சர் ரிசாட் பதியுதீன்

திடீர் சுகவீனமுற்ற நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பின் உடல்நிலை தொடர்பில் வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தேசிய மருத்துவமனைப் பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வினவியுள்ளதுடன், அவரது நலத்துக்காக தேவையான வசதிகளை செய்துகொடுக்குமாறு கேட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்ள வந்த மன்னார் மறைமாவட்ட ஆயர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தியையடுத்து அமைச்சர் ரிஷாட் பதியுதீன் கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தொடர்புகொண்டு உடல்நிலை குறித்து கேட்டறிந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

**மன்னா விநியோகஸ்தர்களே!**
**உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!**
- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினர் வசமிருக்கும் தமிழர்களின் எஞ்சிய நிலங்களையும் மீட்டுத் தாருங்கள்

## ஜனாதிபதியிடம் யாழ் ஆயர் கோரிக்கை

படையினர் வசமிருக்கும் வடக்கு, கிழக்கு தமிழர்களின் எஞ்சிய நிலங்களையும் உரியவர்களிடம் மீளக்கையளிக்க வேண்டுமென்று ஜனாதிபதியிடம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கேட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நாட்டிலுள்ள அனைத்து ஆயர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இந்தச் சந்திப்பின்போதே யாழ். ஆயர் இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வருடத்துக்கான முதலாவது ஆயர் பேரவைக் கூட்டம் கண்டியில் இடம்பெற்றிருந்தது. அதன்பின்னர் இலங்கை ஆயர்கள் ஜனாதிபதியை கொழும்பில் அவரது வாசஸ்தலத்தில் சந்தித்திருந்தனர். இச்சந்திப்பின்போது 19ஆவது திருத்தச் சட்டமூலம் அமுலாக்கப்படவேண்டியதன் அவசியம்பற்றி ஆயர் பேரவையால் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை சந்தித்து உரையாடினார். அப்போது யாழ். ஆயர் ஜனாதிபதியிடம் தனது வேண்டுகோளை முன்வைத்தார்.

"வடக்கு, கிழக்கு மக்களின் அதிகப்படியான வாக்குகளினால் நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு பெருமகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ் மக்கள் ஒரு அரசியல் தீர்வை எதிர்பார்த்திருக்கின்றனர். அதற்கான செயற்பாடுகளை நாம் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். இது மிகவும் சவால்கள் நிறைந்த, கஷ்டமான பணியாயினும் நீங்கள் அதை உறுதியுடன் செயற்படுத்துவீர்கள் என நம்பியிருக்கின்றோம்.



இத்தருணத்தில், அரசினாலும் இராணுவத்தினாலும் கைப்பற்றபட்ட தமிழர் நிலங்களை மீள்கையளிப்பதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சியை மனதாரப் பாராட்டுகின்றேன். மக்களும் மிகமகிழ்வுடன் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்வதைப் பார்த்து சந்தோஷம் அடைகின்றேன். தமது சொந்த மண்ணில் குடியமர்வது அவர்களது வாழ்வில் நிறைவான மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. ஆயிரம் ஏக்கர் கையளிக்கும் செயற்றிட்டத்தைக் தொடர்ந்து மேலும் எஞ்சிய வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர் சொந்த நிலங்களை விரைவில் விடுவிக்க ஆவனசெய்யுமாறு உங்களிடம் தயவாக வேண்டுகின்றேன்" எனக் கேட்டிருந்தார்.

ஆயரின் வேண்டுதலை அவதானமாகக் கேட்டறிந்த ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பாக ஆவனசெய்வதாக ஆயருக்கு உறுதிமொழி வழங்கியதாக யாழ் ஆயர் இல்லம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# புதிய அரசின் நல்லெண்ணத்தை புலம்பெயர் தமிழர் தரப்பு மதிக்க வேண்டும் தொடர்ந்தும் நாங்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்க முடியாது

## உலகத் தமிழர் பேரவைத் தலைவர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் அறிவுறுத்தல்

இலங்கையில் போர் முடிந்து 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்திவரும் புதிய ஜனாதிபதியின் அரசாங்கத்துடன் தொடர்புகளை பேணத் தயாராக இருப்பதாக உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் வெளிப்படுத்துகின்ற நல்லெண்ண சமிக்ஞைகளுக்கு புலம்பெயர் தமிழர் தரப்பு மதிப்பளிக்க வேண்டும் என்றும் 'மற்றவர்களின் நல்லெண்ண நடவடிக்கைகளை மதிக்காமல் தொடர்ந்தும் நாங்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருக்க முடியாது' என்றும் அருட்தந்தை இம்மானுவேல் அடிகளார் தெரிவித்தார்.

இலங்கையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகமான உள்ளக விசாரணை நடத்துவதாக அளித்துள்ள உறுதிமொழிக்காக இலங்கை அரசாங்கத்துக்கு காலஅவகாசம் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.



# வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண சர்வமத அமைப்பு வேண்டும்

## முஸ்லிம் பிரஜைகள் குழு அங்குரார்ப்பண விழாவில் மன்னார் ஆயர்

தனி அமைப்பாக இருந்து நாம் செயற்படுவதைவிட அனைவரும் ஒரு குடையின்கீழ் இருந்து செயற்பட்டால் மக்களின் துன்பங்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வழிபிறக்கும். இந்த வகையில் வடமாகாணத்தில் சர்வமத அமைப்பொன்று உருவாக வேண்டும் என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த 10.04.2015 அன்று வட மாகாண மஜ்லிஸ் உலமா அமைப்பின் தலைவர் மௌலவி எம்.ஏ.எம். முபாரக் தலைமையில் மன்னாரில் வடமாகாண முஸ்லிம்களின் பிரஜைகள் குழு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பிரஜைகள் குழுவின் அலுவலகத்தை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் கூறுகையில், வட மாகாணத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் பேசும் மக்கள் திட்டமிட்டு மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. நாம்தான் ஒன்றிணைந்து நம்மை பலப்படுத்திக்கொள்ள வேண்டும். எமது உரிமைகளை நாமே கேட்டுப்பெறவேண்டிய நிலையில் உள்ளோம். இந்த மாவட்டத்தில் வாழும் அனைத்து இஸ்லாமிய சகோதரர்களும் ஒன்றிணைந்து தங்கள் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைக்காண முன்வரவேண்டும். போரினால் பாதிக்கப்பட்டு பல இழப்புகளை சந்தித்தவர்களின் மீள்கட்டுமானச் செயற்பாடுகளுக்கு இவ்வமைப்பு உதவும் என நம்பலாம்.



இஸ்லாமிய மக்கள் மத்தியில் மிகுந்த ஒற்றுமை காணப்படுகின்றது. எம்மைச் சூழ்ந்துள்ள சமூகம் நன்றாக வாழவேண்டும் என்ற அவா இருக்கின்றது. இலங்கை மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்ற நல்ல பண்பை அவர்கள் கொண்டுள்ளனர். குறிப்பாக நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்கள் அயல் வீட்டில் முஸ்லிம் தாயொருவர் இருந்தார். இவர் எங்கள் குடும்பங்களுடன் அந்நியோன்னியமாக வாழ்ந்துவந்தார். இஸ்லாமிய மக்கள் எமது தாய் மொழியுடன் இணைக்கப்பட்டவர்கள். இஸ்லாமிய மதமும் கத்தோலிக்க மதமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

# அருட்சகோதரி ஹெலன் அவர்களுக்கு மனித உரிமைக்கான விருது



மனித உரிமைக்கான துறவிகள் அருட்பணியாளர் அமைப்பின் 2015ஆம் வருடத்திற்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா கடந்த பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி கண்டி மனித உரிமைத் தலைமைக் காரியாலயத்தில் இந்த அமைப்பின் இயக்குனர் அருட்பணியாளர் நந்தன மனத்துங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவின்போது இறைமீட்பர் சபை அருட்சகோதரியும், மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலையைப் பிறப்பிடமாகக்கொண்டவருமான அருட்சகோதரி டொமினிக் ஹெலன் லெம்பேட் அவர்கள் மனித உரிமைக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவ்விழாவில் கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. ரெறன்ஸ் பெர்ணாண்டோ அவர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவின் முதன்மை விருந்தினராக கண்டி ஆயர் மேதகு வியானி பெர்ணாண்டோ ஆண்டகையும், சிறப்பு விருந்தினராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி P. B வறாவெவ அவர்களும் கலந்துகொண்டார்கள்.

வங்காலையைப் பிறப்பிடமாகக்கொண்ட அருட்சகோதரி ஹெலன் 1971 மே மாதம் 31ஆம் திகதி இறைமீட்பர் சபையில் வாக்குத்தத்தம் செய்து இறைத்திட்டத்திற்குச் சரணடைந்தார். "உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய யேசுக்கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு" (யோவான் - 17:3) என்னும் இறைவார்த்தையில் கட்டியெழுப்பப்பட்ட தம் சபையின் அருங்கொடையை (Charism) சிரமேற்கொண்டவராய் சபையின் முக்கிய பண்புகளாகிய உலகளாவிய நோக்கு (Universality), எப்போதும் எங்கும் மக்களுக்குப் பணிசெய்யும் மனநிலை, எளிமை ஆகியவற்றால் ஆட்கொள்ளப்பட்டவராய், தம் சபை ஸ்தாபகரினதும் மூத்த அருட்சகோதரிகளிலும் எடுத்துக்காடான சாட்சிநிறைந்த வாழ்க்கையால் ஈர்க்கப்பட்டவராய், எங்கெங்கே இறைவன் தம்மைப் பணிசெய்ய அனுப்பினாரோ அந்த இடங்களில் எல்லாம் காலத்தின் தேவைகளுக்கேற்ப பலதரப்பட்ட பணிகளை ஆழ்ந்த அர்ப்பணத்துடன் செய்தவர்.

இவர் பணித்தளங்களென கண்டியில் மறைக்கல்வி நடுநிலையம், பேராலய அலுவலகம், சமூக பொருளாதார நிலையம், றாகம தியகல மாணவர் இல்லம் (Boys Town) ஆகிய இடங்களில் பலவித பணிகளில் ஈடுபட்ட இவர், மருதானை, கொட்டாஞ்சேனை புனித சூசையப்பர் ஆண்கள் கல்லூரியிலும், நல்லாயன் மகளிர் கல்லூரியிலும் ஆசிரியராகவும், கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர் கல்லூரியில் துணை அதிபராகவும், மாம்புரி இசுறு பாடசாலை, முந்தல், நாவற்காடு கட்டைக்காடு மகாவித்தியாலங்களில் அதிபராகவும் 32 வருடங்கள் கல்விச் சேவையில் பணியாற்றியுள்ளார்.

பாக்கிஸ்தானில் 3 வருடங்கள் கல்விச் சேவையும், மறைபோதகப் பணியும் புரிந்துள்ளார். பணியாற்றிய இடமெல்லாம் பாடசாலைப் பணியுடன் மட்டும் தன்சேவையை மட்டுப்படுத்தாது சமூகத்தில் தாழ்த்தப்பட்டோர், ஓரங்கட்டப்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், புறந்தள்ளப்பட்டோர், அனாதைகள், விதவைகள், கைவிடப்பட்டோர் ஆகியோர் மனித மாண்புடன் வாழவேண்டுமென்று தன் சௌகரியம் துறந்து முழுமூச்சுடன் உழைத்த ஒரு அருட்சகோதரியாக விளங்கினார்.

1990 தொடக்கம் உள்நாட்டுப் போரில் மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழ்ந்த காலங்களில் அவர்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பணியில் நிவாரண சேவையில் செயற்பட்ட குழுக்களுடன் தானும் சேர்ந்து துணிவுடன் செயற்பட்டார். யுத்தத்தின் உச்சக்கட்டத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும், ஊனமுற்றோரின் பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் பலவித பணிகளை ஆற்றியுள்ளார்.

தற்போது மன்னார் மறைமாவட்டத்தில் இலுப்பைக்குளம் கிராமத்தில் அமைந்திருக்கும் இறைமீட்பர் சிறுவர் இல்லம் நம்பிக்கையின் இல்லமாக விளங்க, இறைமீட்பர் அருட்சகோதரிகளுடன் கரங்கோர்த்துத் தம் பணியைத் தொடருகின்றார். பணித்தளத்தில் ஈடுபட்டபோதும், தம் சபைப் பொறுப்புக்களிலும் நம்பிக்கைக்குரியவராக, பொறுப்புணர்வுமிக்கவராக, ஆர்வம் உள்ளவராகச் செயலாற்றுகின்றார். மாகாண நிர்வாகக்குழு அங்கத்தவராகவும், பல தடவைகள் இல்லத்தலைவியாகவும் பணிபுரிந்துள்ளார். தொடர்ந்தும் எந்தவேளையிலும், எதற்கும் தயார் நிலையில் இருக்கும் தியாகம் நிறைந்த அவரது திறந்த மனம் மெச்சத்தக்கது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# மறப்பதென்பது கடினமான, முடியாத காரியம்! ஆனால் மன்னிப்பது சாத்தியமானது! அவசியமானது!

### மே 18 நினைவேந்தல் பற்றி அருட்பணி . கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகள்

இலங்கையில் போர் முடிவுற்றதை நினைவுகூரல்பற்றி உலகத் தமிழர் பேரவைத் தலைவர் அருட்பணி. கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் அடிகள் கொழும்பு ரெலிகிராவ் (Colombo Telegraph) என்ற பத்திரிகைக்கு எழுதிய "யதார்த்தமும், உண்மையும், நீதியும்தான் எம்மை சமாதானத்தை நோக்கி வழிநடத்தும்" (Only Realism, Truth and Justice can lead us to Peace) என்ற கட்டுரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இக்கட்டுரையில் அவர் மேலும் தெரிவிப்பதாவது:

இவ்வருடம் மே மாதம் 18ம் திகதி இலங்கைவாழ் சிங்கள, தமிழ் மக்களின் உறவு வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் நாளாக நினைவுகூரப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற போரின் முடிவானது இரண்டு சாராருக்கும் முற்றிலும் வேறுபட்ட கருத்தையும், தத்தம் செயல்களை நியாயப்படுத்தும் நிலையையுமே உருவாக்கியது. அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இது தமிழ்ப் பயங்கரவாதத்துக்கெதிரான வெற்றியாகவும், ஒரு போரின் முடிவும் ஒரு அமைதியின் ஆரம்பமுமாகக் கருதப்பட்டது.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அந்த நாள் போராளிகளினதும் பொது மக்களினதும் ஒரு பிரமாண்டமான படுகொலைகளின் உச்சமாகவும், சிறைவாசம், இராணுவமயமாக்கல், காணிகள் சுவீகரிப்பு, காணாமல்போதல் ஆகியவற்றின் ஆரம்பமாகவும் கருதப்பட்டது. அதாவது, ஒரே யதார்த்தம் இரண்டு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களுக்கும் விளைவுகளுக்கும் வித்திட்டது.

மே 18 எம் மனங்களில் ஆழமாகப் பதிக்கப்பட்ட ஒரு நினைவாகவே இருக்கும். குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்கள், விதவைகள், அனாதைகள், பலியான படையினரின், போராளிகளின், பொதுமக்களின் உறவுகள் ஆகியோருக்கு இந்நாள் பெரும் வேதனைக்குரிய நாளாகும். எனவே, பின்வரும் விடயங்களில் ஒன்றுபட்டு உழைப்பது எல்லாத் தலைவர்களுக்குமான புனித கடமையாகும்.

- போருக்குப் பிந்திய காலத்தில் அரசாங்கத்தினாலும் படையினராலும் பாதிக்கப்பட்டு இன்னும் துன்பவேதனைப்பட்டுக்



கொண்டிருக்கும் மக்களின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்ய ஆவன செய்தல்.

- கடந்த ஆறு தசாப்த முரண்பாடுகள் நிறைந்த மற்றும் போர்க் காலங்களில் நாடு கொண்டிருந்த குறிக்கோள்கள், கட்டமைப்புக்களில் துணிச்சலோடு அடிப்படையான மாற்றங்களைக் கொண்டுவருதல்.

- இலங்கை மக்கள் எல்லாருக்கும் சமத்துவமான விதத்தில் திடமான அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புக்களை உருவாக்கி, எதிர்காலத்தில் புரட்சிகள் ஏற்படாவண்ணம் தடுத்தல். எல்லாத் தலைமைத்துவங்களுக்கும் இடையிலான நன்மையை நோக்கிய ஒரு இறுக்கமான உடனுழைப்புத்தான் ஒன்றுக்கொன்று முரணான நினைவுகூரல்களைத் தவிர்த்து, ஒரு ஒத்திசைவான சமாதான நிலையை நோக்கி எம் நாட்டை வழிநடத்தும்.

## பெரும் வரவேற்பை பெற்ற 'வாழ்வு தந்த வாஸ்' நாடகம்



கடந்த மே மாதம் 9ம், 10ம் திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் மன்ற அரங்கில் மேடையேற்றப்பட்ட "வாழ்வு தந்த வாஸ்" என்ற புனித யோசப்வாஸ் அடிகள் பற்றிய நாடகம் பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டது. இந்நாடகம் மன்ற இயக்குனர் அருட்பணி. கலாநிதி என். எம். சவிரிமுத்து அடிகளாரின் வழிநடத்தலில் துணை இயக்குனர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்களால் எழுதி இயக்கப்பட்டது.

புனித யோசப்வாஸ் அடிகள் யாழ்ப்பாணத்தில் ஆற்றிய பணிகளை மையமாக வைத்துத் தயாரிக்கப்பட்ட இந்நாடகம் புனிதருடைய காலத்தில் விசுவாசத்துக்காகத் தங்கள் உயிர்களை அர்ப்பணித்த யாழ்ப்பாண வேதசாட்சிகளின் கதையை மிகவும் தத்ரூபமாக சித்தரிக்கின்றது. மிகவும் அனுபவமிக்க கைதேர்ந்த கலைஞர்களின் பங்களிப்பில் இந்நாடகம் உருவாக்கப்பட்டதால் சிறப்பான, இயல்பான நடிப்பிற்கோ, அழகிய இயற்கையான மேடை அமைப்பிற்கோ, மனதை நெருடும் பொருத்தமான இசைக்கோ, கை கொடுக்கும் ஒலி, ஒளி அமைப்பிற்கோ பஞ்சமில்லை என்று கூறலாம்.

இப்படியான எல்லாத் துறைகளிலும் மிக உயர்ந்த தரத்தோடு ஒரு தமிழ் நாடகத்தை மேடையேற்றும் வல்லமை இன்று இலங்கையில் திருமறைக் கலாமன்றத்திற்கே உண்டு என்ற உண்மையை "வாழ்வு தந்த வாஸ்" மீண்டுமாக ஆமோதித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ஏழு புதிய குருக்கள் திருநிலைப்படுத்தப்பட்டனர்

கடந்த 28.05.2015 அன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்ற திருச்சடங்குத் திருப்பலியில் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 6 அருட்சகோதரர்களும், அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த ஒரு அருட்சகோதரரும் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

ஊறணியைச் சொந்த இடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சகோதரன் யூகின் செல்வ சதிதரன், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் செபமாலை செபஜீவன், அருட்சகோதரன் ஜோன் றெக்சன், மயிலிட்டியைச் சொந்த இடமாகவும் மானிப்பாயைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட அருட்சகோதரன் ஆபிரகாம் ஸ்கரன்ராஸ், போயிட்டி புனித றீற்றம்மாள் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் செபமாலை சுதர்சன், புலோப்பளை புனித பேதுரு ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் பிரான்சிஸ் டினேஷன், இளவாலை புனித இயாகப்பர் ஆலயத்தைச் சேர்ந்தவரும் அமலமரித்தியாகிகள் சபை அருட்சகோதரனுமாகிய லூக்காஸ் றெஜினியூட் அவலின் ஆகியோரே திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அமலமரித்தியாகிகள் சபை அருட்சகோதரன் லூ. அவலின் மெய்யியல் கல்வியை கண்டி அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் இறையியல் கல்வியை கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் கற்றார். ஏனைய அருட்சகோதரர்கள் தமது மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் கற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தோலகட்டி செபமாலைத் தாசர் சபை அருட்சகோதரிகள் மடம் சிரமதானம்

வயாவிளான் கிழக்குப் பகுதியில் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரிவில் அமைந்துள்ள தோலகட்டி செபமாலைத்தாசர் சபையின் அருட்சகோதரிகளுக்கான மடத்தைத் துப்பரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பெரிய பற்றைக்காடுகளால் சூழப்பட்ட கட்டடங்கள் பல கூரைகளின்றிக் காணப்படுகின்றன. அந்தப் பகுதிகளில் செபமாலைத்தாசர் சபையின் கன்னியாஸ்திரிகளுக்கான புனித சூசையப்பர் மடம் 1990ஆம் ஆண்டுவரை இயங்கிவந்தது.

அந்தப்பகுதியில் திருப்பலிகளுக்குப் பயன்படுத்தப்படும் திராட்சை இரசம், அப்பம் மற்றும் நெல்லிரசம் என்பன உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. நுழைவாயிலில் பொருத்தப்பட்டிருந்த பெயர் பொறித்த கல் மட்டும் சேதமின்றிக் காணப்படுகின்றது. தற்போது குறித்த கன்னியா மடம் அச்சுவேலிப் பகுதியில் உள்ள அமலிவனத்தில் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

## திருமறைக் கலாமன்றத்தின் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்'



யாழ் நகரில் கடந்த 50 வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைபெறும் தவக்கால திருப்பாடுகளின் காட்சியின் ஒரு வடிவம்தான் இம்முறை அன்பில் மலர்ந்த அமரகாவியமாக அரங்கேறியது. யாழ் நகரில் இடம்பெறுகின்ற ஒரேயொரு பெருங்காட்சிப்படுத்தல் அரங்கு இது ஒன்றே எனின் வியப்பன்று. பிரமாண்டமான மேடை, அங்கே உயர்ந்த கோபுரங்கள், மலைப் பாறைகள், அங்கும் இங்குமாக உரோமானியப் போர் வீரர்கள், இஸ்ரவேலில் நிற்பது போன்ற ஒரு பிரமை. மேடையோடு பார்வையாளர்களை ஒன்றிக்கவைத்த கலைத்திறன் பாராட்டத்தக்கது. ஓம்! என்ற ஓங்கார ஒலியுடன் ஆரம்பமாகும் காட்சி பக்தர்களான பார்வையாளர்களை முற்றிலும் பக்திப் பரவசத்திற்கு அழைத்துச்சென்றது. ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்தவுடன் அருணகிரிநாதரின் திருப்புகழை ஒட்டிய பாடல் வரிகள் நம்மைத் திடுக்கிட வைக்கிறது.

வழக்கம்போலவே இயேசுவின் பிறப்பு, பாடுகள், இறுதி யாத்திரை, இறப்பு என காட்சிகள் நகர்ந்துகொண்டிருந்தன. அன்றைய 'பலிக்களத்தில்' இருந்து இன்றைய 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' வரை இதன் எழுத்து நடையும் கருத்துப் பரிமாற்றங்களும், காட்சிப்படுத்தலும் அதிவேக உலகின் நடப்பியல் சிந்தனை மாற்றத்தினை உள்வாங்கியதாக அமைந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. ஆசிரியரின் ஆரம்பகால அன்றைய நடையே உள்ளத்தில் பதியக்கூடியதும், பக்திக்கு சிறந்ததும் என்றனர் சிலர். இல்லை இல்லை கால ஓட்டத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றங்கள் வேண்டியவைதான் என்றனர் இன்னும் சிலர். பக்திச்சுவையே இங்கு முக்கியம் என்றும் அரங்கியல் நுட்பமோ, அன்றேல் ஏனைய சுவைகளோ முக்கியம் அல்ல என்று விவாதிப்பவரும் உளர். எது எவ்வாறிருப்பினும் பக்திச் சுவை குன்றாமலும் பிரமாண்டமான காட்சி விதானத்துடனும் அரங்கியல் நுட்பத்துடனும் திருமறைக் கலாமன்றத்தின் தனித்துவ நாடக அனுபவத்தை பறைசாற்றும் ஒரு அளிக்கையாக இது இருந்தது உண்மை.

ஆனாலும்கூட மரிய சேவியர் அடிகளாரின் அன்றைய மொழிநடையில் உள்ளம் பறிகொடுத்து பரவசமானவர்களில் பழையவர்கள் தொட்டு இன்றைய இளைஞர்கள்வரை ஏராளமானவர்கள் உளர் என்பதையும் அந்த மொழி நடை இன்றுவரை வாழ்கின்றது என்பதனையும் நாம் உறுதியாகக் கூறமுடியும். இந்த அளிக்கையில் பெரும்பாலான பார்வையாளர்கள் பக்தர்கள் என்றும் அவர்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்த வேண்டுமே ஒழிய அரங்கியல் வித்தகர்களை அல்ல, அதற்கு வேறு அரங்கு உண்டு என்று விவாதிப்போரும் உளர்.

இனி திருப்பாடுகளின் காட்சிக்கு வருவோம். ஜாதியின் பெயரால் இன்னும் பாகுபாடு புரையோடிக்கொண்டிருக்கும் இந்த மண்ணில் சமாரியப் பெண்ணின் காட்சி நம்மைச் சிந்திக்க வைக்கின்றது என்னவோ உண்மைதான். கைப்பாஸ், அன்னாஸ் வருகையும், சதித்திட்ட கலந்துரையாடலும் இயேசுவைக் கைதுசெய்து விசாரிக்கும் காட்சியும் நாடகத்தை களைகட்ட வைக்கிறது. என்றுமே கேட்கும் அந்த வசன நடையில் ஏதோ ஒரு வசீகரம். கற்றூணில் கட்டி அடிக்கும் காட்சி நிச்சயம் வேண்டிய ஒன்றுதான். ஆனால் இவ்வளவு தூரம் நீண்டிருக்கத் தேவையில்லை. நேரம் நீண்டமை காட்சியோடு நமது ஒன்றிப்பை கலைத்துவிட்டது. இயேசுவின் இறுதி யாத்திரையில் வரும் பாடல் ஒன்று மனதைத் தொடுகின்றது. அதில் வரும் 'என்பினையும் ஈதல் திருவள்ளுவத்தின் பாங்கோ' என்ற வரிகளில் ஒரு இலக்கிய நயம் மிளிர்கின்றது. மாமரித் தாயின் புலம்பல் உண்மையிலேயே எமது நெஞ்சாங்கூட்டை நெருடுகின்றது. இறுதிக் காட்சியான உயிர்ப்பில் வருகின்ற ஆசிரியரின் பாடல் வரிகள்பற்றி சிறிது நயத்துடன் பேசித்தான் ஆகவேண்டும். சுவர்க்கத்தில்தான் அமரர் வாழ்வர். அவர்கள் இறைமகன் இயேசுவின் உயிர்ப்பைக் கண்டு தங்களை மறந்து ஆடுவார்களாம, அந்நேரம் பூலோகத்தில் வாழும அசுரர்கள் பயந்து ஓடுவார்களாம, உயிர்ப்பின் மகிமையை இசையில் பாட விரும்பிய பாணர்கள், யாழினை நாடித் தேடுவார்களாம். "நான் மறை போற்றவும, நானிலம் வாழ்த்தவும், நாயகன் எழுந்தனன்" என்றும் அதனை ஆடலும் பாடலும் இணைந்த நாடகமாக அமரகாவியம் பாடிடுவோம் என்ற ஆசிரியரின் ஆழ்ந்த தமிழ்ப புலமையில் எழுந்த இக்கவிதையின் கற்பனை நயத்தினைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இசை பிரமாதம், அதுவும் பின்னணி இசை மிகப் பிரமாதம். பிரமாண்டமான காட்சிக்கு மெருகேற்றியது இசை என்றே கூறலாம். இது 'பென்கர்' எனும் ஆங்கிலப்படத்தை நினைவூட்டியது. இவ் அளிக்கையில் பழமையும் புதுமையும் கலந்திருந்தாலும், இசை முற்றிலும் புதுமையாகவே இருந்தது. Amazing!

திடீரென என் பேனா நகர மறுக்கிறதே ஏன்? உலகை மீட்க மனிதப் பிறவி எடுத்து இந்த உலகையே ஆட்கொண்ட இறைமகனின் உண்மைக் கதைக்கு ஒரு விமர்சனமா? கடவுளுக்கும் கல்லறையா? கல்லறைக்கும் காவலா?

தகவல்: லக்சிகா ஜெயசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பண வாழ்வு ஆண்டு

## மாதம் ரு துறவற சபையைப்பற்றி அறிந்துகொள்வோம்

**மன்னார் மறைமாவட்டத்தில் பணிபுரிம் வ்வொரு துறவற சபைகள் பற்றிய விரிவான கட்டுரை வ்வொரு மாத மன்னாவிலும் இடம்பெறும்.**

### ஆசியாவின் அதிசயமான சுடர்விடும் விண்மீனாக உதித்த தவத்திரு தோமஸ் அடிகளாரால் நிறுவப்பட்ட

# செபமாலைக் கன்னியர் தியானயோக சபை

செபமாலைத் தாசர் தியானயோக துறவற சபையை ஆரம்பித்த தவத்திரு தோமஸ் (அமதி) அடிகளார் 07.03.1886ஆம் ஆண்டு யாழ் நகரில் பாண்டியன்தாழ்வு என்ற சிற்றூரில் பிறந்தார். பிறந்த அன்றே இவர் இறந்துவிடுவாரோ என்ற அச்சத்தில் பிறந்த அன்றே இவருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது.

இவர் சிறு வயதில் இருந்தே பலவீனமான ஒரு வியாதிக்காரனாக இருந்தபோதும் இறைவன் இவரைத் தம் திட்டம் நிறைவேறப் பயன்படுத்தப்போகிறார் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. ஆனால் இறைவன் தம் திட்டத்தின்படி உலகம் சிறிதாகவும் வலுவற்றதாகவும் கருதுவதைத் தேர்ந்தெடுத்து தம் வல்லமையையும் மகிமையையும் விளங்கவைக்கிறார். அவ்வண்ணம் இறைவன் இவரைத் தன் திராட்சைத் தோட்டத்தில் மகத்தான பணிபுரிய அழைத்தார். இவர் இறைவனின் குருவாக முடிவெடுக்கும்போது பல திசைகளில் இருந்து எதிர்ப்புக்கள் தோன்றினாலும் இறைவன் வகுத்த திட்டப்படி மன உறுதியுடன் அமலமரித் தியாகிகளின் சபையில் இணைந்து குருத்துவக் கல்வியை திறம்பட முடித்து 06.01.1912இல் இறைவனின் புனித குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவரது உடல்நலக் குறைவு காரணமாய் கடின பணிகொடுக்க முடியாமையால் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

இந்தக் காலத்தில்தான் அதாவது புனித பத்திரிசியார் கல்லூரியில் பணிபுரிந்துகொண்டிருக்கும்போது பெல்ஜியம் நாட்டில் இருந்து வருகைதந்து கல்விப்பணியாற்றிக்கொண்டிருந்த அருட்திரு கியோமர் (அமதி) அடிகளாருக்கும் தவத்திரு தோமஸ் அடிகளாருக்கும் நல்ல நட்பு உருவாகியது. இவர்கள் தம் ஓய்வு நேரங்களில் நட்போடு உரையாடுவது வழக்கம். இவர்கள் இருவரும் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட நல்ல பணியாளர்களாகவும், அமலமரியன்னையின் அன்புப் பிள்ளைகளாகவும் இருந்ததால் இவர்களின் பெரும்பாலான உரையாடல்கள் இறைவனைப்பற்றியதாயும் அவருடைய அரசு எவ்வாறு இந்த உலகம் முழுவதும் பரப்பப்பட வேண்டும் என்பது பற்றியும் அமைந்திருந்தது. உலக நாடுகள் மனம்மாற வேண்டும் என்ற மரியன்னையின் வேண்டுகோளை மனதில் கொண்டு இலங்கை இந்தியாவின் மனமாற்றத்திற்காக இடைவிடாது செபிக்கும் தியானயோக துறவற சபைகள் ஆசியாவில் தோற்றம்பெறவேண்டியது காலத்தின் கட்டாயத் தேவை எனவும் உணர்ந்திருந்தார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில்தான் அருட்தந்தை கியோமர் அடிகளார் யாழ் மறைமாவட்ட ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார். ஒரு முற்போக்குச் சிந்தனையாளரான இவரும் தவத்திரு தோமஸ் அடிகளாரும் அன்று எம் நாட்டில் நிலவிய ஆன்மீக, சமுதாய பொருளாதார சீர்கேடுகளை செபதபத்தினால் மாத்திரமே மாற்றியமைக்க முடியும் என அறிந்திருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் அன்றைய திருத்தந்தை 11ஆம் பத்திநாதர் ஒரு சுற்றுமடல் மூலம் மறைபரப்பு நாடுகளில் தியானயோகிகளின் இடைவிடாத செபதபத்தினால் மாத்திரமே இறையரசைப் பரப்பும் பணியாளர்களின் அயராத உழைப்பு பயன்கொடுக்கும் எனக் குறிப்பிட்டிருந்தார். திருத்தந்தை, யாழ் ஆயர், தந்தை தோமஸ் அடிகளார் ஆகிய இந்த மூன்று இறையடியார்களையும் ஒரே ஆவியானவர் ஒரே நேரத்தில் ஆட்கொண்டு செயற்பட்டார் என்று கூறினால் மிகையாகாது.

இந்தச் சுற்றுமடலுக்கு செயலுருவம் கொடுக்கக்கூடியவர் தவத்திரு தோமஸ் அடிகளாரே என்ற உறுதிப்பாட்டுடன் இவ்வாறான தியானயோக சபைகள் எம் நாட்டில் உருவாக வேண்டும் என்ற ஆவலுடன் செபித்துக்கொண்டிருந்தவரையே அதனை உருவாக்கும்படி இறையாணை பிறப்பிக்கப்பட்டது. இம்மாபெரும் பணியையும் அதன்பின் மறைந்திருக்கும் சிக்கல்களையும் சீர்தூக்கிப்பார்த்ததாலும் தனது உடல்நிலையை நினைத்துக்கொண்டதாலும் தந்தை தோமஸ் அடிகளாருக்கு இப்பணியை ஏற்றுக்கொள்ள சிறிது தயக்கம் இருந்தாலும் தன்மட்டில் ஆயர் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கை அடிகளாரை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக்கொள்ளவைத்தது.

தந்தை தோமஸ் அடிகளார் மரியன்னையைப்போன்று, "இதோ ஆண்டவரின் அடிமை, உமது வாக்கின்படியே ஆகட்டும்" என்ற மனநிலையில் தன்னை இறைவனிடம் சரணாகதியாக்கி 'தாழ்ச்சி' என்னும் ஆழமான கற்பாறையில் தியானயோக வாழ்வு என்னும் அழகிய கட்டிடத்தை கட்டத்தொடங்கினார். இதற்காக தோலகட்டி என்னும் கற்பூமியை ஆயர் கொடுத்தார். ஆறு இளைஞர்களுடன் ஆரம்பித்த இந்தச் சின்னஞ்சிறிய தியானயோக துறவற சபை சிறுதுளி பெருவெள்ளம்போல் வளரத் தொடங்கியது. வளர்ச்சியைத் தடுத்த பல்லாயிரம் தடைகள் எதிர்ப்புக்கள் பின்னடைவுகள் அனைத்தையும் செபம் என்னும் ஒரே ஒரு ஆயுதம் கொண்டு தகர்த்தெறிந்து அது ஆல்போல் தழைத்து வளர்ந்து இலங்கை இந்தியாவில் மட்டுமல்ல கனடா வரை பரவியுள்ளது ஆண்களுக்கான செபமாலைத்தாசர் சபை.

20 வருடங்களின்பின் செபமாலைக் கன்னியருக்கான சபை தந்தை தோமஸ் அடிகளாரால் 1948ம் ஆண்டு ஒரு திருக்குடும்பச்சபையைச் சேர்ந்த ஒரு அருட்சகோதரியின் துணையுடன் ஆரம்பிக்கப்பட்டது. அன்னை மரியாள் லூர்து, பத்திமா போன்ற திருத்தலங்களில் ஏழைச்சிறுவர்கள் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க செபம் தபம் செய்து, செபமாலையை மிகவும் சக்திவாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்தி, உலகில் வாழும் சகோதர சகோதரிகளின் பாவங்களுக்காகத் தன்னையே தொடர் பலியாக ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கும் இறைமகன் இயேசுவுடன் இணைந்து இந்தச் செபமாலைக் கன்னியர்கள் பரிகாரம் செய்கின்றார்கள்.

நசரேத்தில் திருக்குடும்பம் வாழ்ந்து காட்டிய தாழ்மையான மறைந்த மௌன தியானயோக வாழ்வை அன்னை மரியாவுடன் இணைந்து, இரவுபகலாக நற்கருணைநாதர்முன் ஆராதனை செலுத்திக்கொண்டு விண்ணக வாழ்வை இம்மண்ணகத்தில் வாழ்ந்து திருச்சபைக்கு வலிமையாகவும், உந்துசக்தியாகவும் இருந்து தமது பங்களிப்பைச் செய்கின்றார்கள்.

எம் மக்கள் உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் தம் தேவைகளில் அதாவது வியாதி வருத்தங்கள், கஸ்டங்கள் குடும்பப் பிரச்சினைகள், கடன் தொல்லைகள் போன்ற தேவைகளில் எல்லாம் இச்சகோதரிகளின் செபஉதவியை நாடுகின்றனர். தமது தொடர் பரிந்துரைச் செபங்களின் மூலம் இத்தேவைகளை எல்லாம் இச்சகோதரிகள் நற்கருணைநாதரிடமிருந்து பெற்றுக்கொடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். இதுவே இவர்களின் தலைசிறந்த அப்போஸ்தலப்பணியாக இருக்கின்றது.

எமது நாட்டிலே ஏற்படுத்தப்பட்ட முதல் தியானயோக சபை என்பதால் இது நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் இறைவன் செய்த பெரும் கருணை நிறைந்த ஆசீர்வாதம் என்றே நாம் மதித்து இறைவனுக்கு நன்றிகூறவேண்டும்.

இந்தத் தியானயோக சபை இன்று இலங்கை நாட்டில் 8 மடங்களையும் இந்தியாவில் 8 மடங்களையும் கொண்ட ஒரு பெரிய விருட்சமாகத் தன் கிளைகளைப் பரப்பி வளர்ந்து வருகின்றது. இந்தத் தியானயோக சபையை உருவாக்கிய தவத்திரு பி. ஏ. தோமஸ் (அமதி) அடிகளாரின் புனித வாழ்வும், இறைவன்மேல் அவர் கொண்டிருந்த அன்பும் நம்பிக்கையும் மிக உயர்ந்தது. இரண்டு தியானயோக சபைகளை நிறுவி அவற்றின்வழி இறைவனுக்கு மகிமையும் திருச்சபைக்கு சக்தியும் உலகம் முழுவதற்கும் அருள்வாழ்வையும் அபரிமிதமாய் வாரிவழங்கும் இறை அடியார் தோமஸ் அடிகளாரை புனிதராக்கும் முயற்சிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

எனவே தவத்திரு தோமஸ் அடிகளாரை திருச்சபை வெகுவிரைவில் திருப்பீடத்தில் உயர்த்தவும், புனிதர்களின் வரிசையில் சேர்த்து மகிமைப்படுத்தவும், அவருடைய பரிந்துரையால் அநேக அருள்வரங்களை அனைவரும் பெற்றுக்கொள்ளவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

மனித மனம் இறைவனோடு இணையும்போதுதான் அருள் என்னும் நீரோடையில் மூழ்கித் திழைக்கமுடியும். இந்த உண்மையை ஆழமாக உணர்ந்துதான் இச்சகோதரிகள் தம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்துள்ளனர். தாம் இறைவனிலே இரண்டறக் கலந்து இன்புறுவதுபோல் இவ்வுலகமும் படைத்தவரில் இணைய வேண்டும் என்பது இவர்களின் அவா. அழிந்துபோகும் ஆன்மாக்கள் காப்பாற்றப்பட வேண்டும், அகிலமெங்கும் இறையாட்சி பரவ வேண்டும் என்ற தணியாத தாகத்தில் செபதப பரிகாரம் நிறைந்த, மறைந்த தியானயோக வாழ்வை வாழ இச்சபையின் நிறுவுனர் தோமஸ் அடிகளார் இச்சபை அங்கத்தவர்களைப் பணிக்கின்றார்.

நற்கருணை நாதர்முன் இரவுபகலாக விழித்திருந்து அவரது பேரன்பையும் பரிவிரக்கத்தையும் இச்சகோதரிகள் இடைவிடாது வேண்டுகின்றனர். தம் சகோதர சகோதரிகளுக்கு, சிறப்பாக தமது செப உதவியை வேண்டிநிற்கும் துன்புறுவோர் துயரத்தில் ஆழ்ந்திருப்போர், உடல்உள நோய்களால் வேதனைப்படுவோர் அனைவரையும் இறைவனின் குணமளிக்கும் தொடுகைக்கு கையளித்து அவர்களுக்காகப் பரிந்துபேசி அனைவரின் தேவைகளையும் பெற்றுக்கொடுத்துக்கொண்டே இருக்க இந்தச் செபமாலைக் கன்னியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

.....................

இளம் பெண்ணே, நீரும் அமல அன்னை செபமாலை அரசியின் அணியில் இணைந்து, எம் மக்களுக்கு அரும்பணியாற்ற இறைவன் விடுக்கும் அழைப்பை ஏற்க விரும்புகிறீரா?

**தொடர்புகொள்ளவும்** : துணை அங்கத்தினராய் எம்முடன் இணைந்துவாழ இன்னுமோர் அழைப்பு! எமது செபத்திலும் பணி வாழ்விலும் இணைய விரும்புகிறீர்களா? →

**தகமை** : பக்தியுள்ள இளம் பெண்கள் 55 வயதுக்குட்படவராக, திருமணம் செய்தவரானாலும் குடும்பப்பொறுப்புக்கள் இல்லாதவராகவும் எமது மடங்களில் எம்முடன் தங்கி இருப்பவராகவும் இருக்கவேண்டும்.

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :**

செபமாலைக் கன்னியர் மடம்,
பட்டித்தோட்டம், மன்னார்.

.....................

இறை அழைத்தல் ஊக்குவிப்பாளர், செபமாலைக் கன்னியர் மடம், "தோமா மொனாஸ்றி", கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

---

உதயன் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கம் – 04.05.2015

# மன்னார் ஆயர் விரைந்து மீளவேண்டும்!

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் கடந்த 02.05.2015 அன்று சனிக்கிழமை இரவு சேர்க்கப்பட்டுள்ளார். இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாலர் ஜோண் கெரியைச் சந்திக்கச் சென்றபோதே, மன்னார் ஆயருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செய்தி தமிழ் மக்களின் இதயங்களைக் குத்திப் பிளந்துள்ளது. தமிழ் மக்களின் விடுதலைக்காக – சுதந்திர வாழ்வுக்காக, தடைகளைத் தகர்த்தெறிந்து குரல் கொடுத்து வருபவர் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை. அவருக்கு தற்போதைய சூழலில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது தமிழ் மக்களுக்கு துக்கமான செய்தியே. தமிழ் மக்களின் அடுத்த பிரபாகரன் என்று மன்னார் ஆயரை சிங்கள கடும்போக்குவாதிகள் வர்ணிக்கும் அளவுக்கு, தமிழ் மக்களுக்காகத் தீவிரமாகக் குரல் கொடுத்தவர் மன்னார் ஆயர்.

தமிழ் மக்களின் குரலாக மாத்திரம் மன்னார் ஆயர் செயற்படவில்லை. இறுதிக்கட்டப் போரில் பாதிக்கப்பட்ட மக்கள் தஞ்சம் என்று மன்னார் ஆயரிடம் வந்தபோது அவர்களுக்கு உதவிகளைச் செய்தார். வெறுமனே, பேச்சளவில் மாத்திரம் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்பவராக மன்னார் ஆயர் இருக்கவில்லை. இதனால்தான், தமிழ் மக்கள் எல்லோருக்கும், அவர் ஓர் ஆயர் – கிறிஸ்தவ போதகர் என்பதைத் தாண்டிய உணர்வு ஏற்படுகிறது. இறுதிக்கட்டப் போரின்போது ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழ் மக்கள் காணாமற்போயுள்ளதை மன்னார் ஆயர் புள்ளி விவரங்களுடனும் ஆதாரங்களுடனும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றார். இலங்கையில் நடந்தது - நடந்துகொண்டிருப்பது இனப்படுகொலைதான் என்று சொல்லும் எந்தவொரு அரசியல்வாதியினாலும் அதற்குரிய ஆதாரங்களைத் திரட்ட முடியாத நிலையில் மன்னார் ஆயர் அதனைத் திரட்டி பகிரங்கப்படுத்தியிருந்தார். சர்வதேச சமூகத்துக்கு இவற்றை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கைக்கு எதிரான, அமெரிக்காவின் தீர்மானம் ஐ.நாவில் வருவதற்கும், சர்வதேச விசாரணை நடத்தப்படுவதற்கும் மன்னார் ஆயரின் இந்த ஆதாரங்களும் காரணம். மேலும் இந்த ஆதாரங்களை வெளிப்படுத்தியதனால், மஹிந்த அரசின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு நெருக்குதல்களுக்கும் - விசாரணைகளுக்கும் முகம் கொடுத்திருந்தார். ஆனாலும் மன்னார் ஆயர் இதிலிருந்து பின்வாங்கவில்லை. இவற்றுக்கு மேலாக, மன்னார் மாவட்டத்தில் அடாவடித்தன அரசியல் செய்த – அதிகார வர்க்கத்தினருக்கு எதிராகவும் அவர் குரல் கொடுத்திருந்தார். இதனால் நேரடியாக அச்சுறுத்தல்களையும் அவர் எதிர்கொண்டிருந்தார்.

இதனைவிட, அண்மையில்தான் மன்னார் ஆயர் தனது 75 ஆவது பிறந்தநாளைக் கொண்டாயிருந்தார். இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சர் திரு. விக்னேஸ்வரன், ஆயரை நேரில் சென்று நீண்ட காலம் வாழ வாழ்த்தியிருந்தார். அதனைவிட மன்னார் ஆயரிடம் முக்கியமான பொறுப்பு ஒன்றை வழங்கியிருந்தார். புலம்பெயர் ஈழத்துவாழ் மக்களது கருத்துக்களை உள்ளடக்கி, அவர்களின் விருப்பம் என்ன என்பதை அறிந்து தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்பதையும், அந்த விடயங்கள் மன்னார் ஆயர் தலைமையில் நடைபெற வேண்டும் என்பதையும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

மன்னார் ஆயர் ஓர் சமயத் தலைவர், இறைதூதர் என்பதனாலேயே மன்னார் ஆயரை இந்த விடயத்தில் தலைமை தாங்க வேண்டும் என்று கோரியதாக முதலமைச்சர் தெரிவித்திருந்தார். உண்மையில் தமிழ் மக்களின் விடிவையே சதாகணப்பொழுதும் சிந்தித்துக்கொண்டிருக்கும் மன்னார் ஆயர்தான், தமிழர் தீர்வு என்ன என்பதை தீர்மானிப்பதற்குப் பொருத்தமான ஒருவர் என்பதில் மிகையில்லை. அப்படியான ஒருவர், மிக முக்கியமான தருணத்தில் சுகவீனமுற்றிருப்பது, ஒட்டுமொத்த தமிழினத்துக்கும் அதிர்ச்சியான செய்திதான். அதுவும் அமெரிக்க இராஜாங்கச் செயலரைச் சந்திக்கச்சென்ற நேரத்தில் இவ்வாறு நிகழ்ந்திருக்கின்றது.

மன்னார் ஆயர் விரைவில் குணமாகி வரவேண்டும். மீண்டும் அவர் தனது பணியை, மக்களுக்காகச் செய்ய வேண்டும். இவர் இன்னமும் செய்யவேண்டிய மிக முக்கியமான விடயங்கள் பல இருக்கின்றன. வடக்கு மாகாண முதலைச்சர் ஒப்படைத்த, தீர்வுத்திட்ட விடயம் அதில் முக்கியமானது. ஏனெனில் தற்போதுள்ள நிலையில் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஈழத்தமிழர்கள் இரு தரப்பினராலும் மதிக்கப்படும் ஒருவராக இருப்பது மன்னார் ஆயர் மட்டுமே. எனவே அவர் தனது பணியைச் செய்வதற்கும் தமிழ் மக்களின் விடிவுக்காகவும் விரைவில் மீண்டெழுந்து வரவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் திருச்சபைச் செய்திகள்

# பெற்றோரை மாதக்கணக்கில் சென்றுபார்க்க தவறும் பிள்ளைகள் நரகத்திற்கே செல்வர்

### பாப்பரசர் பிரான்சிஸ் எச்சரிக்கை

தமது வயதான பெற்றோரை மாதக்கணக்கில் சென்று பார்க்காத பிள்ளைகள் நரகத்திற்கே செல்வார்கள் என பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். சென் பீற்றர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்த 20,000 பேர் முன்பாக உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். முதியோர் பராமரிப்பு இல்லத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிப மாது ஒருவரை 8 மாதங்களுக்கு மேலாகச் சென்று பார்க்காத குடும்பமொன்றின் செயற்பாட்டிற்குக் கண்டனம் தெரிவித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

8 மாதங்களாக தனது பிள்ளைகள் விஜயம் செய்யாத நிலையில் அந்தப் பெண் இருந்துள்ளார். இது பாவமான காரியமாகும் என பாப்பரசர் கூறினார். வயோதிபப் பெற்றோரை நல்லமுறையில் நடத்தாத பிள்ளைகள், எதிர்காலத்தில் அவாகளது பிள்ளைகளால் அவ்வாறே நடத்தப்பட நேரிடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.



# நோயாளிகளுக்கு ஆறுதல் கூறும் பாப்பரசர்

பாப்பரசர் பிரான்சிஸ் நோயாளிகளுடன் தொலைபேசியில் அழைத்துப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார், அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள்கூறித் தேற்றுகிறார். இப்படித்தான் பிராங்கோ ரபுபி என்பவரை இருமுறை பாப்பரசர் தொலைபேசியில் அழைத்து பேச முயற்சித்தார். "ஹலோ, நான் போப் பிரான்சிஸ்" என்று அவர் சொன்னவுடன் யாரோ குறும்புச் செயலில் ஈடுபடுகிறார்கள் என நினைத்து பிராங்கோ ரபுபி தொலைபேசி அழைப்பை துண்டித்துவிட்டார். ஆனால் பாப்பரசர் மூன்றாவது முறையும் அழ்ழைத்தபோதுதான் பிராங்கோ தனது தவறை உணர்ந்தார். அழைத்திருப்பது பாப்பரசர்தான் என உறுதிசெய்து பேச்சற்றுத் திகைத்துப் போனார்.

அது மட்டுமல்ல அவரையும் மனைவியையும் தனது வாராந்த சந்திப்பின்போது பாப்பரசர் வரவழைத்து அரவணைத்து ஆறுதல் கூறியதுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியது நான்தான் எனச் சிரித்துக்கெண்டே கூறினார்.

# பாப்பரசர் - கியூபா ஜனாதிபதி சந்திப்பு



வத்திக்கானுக்கு விஜயம் செய்த கியூபா ஜனாதிபதி ராவுல் காஸ்ரோ அங்கு பாப்பரசர் பிரான்சிஸீடன் விசேட சந்திப்பை மேற்கொண்டார். அண்மையில் கியூபாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான மீள்நட்புணர்வைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகளுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் ஊக்கமளித்து உதவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ரஷ்யாவில் மொஸ்கோ நகரில் இடம்பெற்ற இரண்டாம் உலகப்போர் வெற்றிதின ஊர்வலத்தில் கலந்துகொண்ட பின்னர் ராவுல் காஸ்ட்ரோ உரோமிற்கு விஜயம் செய்திருந்தார்.

கத்தோலிக்க திருச்சபையானது 1959ஆம் ஆண்டுப் புரட்சியிலிருந்து கியூபாவுடனான உறவுகளைப் பேணிவருகிறது. பாப்பரசர் பிரான்சிஸ் எதிர்வரும் செப்ரம்பர் மாதம் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தின்போது கியூபாவிற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

1996ஆம் ஆண்டில் வத்திக்கானில் பாப்பரசர் இரண்டாம் ஜோண் போலுக்கும் முன்னாள் கியூபா தலைவர் பிடெல் காஸ்ரோவுக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பே பாப்பரசர் ஒருவருக்கும் கியூபாத் தலைவர் ஒருவருக்குமிடையே இடம்பெற்ற முதல் சந்திப்பாக உள்ளது. ராவுல் காஸ்ட்ரோ இதற்குமுன் 1997ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சராக இருந்தபோது இரண்டாம் ஜோன் போலைச் சந்தித்தார். 1998ஆம் ஆண்டு இரண்டாம் ஜோன் போலும் 2012ஆம் ஆண்டு பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பரும் கியூபாவுக்கு விஜயம் செய்திருந்தனர். இந்நிலையில் கியூபாவுக்குப் பயணத்தை மேற்கொள்ளும் 3வது பாப்பரசர் என்ற பெயரை பாப்பரசர் பிரான்சிஸ் பெறவுள்ளார்.

# எகிப்திய தேவாலய தீ வைப்பு சம்பவம் 69 பேருக்கு ஆயுள் சிறை

எகிப்தில் கெய்ரோ நகருக்கு அண்மையிலுள்ள நகரொன்றில் தேவாலயமொன்றுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் 69 பேருக்கு அந்நாட்டு நீதிமன்றமொன்று ஆயுள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. மேலும் இந்தத் தீவைப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய சிறுவர்கள் இருவருக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி மொஹமட் முர்ஸியின் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்ட வன்முறை ஆர்ப்பாட்டங்களின்போது 40க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் சூறையாடப்பட்டு தீ வைக்கப்பட்டன. கெர்டாஸா நகரிலுள்ள மேற்படி தேவாலயத் தீ வைப்புச் சம்பவத்தின்போது பொது மக்கள் பலரைக் கொன்றமை மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகள் மேற்படி 69 பேர்மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

# இயேசுக் கிறிஸ்து சிறுபராயத்தைக் கழித்த வீடு கண்டுபிடிப்பு

இயேசுக் கிறிஸ்து சிறு வயதைக் கழித்ததாக நம்பப்படும் முதலாம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்த வீட்டை கண்டுபிடித்துள்ளதாக பிரித்தானிய தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஒருவர் உரிமை கோரியுள்ளார். இஸ்ரேலின் நசரேத் நகரிலுள்ள குன்றுப் பகுதியில் தேவாலயமொன்றிற்கு மத்தியில் அந்த வீடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சியாளரான கென் டார்க் தெரிவித்தார்.

கி.பி. 670ஆம் ஆண்டில் அயர்லாந்தைச் சேர்ந்த துறவியான அடொம்னால் எழுதப்பட்ட புனித இடங்கள் தொடர்பான டி லொசிஸ் சன்க்ரிஸ் குறிப்புகளில் மேரி மற்றும் ஜோசப்பால் கடவுளின் மகனான இயேசுக் கிறிஸ்து வளர்க்கப்பட்ட வீடு தேவாலயமொன்றிற்கு மத்தியில் அமைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான சான்றுகள் மேற்படி வீட்டில் உள்ளதாக கென் டார்க் கூறினார். கற்பாறைக் குன்றுப் பகுதியை துளையிட்டு அமைக்கப்பட்டிருந்த அந்த வீடு பல அறைகளையும் படிக்கட்டுகளையும் கொண்டமைந்துள்ளது. அத்துடன் அந்த வீட்டின் வாசல் கதவொன்று அழிவடையாத நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# எனக்கும் செபிக்க வேண்டும்போல் இருக்கிறது!


### திருத்தந்தையைச் சந்தித்தபின் கியூபா ஜனாதிபதி

அண்மையில் வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்தபின் நிருபர்களிடையே பேசிய கியூபா ஜனாதிபதி ராவுல் காஸ்ரோ திருத்தந்தையின் வாழ்வும் பணியும் தனது வாழ்வை வெகுவாகப் பாதித்துள்ளதாகவும், தான் இதுவரை அலட்சியம்செய்து கைவிட்டுவிட்ட கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கடைப்பிடிக்க விரும்புவதாகவும், அதிகம் செபிக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். திருத்தந்தை கியூபாவுக்கு விஜயம் செய்கிறபோது அவர் ஒப்புக்கொடுக்கும் எல்லாத் திருப்பலிகளிலும் தாம் கலந்துகொள்வேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஜனாதிபதி ராவுல் காஸ்ரோ அவர்களும், இவரின் சகோதரரும் புரட்சித்தலைவருமான பிடெல் காஸ்ரோ அவர்களும் திருமுழுக்குப்பெற்ற கத்தோலிக்கர்களாயினும் இதுவரை தம் விசுவாச வாழ்வை அலட்சியம் செய்து வாழ்ந்தவர்களாவர். பெரும் பகைமையிலிருந்த கியூபாவும் அமெரிக்காவும் தமக்கிடையே நல்லுறவை ஏற்படுத்த திருத்தந்தை பிரான்சிஸ் பெரும் பங்களிப்பை ஆற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# புனிதர்களின் பாதையில்

## புனித ஜோன் பப்ரிஸ்ட் டிலாசால்

(கி.பி. 1651- 1719)




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

காலத்திற்கேற்ற கல்விமுறைத் தந்தை என்று அழைக்கப்படும் புனித ஜோன் பப்ரிஸ்ற் டிலாசால் அவர்கள் பிரான்சில் ரீம்ஸ் நகரில், நகர மன்ற உறுப்பினர் மகனாய்த் தோன்றியவர். 16ஆம் வயதிலேயே ரீம்ஸ் நகரின் பேராலயத்தில் பெரிய பொறுப்பு வகித்தவர். 27வது வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தாழ்ச்சியிலும், பக்தி முயற்சிகளிலும் சிறந்து விளங்கினார். அதேவேளையில் ஏழைகளின்மீது கொண்ட பரிவு நாளுக்கு நாள் இவரிடம் மிகுந்துவந்தது. இதுவே இவரது வாழ்நாள் எல்லாம், ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காத் தம்மை முற்றிலும் கையளிக்க உதவியாக இருந்தது.

இவர்தம் நாட்களில் ஜான்சனிசம் என்ற நச்சுக்கலந்த கொள்கை பிரான்ஸ் நாட்டை அதிரவைத்தது. பற்றாக்குறைக்கு அண்டை நாடுகளுடன் ஓயாத போர். இவை எல்லாம் நாட்டில் கடுமையான பஞ்சத்தையும், பல்வேறு இன்னல்களையும் கொண்டுவந்துவிட்டன. மேலும், கல்வியறிவு அறவே இல்லாது போயிற்று. இத்தகைய சூழலில்தான் ரீம்ஸ் நகரில் ஏழை மாணவர்களுக்கு இவர் இரு பள்ளிக்கூடங்கள் நிறுவினார். நாள்தோறும் தவறாது ஆசிரியர்களிடம் கற்றுக்கொடுக்கும் யுக்திகள்பற்றிக் கலந்துரையாடுவார். அவர்களை எல்லா வழிகளிலும் ஊக்குவித்தார். தங்க இல்லம் அளித்து, தம்மோடு உணவருந்த வைத்தார்.

இந்தப் புதிய முறையைக் கையாண்டதன் பயனாகத்தான் நாளடைவில் கிறிஸ்தவப் பள்ளிகளின் சகோதரர்கள் என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். 1680ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் முற்றிலும் தேவ பேணுதலின் அடிப்படையில் அமைய வேண்டுமென்றே திட்டம் தீட்டினார்.

காலத்தின் அறிகுறிகளுக்கேற்றமுறையில் தொடக்க, மேல்நிலைக் கல்வி புகட்டுவதில் பல புதிய யுக்திகளைக் கொண்டு வெற்றிகண்டதால் இன்று இவரை "கல்வித் தந்தை" என்று உலகம் போற்றுகிறது.

இவர் ஆரம்பித்த துறவற சபையில் அனைவரும் சகோதரர்களாகவே இருக்க வேண்டும்; குருக்களுக்கு இடமில்லை. சகோதரர்கள் அனைவரும் இளைஞர்களின் ஞானக்கண்களைத் திறந்துவிடுவதெற்கென முற்றிலும் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணித்தவர்கள் என்ற குறிக்கோளோடு இன்றுவரை இந்தத் துறவற சபை இயங்கி வருகிறது. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளையும் தோற்றுவித்தார். இத்தகைய முயற்சிகளுக்கு ஒரே குறிக்கோள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. "கல்விப் பணியின் மூலம் நேர்மையான கிறிஸ்தவர்களை உருவாக்குதல்"

இந்தப் பணிகள் எல்லாம் முடிவுக்கு வந்த வேளையில் முழுப் பொறுப்பையும் சபைச் சகோதரர் ஒருவரிடம் ஒப்படைத்தார். 1719ஆம் ஆண்டு அவரைத் தாக்கிய ஆஸ்துமா உச்சநிலையை அடைந்தது. பற்றாக்குறைக்கு மூட்டுவலியும் சேர்ந்துகொண்டது. இருப்பினும் இதுவரை கடைப்பிடித்துவந்த கடுமையான தவ முயற்சிகளை அவர் விட்டுவிடவில்லை. இந்தவேளையில் ஒரு சிறு விபத்தில் இவர் சிக்கிக்கொண்டது இவரது வேதனைகளைப் பன்மடங்காக்கியது. இந்தச் சூழலில் ஏப்ரல் 7ல் பெரிய வெள்ளிக்கிழமையன்று இறைவன் அவரது தூய ஆன்மாவை ஏற்றுக்கொண்டார். கி.பி 1950ல் புனிதர் பட்டம் கொடுத்த திருத்தந்தை இவரை "பள்ளி ஆசிரியர்களின் பாதுகாவலர்" என்று அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 42.

## 'தொடர்' களால் துன்பங்கள் தொடரலாமா!

*புத்திசாலித்தனமான 'புள்ளைகள்'*

மாணவன் ஒருவன் பாடசாலைக்குப் பிந்திவந்ததற்கான காரணத்தை ஆசிரியர் வினவினார். அவன், "வீட்டில் அம்மாவும் அப்பாவும் சண்டைபிடித்ததால் வரப்பிந்திவிட்டது!" என்றான். ஆசிரியரோ, "அம்மாவும் அப்பாவும் சண்டைபிடித்ததற்கும் நீ பிந்திவந்ததற்கும் என்ன தொடர்பு?" எனக் கேட்டார். அவனோ, "அம்மாட கையில ஒரு 'சூ'(shoe), அப்பாட கையில மற்றைய 'சூ'! அதனால் நேரமாகிவிட்டது! "என்றான். விடயத்தைப் புரிந்துகொண்ட ஆசிரியர், "சரிசரி, எதற்கும் வாகனத்திற்கு 'ஸ்பெயாவீல்' (Spare-wheel) மாதிரி இன்னுமொரு சோடிச் 'சூ'க்களை வாங்கிவைத்துக்கொள். அவசரத்துக் நீயும் பயன்படுத்திக்கொள்ளலாம், உங்க அம்மா அப்பாவும் பயன்படுத்திக்கொள்ளலாம்!" என்றார் நிறைவாக.

அம்மா, அப்பா, பிள்ளைகள் எனக் குடும்பமாகத் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்சம் 'அப்பிடி இப்பிடி'யான கட்டம் வரப்போறது என்று அறிந்த அப்பா வாலிப மகனைப் பார்த்து, "போய் தண்ணிய எடுத்துவா தம்பி" என்று அனுப்பிவைத்தார். அந்தக் கட்டம் முடிந்து கொஞ்சநேரத்தின் பின், முன்பு பார்த்ததைவிட இன்னும் மோசமான கட்டம் வரப்போவதை உணர்ந்துகொண்ட மகன் தந்தையைப் பார்த்து, "அப்பா, கேற்றில யாரோ தட்டுறாங்க போலகிடக்கு! யாராவது, உங்களத்தான் தேடிவந்திருப்பாங்க, போய் பாத்திற்றுவாங்க!" என்றான்.

எவ்வளவு புத்திசாலித்தனமான பிள்ளைகள்! தங்கள் பிள்ளைகள், மூக்கைப் பிடித்தால் வாயைத் திறக்கத் தெரியாதவர்கள் எனப் பல பெற்றோர்கள் இன்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகள் அனுபவசாலிகளாக இல்லாமல் இருக்கலாம், ஆனால், அனேக விடயங்களை அறிந்துவைத்திருக்கிறார்கள் என்பது இன்றைய பெற்றோருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

*'தொடர்'களால் தொடரும் தொல்லைகள்!*

"என்ன நடக்குமோ தெரியல்ல. தப்பிறது கஸ்ரம்! தப்பினாலும் அவனால ஒண்டும் செய்ய ஏலாது. குடும்பம் தான் பாவம்! என்ன செய்யப்போதுகளோ தெரியல்ல. எதுக்கும் 'மிஸ்' பண்ணாம, போய், பாப்பம்!" எனப் பேசிக்கொண்டு இரண்டு பெண்கள் வீதியில் வேகமாகப் போய்க்கொண்டு இருந்தார்களாம். 'மருத்துவமனையில் யாராவது ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் அவசரமாகப் போகிறார்கள்!' என அவர்களின் உரையாடலில் இருந்து புரிந்துகொண்ட ஒரு பெரியவர், "என்ன நடந்தது? யாரையெண்டாலும் ஆஸ்பத்திரியில அனுமதிச்சிருக்கா? அவசரம் எண்டால் ஓராளை மோட்டசைக்கிள்ள கொண்டுபோய் விடுறன்!" என்றாராம் பரிதாபப்பட்டு!

அதற்கு அவ் அம்மணிகளில் ஒன்று, "இல்ல, பரவாயில்ல ஐயா..." என அப்பெரியவரைச் சமாளித்துக்கொண்டாள். தொடர்ந்து, "இந்த கிழடுக்கு நாங்க 'சீரியல்'பார்க்கப் பட்டுப் போகிறபாட்டை எப்படிப் புரியவைப்பது!..." என அவர்கள் தங்களுக்கிடையில் பேசிக்கொண்டதைக் கேட்டும் கேட்காதவர்போல அப்பெரியவர் சென்றிருக்கிறார்!

இன்று, வீடுகளில் சிலருடைய சுவாசம் தங்கியிருப்பதே 'சீரியல்'லில் தான் (தொடர் நாடகங்கள்) என்று சொல்லுகிற அளவுக்கு நிலமை மாறியிருக்கிறது என்றால் தொலைக்காட்சிகளின் தொடர் நாடகங்களின் ஆதிக்கம் எத்தகையது என்பதை ஓரளவுக்கேனும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. 'தொடர்' பார்க்கிற நேரத்தில் ஏதாவது தொந்தரவுகள் ஏற்பட்டால், அவ்வளவுதான்! வீட்டில் உள்ள ஏனையவர்களுக்கு அடுத்த நாள் தொடர் பார்க்கும்வரை 'தொடர் பட்டினி' தான் என்ற நிலைமையும் உருவாகிவருகிறது.




*'தொடர்'களால் மாற்றமடைந்த உணவுப் பழக்கம்!*

இந்த நாடகத் தொடரினால் உணவுப் பழக்கவழக்கங்களில்கூட சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். பொதுவாக இரவுச் சாப்பாடுக்கு இடியப்பம், புட்டு போன்ற உணவுவகைகளை எடுத்துக்கொள்வார்கள். ஆனால் இப்போது அனேகமான வீடுகளில் இரவுச் சாப்பாட்டுக்கு பாண் வாங்குகிறார்களாம் அல்லது கிழமையில் ஒரிரு தடவைகள் மட்டும் புட்டு அவிககிறார்களாம், பொதுவாக இடியப்பம் இரவுச் சாப்பாட்டுக்கு அவிப்பதேயில்லை என்றாகிவிட்டதாம்.

அதற்கான காரணம் என்ன என்று வினவியபோது, இடியப்பம் அவிப்பதென்றால் மாவைக் குழைக்கவேண்டும், புழியவேண்டும், அடுப்பில் வைத்து அவிய வைக்கவேண்டும், பின்னர் பருவத்திற்கு இறக்கவேண்டும். புட்டு என்றால் நாடகத்தைப் பார்த்துப் பார்த்தே குழைக்கலாம், பின்னர் இடைவேளைகளில் ஓடிச்சென்று ஒரேகொட்டாய் கொட்டி அவிவதற்கு வைத்துவிட்டு வந்திருந்தால், அடுத்த இடைவேளைக்கு அவிந்ததும் அவியாததுமாய் அடுப்பிலிருந்து ஒரேகொட்டாய்க் கொட்டக்கூடியதாக இருக்கும்! இப்போது அனேகவீடுகளில் இவ்வாறுதான் சாப்பாட்டு நிகழ்ச்சிநிரல் உள்ளதாகப் பேசிக்கொள்கிறார்கள்....!

*'சீரியல்', 'சீரியஸ்'சான பிரச்சினை ஆகியிருக்கிறது*

ஒவ்வொரு நாளும் தொடர் நாடகங்களைப் பார்த்து தன் மனைவி அழுவதைச் சகிக்க முடியாத கணவன், "ஏன்டீ நாடகத்தைப் பாத்துப் பாத்துப் அழுகிறாய்?" எனக் கேட்கிறான். அவள் அதற்கு, "சீரியல்ல (serial) வாறவ, ஏன் அழுறா என்று தெரியல்ல, அதுதான் நான் அழுறன்!" என்கிறாள். அவன், அந்த 'சீரியல்' நடிக்கும் நடிகையிடமே சென்று, "ஒவ்வொரு 'சீரியல்'லையும் நீங்க ஏன் அழுறீங்க? "எனக் கேட்டுவிட்டான். அந்நடிகையோ, "எனக்குத் தெரியாது, நாடகத்தை இயக்கிற 'டிறைக்ரர்' (director) அழச்சொன்னார், அதுதான், நான் ஒவ்வொரு தொடரிலும் அழுறன்!" என்றாளாம்.

இப்பிரச்சினைக்கு ஒரு முடிவுகாணாமல் விடுவதில்லை!' என நினைத்துக்கொண்ட அந்தக் குடும்பத் தலைவன் எப்படியோ அந்நாடக நெறியாளரைச் சந்தித்து, "ஒரு இளம் பிள்ளை (யுவதி) மூன்று வருசமா உங்கட 'சீரியல்'ல அழுதுகொண்டே இருக்கிறா?, அவ, இப்பிடி அழுறது அவ்வளவு சரியில்ல! ஏன் இப்படி அழவேண்டும்?" என வினவியதற்கு அந்நாடகத்தொடர் நெறியாளர், "நீங்க சொல்றது சரிதான்!... ஆகவேதான், 'சீரியல்'முடிகிறபோது அவவும் அழுகையை நிறுத்துவா!" என்று பதில் அளிக்கிறார். அக்குடும்பத் தலைவரோ, "அப்ப, உங்கள் 'சீரியல்' எப்போது முடிவுறும் 'சேர்'?" எனக் கேட்டதற்கு, "அவள் அழுவதற்கான காரணம் தெரியவரும்போது, 'சீரியல்'ம் முடிவுக்கு வரும்!" என்கிறார் சர்வசாதாரணமாக!


இவ்வாறுதான் தொடங்கிய 'தொடர்'களை எங்கு முடிப்பது என்று தெரியாமல் தொடர்களைத் தொடர்ந்துகொண்டு இருக்கிறார்கள் இயக்குனர்கள். இந்த விபரம்கூடத் தெரியாமல் நம்மவர்களில் படித்த பலரும் இத்தொடர்களில் மூழ்கிக் கிடப்பதுதான் விந்தையிலும் விந்தையாய் இருகிறது.

*'தொடர்'கள், ஒரு பெரும் வியாபாரம்!*

அனேகமான தொலைக்காட்சித் தொடர்நாடகங்களோடு பின்னிப் பிணைந்திருக்கும் பென்னம்பெரிய வியாபாரத்தை புரிந்துகொள்ளாது வீடுவீடாக் கூடியிருந்து தொடர் நாடகங்கள் ஒன்றையும் விடாமல் பார்த்துக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் ஓரினம் என்றால் அது நம் தமிழினமாகத்தான் இருக்கவேண்டும்! செத்தவீட்டில் அழாதவர்கள்கூட தொடர் நாடகங்களைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அவ்வளவிற்கு இத்தொடர் நாடகங்களுடன் ஒன்றித்துப்போய் இருக்கிறார்கள்!

இப்போது குடும்பங்களில் பொதுவாக நான்கு அல்லது ஐந்து பேர்தான்! அம்மா, அப்பா, இரண்டு அல்லது மூன்று பிள்ளைகள். அவற்றில் இரண்டு ஜீவன்கள் நாடகத் தொடரைப் பார்த்து அழுதுகொண்டு கிடக்க, இன்னொன்று கணணியோடு காலத்தைக் கழிக்க, மற்றோன்று 'கான் போன்'ணோடு (கைத்தொலைபேசி) கதைத்துக்கொண்டிருக்க, மிஞ்சிய ஒன்று முகப்புத்தகத்தில் (face book) முகங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு, குடும்பம் முழுவதும் இன்று 'வெறி பிசி' யாக (very busy) ஆக்கப்பட்டிருக்கிறது!

இந்நிலையைத்தான், "பெற்றோர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் குந்தியிருந்து தொடர் நாடகங்களின், கந்தறுப்புகளுக்கு கண்ணீர்விட்டு அழுது கொட்டிக்கொண்டிருக்க பிள்ளைகள் கையடக்கத் தொலைபேசியில் உரையாடல் இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள்" என 07.04.2012 வலம்புரி ஆசிரியர் தமது தலையங்கத்தில் குறிப்பிடுகிறார். நம் குடும்பங்கள் உருப்படவேண்டும் என்றால், "தொடர் நாடகத்து ஆசையைத் துறக்கவேண்டி இருக்கிறது. கற்பனைக் கவலைகளை வளர்த்து கண்ணீர் வடிக்கின்ற நிலை மாறவேண்டும்" என்ற வலம்புரி ஆசிரியரின் குறிப்பு நமக்கு ஒரு நல் ஆலோசனையாய் அமையட்டும்.




*பேறுபெற்ற குடும்பங்கள்!*

குடும்பங்களின் இன்று உண்மையான மகிழ்ச்சி இருக்கிறதா?, உண்மையான அன்பு பரிமாறப்படுகிறதா?, உண்மையான குடும்ப உறவு வளர்கிறதா? போன்றவை எம் குடும்பங்களின் தற்போதைய நிலையைப்பற்றி அறிவதற்கான அடிப்படைக் கேள்விகளாக அமைந்திருக்கின்றன.

அதிவேகமான சமூகச் சூழலிலும் குடும்பமாய்க் கூடியிருந்து கதைப்பதற்கும் அன்பைப் பகிர்வதற்கும் எந்தக் குடும்பம் நேரத்தை ஒதுக்குகிறதோ அக்குடும்பம் உண்மையில் பாக்கியம் பெற்றது! அறிவைப் பெருக்குவதற்கும், நாட்டுநடப்புக்களை அறிவதற்கும் எக்குடும்பத்தவர்கள் வாசிப்புக்காக நேரத்தை ஒதுக்குகிறார்களோ, அவர்கள் உண்மையில் பேறுபெற்றவர்கள்! இயந்திரமயமாகிவரும் வாழ்க்கைச் சூழலில் எக்குடும்பத்தவர்கள் குடும்ப உறவுப்பிணைப்பில் வளர்கிறார்களோ அவர்கள் நற்பேறு பெற்றவர்கள்! குடும்ப ஒற்றுமைக்காகவும் நல்வாழ்விற்காகவும் குடும்பமாய்க் கூடியிருந்து யார் செபிக்கிறார்களோ - இறைவேண்டல் புரிகிறார்களோ அவர்கள் உண்மையில் பாக்கியவான்கள்!

ஏனென்றால், அவசரமான வாழ்க்கைச் சூழலில் இவைதான் வாழ்க்கையின் உண்மையான மதிப்பீடுகளையும், வாழ்க்கையின் உண்மைப் பொருளினையும், வாழ்வதற்கான நல்வழிகளையும் தரவல்லது என்பதை உறுதியோடு உணர்ந்துகொள்ளவேண்டி இருக்கிறது.

*பொய்யான போலியான கருத்துருவாக்கங்கள்!*

தொடர் நாடகங்களின் பல பிழையான கருத்துக்கள் நியாயப்படுத்துவதாகவும், தவறுகளோடு சமரசம் செய்துகொள்வதாகவும் ஆக்கப்படுவதை அவதானிக்கலாம். "அவன் பொறுப்பில்லாதவனாக நடந்தால், அவள் வேறோருவனோடு போவாள்தானே!", "அவள், ஆட்டக்காரி! இப்பிடிச் செய்தா, அவன் குடிப்பான்தானே!", "இவளுக்கு இவ்வளவு திமிர் எண்டா அவனுக்கு எவ்வளவு திமிர் இருக்கும்! என்னெண்டாலும் அவன் ஆம்பிளையல்லே!", "விரும்பிறபடி பெற்றோர் செய்து குடுக்காட்டி, பிள்ளைகள் கூட்டிக்கிண்டு ஓடுங்கள்தானே!", "இப்பிடிக் கஸ்ரப்படுறதவிட, என்னத்தையாவது குடிச்சி செத்துப்பொயிரலாம்!", "இவளோட வாழ்றதும் சாகிறதும் ஒண்டுதான்!', "அவன் செய்ததுக்கு, அவன்ர பிள்ளைகள் அனுபவிக்கத்தானே வேணும்!" என்பது போன்ற பிழையான - தவறான - தீமையான கண்ணோட்டங்கள் நியாயப்படுத்தப்படுகின்றன - வளர்க்கப்படுகின்றன.

*சீர்படுத்தியிருக்கிறதா/ சீரழித்திருக்கிறதா?*

வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் நல்ல தீர்வுகளையும் தெரிவுகளையும் கொடுக்காமல் எப்படிச் சதி செய்யலாம்? எப்படியான குறுக்கு வழிகளில் காரியத்தைச் சாதிக்கலாம்? எப்படி பொய் முகங்களோடு வாழலாம்? யாரோடு யாரை மூட்டிவைக்கலாம்! மோதவிடலாம்! என்பவைகள் இன்றைய தொடர் நாடகங்களில் இருந்து பெற்றுக்கொள்பவைகளாக இருக்கின்றன.

வாழ்க்கையை சீரமைக்க - உறவுகளைச் சீர்படுத்த - தொடர்புகளைச் சீர்செய்ய வந்தவைதான் இன்றைய வளர்ச்சியடைந்த அதிநவீன தொழில்நுட்பம். ஆனால், மனிதர்களை - குடும்பங்களை - சமூகங்களை சீரமைப்பதற்கு மேலாக அவர்களைச் சீரழிக்க வந்தவைபோல இன்று மாறிவருவதை வருத்தத்தோடு நோக்கவேண்டி இருக்கின்றது.

இத்தொலைக்காட்சித் தொடர் நாடகங்களைப் பார்த்து வாழ்க்கையில் பிடிப்பிழந்த - வாழ்க்கையின் இலக்கிழந்த - வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட குடும்பங்கள் நிறையவே உண்டு. ஆனால், இத்தொடர் நாடகங்களைப் பார்த்து வாழ்க்கையைக் கண்டுகொண்ட குடும்பங்கள் என்று இதுவரையிலும் எங்காவது இருக்கின்றனவா? இல்லையே! எனவே, 'தொடர் நாடக ஆசையைத் துறந்து, கற்பனைக் கவலைகளை வளர்த்து கண்ணீர் வடிக்கிற நிலைகளை மாற்றுவோம்' (கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் anpuomi1970@gmail.com).

**மன்னா விநியோகஸ்தர்களே!**

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

- மன்னா நிர்வாகம் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசாலை பாரம்பரிய உடக்குப்பாஸ்



## கால மயக்கமும் முரண்பாடும்



- எஸ். ஏ. உதயன், பேசாலை -

கிறிஸ்தவர்கள் தமது ஆன்ம விசாரிப்பையும் உண்ணா நோன்பையும் கடைப்பிடிப்பதன் மூலம் தம்மைத்தாமே பரிசுத்தமாக்க வேண்டும் என்ற நிலையில் ஆண்டவரின் திருப்பாடுகள் மரணம் உயிர்ப்பை நினைவுபடுத்துகிறார்கள். அந்தவகையில் சிலுவைப்பாதை திருப்பாடுகளின் காட்சிகள் இக்காலத்தில் முக்கியப்படுகின்றன. திருப்பாடுகளின் காட்சி என்கிறபோது பேசாலையில் கால ஒழுங்கில் காண்பிக்கப்படும் உடக்குப்பாஸ் எல்லோராலும் கவனிக்கப்படுகின்றது. இக்கட்டுரை பேசாலை உடக்குப்பாஸ் தொடர்பாகப் பேசுகின்றது.

பாசோ எனப்படும் இயேசுநாதரின் திருப்பாடுகளின் காட்சி ஒரு பக்தி முயற்சியாக தொன்றுதொட்டு உலகெங்கிலும் காண்பிக்கப்பட்டு வருவது நமக்குத் தெரியும். இக்காட்சியானது பல்வகை காண்பிய உத்திகளோடு அளிக்கை செய்யப்பட்டு வருவது தொடர்பாகவும் நாம் அறிந்திருக்கிறோம். அந்த வகையில் இலங்கையில் திருமறைக்கலாமன்றம் பேரெடுப்பில் வருடந்தோறும் அரங்கியல் நிகழ்வாக காட்டும் திருப்பாடுகளின் காட்சி முக்கியமானது. ஆனால் முழுக்க முழுக்க உடக்கு எனப்படும் பாவைகளை மனிதர்கள் இயக்குவதன் மூலம் நடத்தப்படுகின்ற இக்காட்சியைத் தமது பாரம்பரியக் கலையாக மன்னார் மாவட்டத்தின் பேசாலைப் பெரும் ஊரில் குறித்த கால ஒழுங்கில் நடத்துவது தொடர்பாக அதிக கரிசனையோடு கலை ஆர்வலர்கள் பேசிவருகிறார்கள்.

இவ் உடக்குப்பாஸானது இற்றைக்கு ஏறத்தாள 150 வருடங்களுக்கு முந்திய கலையாக நிகழ்த்தப்பட்டு வருவதாக ஆய்வாளர்கள் குறித்துரைக்கிறார்கள். இக்கலை இந்தியாவிலும் இலங்கையின் சில இடங்களிலும் நிகழ்த்தப்பட்டு இருப்பினும் இக்கலை பேசாலையில் காத்திரமாக மையம் கொண்டிருப்பதன் காரணமும் அதுபற்றிய செய்திகளும் நமக்கு இக்கலையினுடைய தோற்றுவாயின் கால மயக்கத்தையும் சில முரண்பாட்டையும் ஏற்படுத்துவது குறித்து ஆய்கிறது இந்தக்கட்டுரை.

இலங்கையின் சிலாபம் பகுதியில் இவ் உடக்குப்பாஸ் நிகழ்த்தியதின் அடையாளமாக அங்கு காணப்படும் சிறிய அளவிலான காட்சி மண்டபமும், நாட்டின் சில இடங்களில் உடக்குகள் தயாரிப்பதற்கு ஆதாரமான மரத்தாலான மனிதத்தலைகளும் கைகளும் காணப்படுவதும், மன்னார்க் கத்தான்குளக் கத்தோலிக்க ஆலயத்தின் பழைய பெட்டகத்தில் நீண்டகாலம் கவனிப்பாரற்றுக் காணப்படும் மரத்தாலான மனித முகங்களும் நானாட்டானில் காணப்படும் இயேசுநாதரின் மரணிக்கும் காட்சியில் பயன்படுத்தப்படும் பழைய மரத்தாலான சுரூபம் போன்றவையும், மட்டக்களப்பு மாவட்டத்தின் உடக்குப் பாஸ் இலங்கையில் பல்வேறு இடங்களில் பெரிய அல்லது சிறிய அளவில் முன்னொரு காலத்தில் நடத்தப்பட்டு வந்தமைக்கு சாட்சியமளிக்கின்றன. ஆயினும் உடக்குப்பாஸ் நிகழ்த்துகை முறை அருகி இல்லாது போய்விட்டநிலையில் பேசாலையில் உடக்குப்பாஸ் நடத்தப்பட்ட பாரம்பரியமும் அதற்காக அச்சமூக மக்கள் எடுத்துக்கொண்ட பிரயத்தனமும் இன்னும் அக்கலையை வாழ்வித்துக்கொண்டிருக்கின்றது என்பதை நாம் மறுக்க முடியாது. இப்பாசானது தோற்றுவிக்கப்பட்ட காலம் மற்றும் களம் என்பவற்றை நாம் நோக்கும்போது இது குறித்த பல அசாதாரண மெய்ப்பாடுகளை அறிந்துகொள்ளலாம்.

இந்தியாவின் கோவா மாநிலப் பிரதேசத்தில் கீழைத்தேய நடைமுறைக்கேற்ப இயேசுநாதரின் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்ற தியானத்தைக் காட்சிப்படுத்துவதன் மூலம் அதனைப் பக்தி முயற்சியாகக்கொண்ட வழமையை கத்தோலிக்க மிசனறிமார் கையிலெடுத்தபோது அவர்களால் ஏற்படுத்திய பாசோ என்ற அரங்க அளிக்கை அக்காலத்தில் பிரபல்யமானதாகக் காணப்பட்டதாக அக்கால ஒரற்றோரியன் சபைக் குருமாரின் கணிப்பீட்டு அறிக்கை ஒன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு 1771ம் ஆண்டு அச்சபையின் கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்படும் பாசோ என்ற பதம் உடக்குப் பாஸையே குறித்துரைக்கின்றது. ஏனென்றால் இது போத்துக்கீசரின் காலத்தின் அரங்கியல் நிகழ்வாகவும் அக்காலத்தில் ஐரோப்பியர்கள் நாடக அளிக்கைகளிலும் அதன் புத்தாக்க முயற்சிகளிலும் ஈடுபாடுள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதோடு அவர்களின் மறைபரப்புக்கான பிரதான உத்தி நாடக அளிக்கையாகத்தான் இருந்தது என்பதற்கு வரலாற்றில் அனேக ஆதாரங்கள் உண்டு. அவ்வாறே பாசோ என்ற வழிபாட்டுச்சடங்கை இயேசுசபைக் குருமார் இலங்கையிலும் நடத்தியதற்கான குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஒல்லாந்தர் காலமான 1699ல் சீதாவாக்கை என்ற இடத்திலும் 1707ம் ஆண்டு மாதோட்டத்திலும் 1708ம் ஆண்டு கண்டியிலும் அதன் பின்னரான 1711ல் வன்னியிலும் இக்காட்சிகள் நடத்தப்பட்டதற்கான பதிவினை ஒரற்றோரியன் சபைக்குருமார்களின் வருடாந்தக் கணிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக கிறீஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறை விரிவுரையாளர் அருட்பணி. விக்டர் ஞானமுத்து பிலேந்திரன் தமது ஆய்வில் தெரியப்படுத்துகிறார். இந்த வகையில் நோக்கும்போது இலங்கையில் 1602ம் ஆண்டில் முதன்முதல் பாசோ நிகழ்வு உடக்குப்பாஸாகக் காட்டி நடத்தப்பட்டது என்பது வரலாற்றுத் தடமாகும். இதுவே உடக்குப்பாஸ் நிகழ்விற்கு கால்கோலியது எனலாம்.

இன்று உடக்குப்பாஸ்சுக்கு காப்பாளர்களாக விளங்கும் பேசாலை மக்களும் இதனைத் தமது பிரதான மரபுக்கலையாக வரிந்துகொண்டதும் இக்காலத்திலேயாகும் என மொழிவாரும் உண்டு.

ஏனெனில் தற்போது பேசாலையில் உடக்குப்பாஸ் மூப்பராக இருக்கும் கலாபூஷணம் திரு. அந்தோனி மிராண்டா அவர்களின் கூற்றுப்படி 190 ஆண்டுப் பழமை என்ற பதிவும் அக்காலத்தில் கோவிலுக்கு அண்மையில் ஓலைக்கொட்டகை அமைத்து உடக்குப் பாஸ் காட்டிய எமது முன்னோர்கள் என்ற அவரது அனுமானமும் நமக்கு 1602ம் ஆண்டுக்காலப்பகுதி நோக்கிய ஆரம்பத்திற்கே அழைத்துச் செல்லுகிறது.

பேசாலைக் கோவிலின் கப்பலாப்பகுதி கால நீட்சியால் பழுதடைந்தது என்ற காரணத்திற்காக 1890ம் ஆண்டில் வணபிதா பத்திரோன் அ.ம.தி அடிகளாரினால் திருத்தியமைக்கப்பட்டதாகவும் அக்காலத்திலும் பேசாலையில் உடக்குப்பாஸ் காட்டப்படும் நடைமுறை இருந்ததாகச் சொல்லப்படும் குறிப்பு நுணுகி ஆராயப்பட வேண்டியதாகும். நாட்டின் ஏனைய இடங்களிலும் அறிமுகம் செய்யப்பட்டிருப்பினும் அவ்விடங்களில் அவ் உடக்குப்பாஸ் என்ற கலை வழக்கிழந்து போனதும் பேசாலையில் இது தங்கி நின்றுபிடித்ததற்குமான காரணகாரியங்களில் கருத்துரைப்போர் கூறுவது யாது என நாம் அறிதல் நன்றாயிருக்கும். பேசாலையின் நாடக அரங்கியல் அளிக்கையாளரும் 76 வயது மூத்தவருமான திரு எஸ். பி. லெம்பேட் இதுபற்றிக் கூறுகையில் தமது முன்னோர்களில் சிலர் வாண்மை மிகுந்த சித்திரிப்புக்கலைஞர்களாக இருந்தார்களென்றும் அவர்களுக்கும் தென்னிந்திய கலை ஆர்வலர்களுக்குமான தொடர்புகள் பேணப்பட்டு வந்தது என்றும் புதிதளித்தல் என்பதில் அவர்கள் நாட்டங்கொண்டிருந்தபடியால் இயல்பாகவே தூண்டப்பட்டு தமக்குக் கிடைத்தப் புதுவகைக் கலையான உடக்குப் பாஸை மெருகூட்டி வந்தார்கள் என்கிறார்.

இக்கூற்றுக்கு ஆதாரமாக பேசாலை உடக்குப்பாஸ் என்ற கட்டுரையாளர் கலாபூஷணம் எஸ். ஏ. மிராண்டாவின் பதிவில் அவர் குறிப்பிடும் மனுவேல் மிராண்டா, சந்தியா மிராண்டா, என்போர் தலைசிறந்த சித்திரிப்புக் கலைஞர்களாக பேசாலையில் இருந்தார்கள் என்பதுவும் அவர்களால் நிருமாணிக்கப்பட்ட பேசாலை வெற்றிநாயகி ஆலயத்தின் நுட்பமான கொத்து வேலைகளுடன் தஞ்சாவூர்ப் பாட்டைப் பிரயோகிப்புமான மாதாவின் சிம்மாசனம் காணப்படுகின்றது. இக்கட்டுரையாளரான எனது பால்ய பராயத்தில் பெனடிக்ட் மிராண்டா என்ற தச்சர் உடக்குத் தலைகளின் குறைநிரப்புக்காக மரத்தில் மனித முகத்தை அவர் செதுக்கியதைப் பார்த்திருப்பதும் இக்கருத்துக்கு வலுச்சேர்ப்பதாகும்.

இது குறித்து முன்னைய நாட்களில் தலைமை மேஸ்திரியாகவும் பாஸ் மூப்பராகவும் இருந்து காலம்சென்ற சலேசியன் பீரிஸ் அவர்களின் கூற்றுப்படி உடக்குப்பாஸில் அனேக புதிய உத்திகளை அக்காலத்தில் கிடைத்த வளங்களைக்கொண்டு தாமே சிலவற்றை புதிதளிக்கும் முறையில் உருவாக்கம் செய்ததாக சொன்னதை அவரது மகனும் இக்கால மேஸ்திரியுமான திரு. திவ்வியநாதன் பீரிஸ் ஆமோதிக்கின்றார். அதாவது தமது தகப்பனார் பாஸ் மண்டபத்தைவிட இரகசியம் பேணும் முறையில் தமது வீட்டில் வைத்தே சில நுட்பமான இயங்குபொறிகளை ஆக்கியதாகச் சொல்லுகிறார்.

இவ்வாறே பாஸ் தொடர்பான நுட்பங்கள் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்டு வருவதற்கான சாட்சியங்களாக அன்று பாஸ் நடத்தும் மேஸ்திரிகள் காணப்படுவது இதற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். இவ்விடத்திலான பேசாலையில் உடக்குப்பாஸ் சார்ந்து பாடப்படுகின்ற கொன்சால்வேஸ் சுவாமிகள் பாடியளித்த வியாகுலப்பிரசங்கங்களின் தோற்றுவாய் பற்றியும் நாம் இக்கட்டுரையில் பேசவேண்டியுள்ளது.

கொன்சால்வேஸ் சுவாமிகளுக்கு ஏற்பட்ட வியாகுலப்பிரசங்க ஆக்க இலக்கியத்திற்கான எண்ணப்பதிவு பேசாலை உடக்குப்பாஸ்சுக்கு உதவவேண்டும் என்பதற்காக ஏற்பட்டிருக்கலாம். சுவாமிகள் 1730இல் ஆக்கிய வியாகுலப்பிரசங்கத்திற்கு ஏற்கனவே நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த உடக்குப்பாஸினை அதற்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கவும் உடக்குப்பாஸ் பேசாலையில் காட்டும் கால ஒழுங்குக்குரிய வகையிலும் செப்பனிட்டு எடுக்க குறைந்தது பத்து வருடகால அவகாசம் தேவைப்பட்டிருக்கும்.

பொதுவாகக் கிறிஸ்தவ மக்கள் தவக்காலத்தில் ஆற்றுகின்ற செயற்பாட்டினை ஏனைய காலங்களில் ஆற்றுவது தவறானது என உணர்ந்திருப்பதும் தவக்காலத்திற்கேயுரிய பிரமாணிக்கத்தையும் மகிமையையும் கட்டுப்பாடாக வைத்திருப்பதனாலும் அக்காலத்தை அடையாளப்படுத்தும் பொருட்களையோ சடங்கையோ பிறிதொரு நாட்களில் செய்திருக்க மாட்டார்கள். அவ்வாறே பாஸ் புனருத்தாரண வேலைகள் தாமதப்பட்டு வருடங்கள் ஆகியிருக்கலாம். ஆக கொன்சால்வேஸ் சுவாமிகள் வியாகுலப்பிரசங்கம் எழுதிய காலத்திற்கும் வியாகுலப்பிரசங்கம் ஊடான உடக்குப்பாஸினை பேசாலையில் முதன்முதல் நடத்தியதற்கும் கால இடைவெளி பதின்மூன்று வருடங்களே ஆகியிருந்திருக்கிறது.

1743ம் ஆண்டில் காண்பிக்கப்பட்ட உடக்குபாஸ்சுக்கு வியாகுலப்பிரசங்கம் முதன்முதலில் பாடப்பட்டது என்று அருட்பணி. பிலேந்திரன் அவர்கள் தமது ஆய்வில் குறிப்பிட்டிருந்தபோதிலும் வியாகுலப்பிரசங்கங்களின் ஆரம்பத்தில் பாடப்படும் "குறிப்பிடம் காண்பிக்கப்படுவது" என்ற வரிகள் ஒரு காண்பியக்கலையின்பால் சார்ந்திருப்பதை நமக்குணர்த்தினாலும் அது உடக்குபாஸ்சுக்காக எழுதப்பட்டதா என்ற ஐயம் கருத்தியலாளர்களினால் முன்வைப்பது தவிர்க்க முடியாததாக ஆகிவிடுகிறது. இங்கு கொன்சால்வேஸ் சுவாமிகளின் பணியும் அதன் களமும் மன்னார் மாதோட்டத்தையுடைத்ததாக இருப்பதாலும் அவரது சேவை அக்காலத்தில் பல இடங்களைத் தரிசிப்பதாக இருந்ததாலும் சுவாமிகள் பேசாலை மக்களின் உடக்குப்பாஸ் கருதி இந்த வியாகுலப்பிரசங்கத்தை எழுதியிருக்கலாம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.

காரணம் வியாகுலப்பிரசங்கங்கள் யாவும் காட்சிமயப்படுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகவும் ஒவ்வொரு காட்சிகளும் காண்பிக்கத்தக்க குறிப்பிடங்களாகவே முன்வைக்கப்படுகின்றன. உடக்குப்பாஸ் நிகழ்த்துகை வெவ்வேறு இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு இருந்தாலும் வியாகுலப்பிரசங்கங்களுக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முதன்முதல் பேசாலையிலேயே இக்காட்சிகள் காண்பிக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. வியாகுலப்பிரசங்க காட்சி விளக்கமும் தியானங்களுக்கேற்ப உடக்குப்பாஸ் வடிவமைக்கப்பட்டிருப்பதால் வியாகுலப்பிரசங்க பிரதிக்கேற்ப உடக்குப்பாஸ் ஆரம்பிக்கப்பட்டதென நாம் கொள்ளாவிடினும் ஏற்கனவே ஏதோ ஒரு ஒழுங்கில் காட்சிப்படுத்தப்பட்ட பாஸ் பின்பு வியாகுலப்பிரசங்கத்தை மையப்படுத்தி நெறியாள்கை செய்யப்பட்டிருப்பதாகத் துணியலாம்.

உதாரணமாக ஆண்டவருடைய பாடுகளில் முதலாவதாகக் குறிப்பிடும் பூங்காவனப் பாஸ்க்கு பாடப்படும் வியாகுலப்பிரசங்கத்துக்கு ஏற்றவாறு ஆண்டவர் ஜெத்சமெனிக்கு ஏறி நடந்து போவது போன்ற காட்சிக்கு வழமையான உடக்குப் போலல்லாது ஆண்டவர் தன் முழங்கால்களை மடித்து உண்மையில் ஒருமனிதனின் நடைபோல மாற்றுவதற்கு விசேட பொறி ஒன்றினை நம்முன்னோர்கள் செய்ததாக உடக்குப்பாஸின் காட்சி விதானங்களை ஆக்கும் அவரது வாரிசுகள் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறே ஆண்டவர் மரிக்கும்போது வியாகுலப்பிரசங்கத்தில் இயற்கை தொடர்பாக வர்ணிக்கப்படுவதை அப்படியே காட்சிப்படுத்த சிலுவையின் பின்னால் இயங்கத்தக்க ரைஸ் என்ற நுட்பப் பொறியும் பிளந்து எறியப்படும் கற்பாறைகள் சூரியன் சந்திரன் மற்றும் அசாதாரணங்களையும் காட்சிப்படுத்த முனைந்ததை இங்கு குறிப்பிட முடியும்.

கடந்த காலங்களில் இந்த உடக்குப்பாஸினைக் கட்டமைத்து அதனை மூப்பராக இருந்து வழிநடத்திய தலைமையாளர்களான மறைந்த மரியானு மீயெஸ், எவரோஸ் சக்கரியாஸ் குருஸ், சந்தியா குருஸ், கயித்தான் தலிமை, எலியாஸ் பீரிஸ், வெலிச்சோர் பீரிஸ், வெலிச்சோர் ஜேம்ஸ் பீரிஸ் சூசையப்பு குருஸ் என்ற மூத்தோர்கள் தொடங்கி இக்காலத்தில் உடக்குப்பாஸினைத் தலைமை தாங்கும் கலாபூசணம் அந்தோனி மிராண்டா வரையிலுமான தலைவர்கள் வரை வியாகுலப்பிரசங்கத்தையும் உடக்குப்பாஸையும் இவ்வாறே நோக்குகின்றனர்.

பழைய மேஸ்திரிமார்களின் வழியிலேயே இப்பாஸினை ஆக்கித் தயாரித்த சிறந்த மேஸ்திரிமார்களான காலஞ்சென்ற மனுவெல் மிராண்டா, சந்தியா மிராண்டா, அலெக்ஸாந்தர் மிராண்டா, பஸாகல் இராசையா நீயேஸ், அருளானந்தம் குருஸ், அந்தோனி பீரிஸ், ஆரோக்கியசாமி துரம், ஜேம்ஸ் பீரிஸ் என்போர்களும்கூட உடக்குப்பாஸ் குறித்த தமது கருத்தினை மேற்போந்தவாறே கொண்டிருந்தனர். அத்தோடு இவ் உடக்குப்பாஸ் நிகழ்த்துகையை தமக்குக் கிடைத்த அரும்பெரும் சொத்தாகக் கருதியே பேசாலை மக்கள் அதற்காக இலங்கையில் வேறெங்கும் இல்லாத வகையில் 1907ம் ஆண்டில் பாரிய பாஸ் மண்டபத்தைக்கட்டி முடித்து ஒரு முறைப்படுத்தப்பட்ட காட்சி ஒழுங்குகளையும் அதனோடே இசைந்துசெல்லக்கூடிய வியாகுலப்பிரசங்கத்தையும் நான்கு வருடங்களுக்கொருமுறை உடக்குப்பாஸாகக் காண்பித்து வந்ததும் இக்காட்சிகளைப் பார்ப்பதற்காக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பேசாலைக்கு மக்கள் கூட்டம் வந்து குவிந்து வருவதையும் இங்கு நாம் கவனத்தில் எடுக்கமுடியும்.

இங்கு உடக்குப் பாஸல்லாது மனிதர்கள் நடிக்கும் நாடக அளிக்கையிலோ அல்லது வேறு அரங்கத்திற்கோ பொருந்தத் தக்கதாக வியாகுலப்பிரசங்கம் எழுதப்படவில்லை என்ற துணிபுக்கு மேற்கண்ட காரணங்களால் வரமுடியும்.

கடந்த 08.03.2015ல் திருமறைக்கலாமன்றத்தின் பங்குனி மாத பொற்துாவலில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பிரதேசங்களுக்கிடையேயான பிரசங்க வாசிப்பு நிகழ்வில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பிரதேச பிரசங்க வாசிப்பாளர்களின் பாடும் விதத்தைக் கவனிக்கிறபோது மன்னார் பேசாலையில் இருந்து அந்த நிகழ்வில் பிரசங்க வாசிப்பாளராகக் கலந்துகொண்டவரின் வாசிப்பு இன்னுமொரு காட்சி அளிக்கைக்குப் பொருத்தமான முறையிலே இருந்தமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இசைக்கும் தியானத்திற்கும் ஏற்ற வகையில் ஏனைய பிரதேச வாசிப்பாளர்களின் வாசிப்பு இருந்ததென்றும் மன்னார் பேசாலை அண்ணாவியாரின் வாசிப்பு காட்சிப்படுத்தலுக்கு ஏதுவாக வர்ணனைகளை நிதானித்தும் தியானங்களை வேறுபடுத்துவதுமாக இராக நடை காணப்பட்டது என்றும் அந்நிகழ்வில் கலந்துகொண்ட ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

எனவே பேசாலை உடக்குப்பாஸ் எப்போது தோன்றியிருக்கலாம் என்ற கால முக்கியத்துவத்தையும் உடக்குப்பாஸோடு இசைந்த வியாகுலப்பிரசங்கம் பற்றியதுமான ஒப்புநோக்குகளுக்கிடையே ஒரு முதுபெரும் கலை மரபு பேசாலை மக்களால் கொண்டு நடத்தப்படுவதானது தமிழர்களாகிய நமக்குப் பெருமைதருவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தையொட்டிய

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

**மையப்பொருள் : குடும்பத்துடனான தொடர்பாடல் - அன்பின் தெய்வத்தைச் சந்திக்கின்ற வரப்பிரசாதமான ஓர் இடம்**




குடும்பம் என்பது திருச்சபையின் ஆழமான சிந்தனைக்குரிய விடயமும், சமீபத்திய வழைமைக்கு மாறான ஆயர் மன்றம் மற்றும் அடுத்த ஒக்டோபரில் நடக்க ஏற்பாடாகியிருக்கும் வழமையான ஆயர் மன்றம் ஆகிய இரண்டினதும் படிமுறை சம்பந்தப்பட்டதுமாகும். எனவே அடுத்த உலக தொடர்பாடல் தினத்திற்கான கருப்பொருள் குடும்பம் என்பதைத் தனது கருத்துக் குவிமையமாகக் கொண்டமைதல் பொருத்தமாகவிருக்கும் என்று நான் யோசித்தேன். *எல்லாவற்றையும்விட குடும்பம் என்கின்ற பின்னணியில்தான் நாம் எப்படி தொடர்பாடுவது என்பதைக் கற்றுக்கொள்கின்றோம்.* இந்த அடிப்படையில் கருத்தைக் குவிப்பதானது எமது தொடர்பாடலை மேலும் உண்மையுள்ளதும், மனிதத் தன்மை கொண்டதுமாக அமைக்க உதவும் அதேசமயம், எங்கள் குடும்பத்தைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கவும் உதவும்.

மரியாள் எலிசபெத் அம்மாளைச் சந்தித்தமை தொடர்பாக லூக்கா 1:39-56 சொல்லும் வாசகம் தரும் செய்தியிலிருந்து நாம் உந்துதல் பெற்றுக்கொள்ள முடியும். "எலிசபெத் மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டவுடனே, அவள் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது, எலிசபெத் தூய ஆவியினால் நிரப்பப்பட்டவளாய்ச் சத்தமிட்டுச் சொன்னதாவது. 'பெண்களுக்குள்ளே மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டவள் நீரே, உமது வயிற்றின் கனியும் ஆசீர் நிரம்பப் பெற்றதே" (வச: 41-42).

இந்த நிகழ்வானது எவ்வாறு தொடர்பாடலானது உடலின் மொழியுடன் பின்னிப்பிணைந்த ஒரு உரையாடல் என்று முதலில் எடுத்துக்காட்டுகிறது. மரியாளின் வாழ்த்துக்கு முதல் பிரதிபலிப்பானது எலிசபெத்தின் கருவறையிலிருந்து அக்களிப்பால் துள்ளிய குழந்தையினாலே காட்டப்படுகின்றது. ஒரு வகையில் மற்றவர்களைச் சந்திக்கின்றபோது ஏற்படும் மகிழ்ச்சியானது, நாம் பிறக்குமுன்னமே கற்றுக்கொண்டுள்ளபடி, ஏனைய அனைத்துத் தொடர்பாடல் வடிவங்களினதும் மாதிரிகையும், அடையாளமுமாகும். எங்களைத் தாங்கி நிற்கும் 'கருவறையானது' செவிமடுத்தலுக்கான இடமாகவும், தொடுகை மூலம் பாதுகாப்பான சுற்றாடலில் இருந்துகொண்டு, அன்னையின் இதயத்துடிப்பின் ஓசை தரும் நம்பிக்கையுடன் வெளி உலகுடன் எம்மைப் பழக்கப்படுத்திக்கொள்ளுவதற்கும் முதல் பாடசாலையாக அமைகின்றது, இரண்டு நபர்களுக்கிடையிலான இந்தச் சந்திப்பு இருவரதும் தனித்துவம் குறைவுபடாமல், நெருக்கமாக உறவுகொள்ளச் செய்வதுடன், நிரம்ப உத்தரவாதங்களை உள்ளடக்கிய சந்திப்பாகவும் அமைந்து, எமது முதல் தொடர்பாடல் அனுபவமாகவும் உருவாகிவிடுகிறது. தத்தம் தாயின் வயிற்றினின்றும் உதித்து வந்தவர்கள் என்கின்ற வகையில் இந்த அனுபவத்தில் நாம் அனைவருமே பங்குகொள்கின்றோம்.

நாம் இந்த உலகிற்குள் வந்தபின்னரும்கூட, ஒரு வகையில் குடும்பம் என்கின்ற 'கருவறையில்'தான் இருக்கின்றோம். *இது ஒருவரோடொருவர் உறவுள்ள பல நபர்களால் ஆன கருவறையாக இருக்கிறது:* "ஒரு குடும்பத்தில் வேறுபாடுகள் பல இருப்பினும், மற்றவர்களுடன் வாழப் பழகுகிறோம்" (Evangelii Gaudium- The Joy of the Gospel - 66). தமக்கிடையே பால் மற்றும் வயது வேறுபாடுகளிலிருப்பினும், குடும்ப உறுப்பினர்கள் தமக்கிடையேயுள்ள இணைப்பின் காரணத்தால் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்கின்றனர். இந்த உறவு முறைகள் விரிவடையும்போது, வயது வேறுபாடுகள் அதிகரிக்கும்போது, எமது வாழ்க்கைச் சுற்றாடலானது மிகவும் வளமுள்ளதாக அமைகின்றது. *மொழியின்* வேரிலே அமைகின்ற இந்தப் *பிணைப்பானது* அந்தப் பிணைப்பையே பலமுள்ளதாக்குகிறது. நாங்கள் எமது மொழியை உருவாக்குவதில்லை. அதை நாம் பெற்றுக்கொண்டதனால் அதை நாம் பயன்படுத்துகின்றோம். எங்கள் குடும்பத்திலேயே நாம் எமது *'தாய் மொழி'*யை - நமக்கு முன் சென்றவர்களின் மொழியை - பேசப் பழகுகின்றோம் (2 Macc 7:25,27). எமது குடும்பத்தில் நமக்கு முன்சென்றவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எங்கள் இருப்பை உறுதிப்படுத்தி நாம் எமது முறைக்கு உயிர்களை உருவாக்குவதுடன் ஏதாவது நன்மையானதாகவும் அழகாகவும் செய்துநிற்கப் பண்ணியிருக்கிறார்கள். நாங்கள் பெற்றுக்கொண்டதால் வழங்கவும் முடியும்.

இந்தப் பெறுமதிமிக்க சுற்றுவட்டம் எமது குடும்பங்களில் தம் குடும்ப உறுப்பினர்களுடனும், ஏனையோருடனும் தொடர்பாடும் தகமையின் இதயத்தில் அமைகின்றது. இன்னும் பொதுவாக, இதுவே அனைத்துத் தொடர்பாடல்களுக்கும் ஒரு மாதிரிகையாக அமைகின்றது. எமக்கு 'வழிகாட்டும்' இந்தத் தொடர்பாடல் அனுபவமானது மிகவும் அடிப்படையான தொடர்பாடல் வடிவமான செபத்தை தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கும் பின்னணியாகக் குடும்பங்களை ஆக்குகின்றது. பெற்றோர் தமது பிறந்த குழந்தைகளை துயில்கொள்ள வைக்கின்றபோது அவர்கள் அடிக்கடிஅக்குழந்தைகளை இறைவனிடமே ஒப்படைத்து அவர்களைக் கண்காணிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றார்கள். குழந்தைகள் கொஞ்சம் வளர்ந்ததும், பெற்றார் சில எளிமையான செபங்களைத் தமது பாட்டன், பாட்டி, உறவினர்கள், நேயாளிகள், துன்பப்படுவோர், கடவுளின் உதவியை வேண்டுவோர் போன்ற ஏனையோரை அன்போடு மனதிற்கொண்டு செபிக்கச் சொல்லித் தருகின்றார்கள். எங்கள் குடும்பங்களிலேதான் எம்மில் பெரும்பாலானோர் எமது தொடர்பாடலின் சமயப் பரிமாணங்களைக் கற்றுக்கொண்டோம். அவை கிறீஸ்தவத்தைப் பொறுத்தமட்டில் இறைவன் எம்மீது பொழிந்தபடி நாம் மற்றவருக்குப் பகிர்ந்து வழங்கும் அன்போடு இரண்டறக் கலந்து அமைகின்றது.

குடும்பத்தில் நாம் ஒருவரையொருவர் அரவணைக்கவும் ஆதரிக்கவும் கற்றுக்கொள்ளுகின்றோம். முகபாவனையை வேறுபடுத்தி உணருகின்றோம், அமைதியின் பொழுதுகளை விளங்கிக்கொள்ளுகின்றோம், இதுவரை ஒருவரையும் தெரிந்துகொள்ளாவிடினும், மற்றவருக்கு முக்கியமாகத் தென்படும் ஏனையவரோடு சேர்ந்து சிரிக்கவும் அழவும் செய்கின்றோம், இது நெருக்கத்தை உருவாக்கவும், அடையாளங்கண்டுகொள்ளவுமான தொடர்பாடலின் கருத்தினைப் புரிந்துகொள்ள எமக்குப் பெருமளவில் உதவுகிறது. ஒருவரை நெருங்குவதன் மூலமாக எமக்கிடையிலான தூரத்தை குறைக்கின்றபோதும், ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளுகின்றபோதும் நாங்கள் நன்றியுணர்வையும், மகிழ்ச்சியையும் அனுபவிக்கின்றோம். மரியாளின் வாழ்த்தும், குழந்தையின் அசைவும் எலிசபெத்திற்கு ஆசீராக அமைகின்றன, அவை பின்னர் மரியாள் தனக்கும் தன் மக்களுக்கும் இறைவன் தம் மனதிற்கொண்டிருக்கும் அன்பின் திட்டத்தைப் புகழ்ந்து வருணிக்கும் அற்புதமான இறை புகழ் பாடலால் (Magnificat) தொடரப்படுகின்றன. விசுவாசத்தோடு உச்சரிக்கப்படக்கூடிய ஒரு 'ஆம்' என்கின்ற சொல்லானது எம்மை மட்டுமல்ல, இவ்வுலகில் நாம் கொண்டிருக்கின்ற இடத்திற்கும் மேலானவர்களாக எம்மை மாற்றும் சக்திகொண்டது, 'சந்திப்பு' என்பது எமது சிறிய உலகுக்குள்ளே எம்மைச் சிறைப்படுத்தி வைத்திராமல், மற்றவர்களை நோக்கிச் செல்லும்படியாக வாசற்கதவுகளைத் திறப்பது என்பதாகும், அவ்வாறே குடும்பம் ஒன்று தன்னைத் தாண்டி அடுத்தவர் நோக்கிச் செல்லும்போது உயிரோட்டமுள்ளதாக மாறுகின்றது. ஒரு குடும்பம் தனது வாழ்வு மற்றும் ஒன்றிப்புச் செய்தியை இவ்வாறு தொடர்பாடல் மூலம் வெளிக்கொணரும்போது, சுலபத்தில் நலிவடைந்த குடும்பங்களுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகின்றபோது, குடும்பங்களின் குடும்பமான திருச்சபையைத் தானாக உருவாகச் செய்கிறார்கள்.

வேறு எல்லா இடங்களிலும் பார்க்க குடும்பம் ஒன்றில்தான் எங்களதும் மற்றவர்களதும் எல்லைகள் பற்றியும், அடுத்தவரோடு அமைதியாக வாழுகின்றபோது அங்கு பின்னிப்பிணைந்துள்ள பெரியதும் சிறியதுமான பிரச்சினைகளைப்பற்றியும் நாளாந்தம் எம்மால் அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்றது. குறைகளற்ற குடும்பம் ஒன்று எங்கேயும் கிடையாது. முழுமையின்மை குறித்தோ, பலவீனங்கள் குறித்தோ, குழப்பங்கள் மோதல்கள் குறித்தோ நாம் அஞ்சக்கூடாது. அதைவிட, அவற்றை எவ்வாறு ஆக்கபூர்வமாகக் கையாளமுடியும் என்பது குறித்தே கற்றுக்கொள்ள வேண்டும். எங்கள் பாவங்கள், எல்லைகளுடன் ஒருவரையொருவர் அன்புசெய்து நிற்கும் எம் குடும்பமானது, மன்னிப்பின் பாடசாலையாகவும் அமைந்து நிற்கின்றது. மன்னிப்பானது தொடர்பாடலின் ஒரு படிமுறையாகவும் அமைகின்றது. ஒரு மனம் வருந்துதல் தெரிவிக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்படும்போது உடைந்துவிட்ட தொடர்பாடலானது மீளமைக்கப்படவும், கட்டியெழுப்பப்படவும் முடியுமாக இருக்கிறது. மற்றவர்களுக்குச் செவிமடுக்கவும், மரியாதையுடன் பேசவும், மற்றவர்களது கருத்துக்கு முரண்படாத வண்ணம் தனது கருத்தை வெளிக்காட்டவும் ஒரு குடும்பத்தில் கற்றுக்கொள்ளும் குழந்தையானது, சமுதாயத்தில் கலந்துரையாடலுக்கும், ஒப்புரவுக்குமான ஒரு சக்தியாக மிளிரும்.

தொடர்பாடலுக்கெதிரான சவால்கள்பற்றி வரும்போது, ஒன்றல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடு கொண்ட குழந்தைகள் குடும்பங்களில் இருக்குமாகில், எங்களுக்கு அதிகம் கற்பிக்க முடியுமாக இருக்கும். ஒரு தெறிவினை, உணர்திறன், மனோ வளர்ச்சி குறைவு போன்ற வரையறைகள் உள்ள நிலை நமக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம், ஆனாலும், அன்பு செய்யும் பெற்றோர், உடன் பிறப்புக்கள், மற்றும் நண்பர்களின் நன்றிக்குரிய செயற்பாட்டினால் எல்லோருடனும் திறந்த மனப்பான்மைக்கு அதிக உணர்திறனற்ற, பகிர்ந்துகொள்ளும், தயார்நிலைத் தொடர்பாடலாகவும் அது அமையக்கூடும். மேலும் இது பாடசாலைகள், பங்குகள், மற்றும் சபைகளை வரவேற்கும், அனைவரையும் அணைத்து நிற்கும், அமைப்புக்களாக மாற்றவும் உதவும். மக்களை அடிக்கடி திட்டித் தீர்க்கின்ற, கெட்டபேச்சுக்களைப் பயன்படுத்துகின்ற, மற்றவர்கள்பற்றி மோசமாகக் கதைக்கின்ற, ஆவலாதிப் பேச்சுக்கள் மூலம் மனித சுற்றாடலின் ஒற்றுமைக்கே வேட்டுவைக்கின்ற, நஞ்சை விதைக்கின்ற உலகிலே, குடும்பங்கள் எமக்குத் தொடர்பாடல் என்பது ஒரு ஆசீர்வாதமாகும் என்பதை விளங்கிக்கொள்ள எமக்குக் கற்றுத் தரமுடியும். வெறுப்பு மற்றும் வன்முறைகள் ஆதிக்கம் செலுத்துவதாகத் தோன்றும் சூழ்நிலையொன்றில், குடும்பங்கள் கற்சுவரினால் பிரிக்கப்பட்ட சூழலில், அல்லது தப்பபிப்பிராயம் மற்றும் குரோதம் என்கின்ற தகர்க்கமுடியாச் சூழலில், "போதுமென்றால் போதும்" என்று கூறுவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளதாகத் தென்படும்போது, சபிப்பதால் அன்றி, ஆசீர் வழங்குவதால், ஒதுக்கிவிடாமல் அன்றி சந்திப்பதால், சண்டையிடாது ஏற்றுக்கொள்வதால் எம்மால் தீங்கின் முறுக்கை உடைக்கமுடிவதுடன், நன்மைத்தனம் எப்போதுமே சாத்தியமானதொன்று என்பதை எண்பிக்கவும், எங்கள் குழந்தைகளுக்கு மற்றவர்களோடு இரண்டறக் கலக்கவும் கற்பிக்க முடியும். குறிப்பாக இளைய சமுதாயத்தின் அத்தியாவசிய பாகமாக மாறியுள்ள இன்றைய நவீன தொடர்புச் சாதனங்கள் தொடர்பாடலுக்கு உதவியாகவோ அல்லது தடையாகவோ குடும்பத்திலும், குடும்பங்களுக்கிடையிலும் அமைந்துவிடுவதுமுண்டு. தொடர்புச்சாதனங்கள் மற்றவர்களுக்குச் செவிமடுப்பதைத் தவிர்க்கின்ற வழியாக அமையும்போதும், தொடுகையை தவிர்க்கப்பண்ணும்போதும், 'மௌனம் என்பது தொடர்பாடலின் பிரிக்கமுடியா மூலம் என்பதையும், அது இல்லாதபட்சத்தில் செழிப்பான அர்த்தம்கொண்ட எந்த வார்த்தைகளும் இருக்க முடியாது' (பதினாறாம் ஆசீர்வாதப்பரின் 2012 ஆம் ஆண்டின் உலக தொடர்பாடல் தினச் செய்தி) என்பதை நாம் மறக்கப்பண்ணி, மௌனத்தினதும், ஓய்வினதும் ஒவ்வொரு கணத்தையும் நிரப்பியமையும்போதும், ஒரு தடையாக அமைகிறது, மக்கள் தமது கதைகளைப் பகிர்ந்துகொள்ளச் செய்யும்போது, தொலை தூரத்து நண்பர்களுடன் தொடர்பில் இருக்கப்பண்ணும்போது, மற்றவர்களுக்கு நன்றி கூறவோ அல்லது அவர்களின் மன்னிப்பைக் கோரவோ அல்லது புதிய சந்திப்புக்களுக்காகக் கதவுகளைத் திறந்துவிடவோ செய்யும்போது தொடர்புச் சாதனங்கள் தொடர்பாடலுக்கு உதவியாக அமையமுடியும்.

மற்றவர்களைச் சந்திப்பதில் உள்ள அதிமுக்கியத்துவம் தொடர்பிலான விழிப்புணர்வில் நாம் நாளும் வளரும்போது, இந்தப் 'புதிய சாத்தியங்கள்' என்கின்ற தொழில்நுட்பங்கள் எங்களை ஆட்கொள்ள அனுமதிப்பதிலும் பார்க்க நாம் அவற்றைப் புத்திசாலித்தனமாக பாவிக்கச் செய்கின்றோம். இங்குகூட பிள்ளைகளைத் தம் உபகரணங்களுடன் விட்டுவிடாது பெற்றோரே பிரதம ஆசிரியர்களாக அமைகின்றனர். மனிதனின் மாண்புடன் இசைந்ததாக பொது நன்மைக்கான சேவையாகத் தொடர்புச்சாதன சுற்றாடலில் எப்படி வாழ்வது என்று தம் பிள்ளைகளுக்குச் சொல்லித்தரும்படியாக பெற்றோருக்கு உதவுமாறு, கிறீஸ்தவ சமூகமானது அழைக்கப்படுகின்றது. இன்று நாம் எதிர்நோக்கும் பெரிய பிரச்சினை எப்படித் தகவல்களை உருவாக்குவதும் பெற்றுக்கொள்வதும் என்பதல்ல, மாறாக ஒருவரோடொருவர் எவ்வாறு பேசுவது என்பதை மீளவும் கற்றுக்கொள்வதாகும். முற்கூறப்பட்ட விடயத்தில் இதனை இன்றைய எமது முக்கியமான செல்வாக்குள்ள நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊக்கப்படுத்துகின்றன. தகவல்கள் முக்கியமானவைதான். ஆனாலும் அது போதாதது. மிகவும் அடிக்கடி விடயங்கள் எளிமைப்படுத்தப்படுகின்றன. ஒருவரொருவருக்கெதிராக வித்தியாசமான கோணங்கள், நோக்குகள் வீசப்படுகின்றன.ஒன்றை முழுமையாக நோக்குவதைத் தவிர்க்கப்பண்ணி மக்கள் பக்கச் சார்பு எடுக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள்.


முடிவாக, குடும்பம் என்பது விவாதத்துக்குரிய கருப்பொருளோ அல்லது கற்பனை வாதத்திற்கான போர்க்களமோ அல்ல. மாறாக, தொடர்பாடல் இடம்பெறும் பின்னணியில், நெருக்கமான உறவின் அனுபவத்தில் தொடர்பாடலை நாம் கற்றுக்கொள்ளும் சுற்றாடலாக, அதாவது "தொடர்பாடும் சமூகமாக" அது அமைகின்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இரக்கத்தின் புனித ஆண்டை அறிமுகம் செய்து திருத்தந்தை வழங்கிய 'இரக்கத்தின் திருமுகம்' ஆணை அறிக்கையின் சுருக்கம்








"Misericordiac Vultus" 'இரக்கத்தின் திருமுகம்' என்ற தலைப்பில் இரக்கத்தின் புனித ஆண்டை அறிவிக்கும் ஆணை அறிக்கையை (Bull of Indiction) கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார். வருகிற டிசம்பர் 8ம் திகதி தொடங்கும் இரக்கத்தின் சிறப்பு ஜூபிலி ஆண்டு முந்தைய ஜூபிலி ஆண்டுகள்போல் உரோம் நகரில் மட்டும் சிறப்பிக்கப்படாமல் உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும், மக்கள் பெருமளவாகச் செல்லும் திருத்தலங்களிலும் சிறப்பிக்கப்படுகின்றது. அதன்மூலம் மக்கள் இறையருளால் தொடப்பட்டு மனமாற்றம் அடைய வேண்டும் என்று திருத்தந்தை விரும்புகின்றார். இரக்கத்தின் ஜூபிலி ஆண்டு இக்காலத்துக்கு அவசியமா? என்ற கேள்வியை மீண்டும் எழுப்பி அதற்குப் பதிலும் தந்துள்ளார் திருத்தந்தை.

பெரும் வரலாற்று மாற்றம் இடம்பெற்றுவரும் இக்காலத்தில் கடவுளின் இருப்பு மற்றும் அவர் மனிதரோடு மிக நெருக்கமாக இருக்கிறார் என்பதை இன்னும் அதிகமான சான்றுகள் மூலம் வெளிப்படுத்த திருஅவை அழைக்கப்படுகின்றது. மிகவும் விழிப்புடன் இருந்து எது இன்றியமையாதது என்பதை நம்மில் பார்ப்பதற்கு நம்மை நாமே கட்டியெழுப்ப வேண்டும். நம் கடவுளாம் தந்தையின் இரக்கத்தின் அடையாளமாகவும் கருவியாகவும் திருஅவை மாறவேண்டும் (யோவா. 20: 21-23) என்று நம் ஆண்டவர் உயிர்ப்பு நாளன்று தனது திருஅவையிடம் கொடுத்த மறைப்பணியின் பொருளை மீண்டும் கண்டுணருவதற்கான காலம் இது.

இரக்கத்தின் திருமுகம் என்ற திருத்தந்தையின் ஆணை அறிக்கை 25 எண்களைக் கொண்டு இரக்கத்தின் புனித ஆண்டுபற்றி விரிவாக விளக்கியுள்ளது. திருஅவையின் அண்மை வரலாற்றில் டிசம்பர் 8 வளமையான பொருளைக் கொண்டுள்ளது. வருகிற டிசம்பர் 8ம் திகதி இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நிறைவுற்றதன் 50ம் ஆண்டு நிறைவு நாளாகும். இந்தப் புனித ஆண்டு ஆரம்பிக்கும் இந்நாளில் நான் புனிதக் கதவைத் திறப்பேன். இந்த நிகழ்வு உயிர்த்துடிப்புடன் இருக்க வேண்டுமென்று திரு அவை அதிகமாக உணருகிறது (எண் 4). இந்தப் பொதுச் சங்கத்தோடு திருஅவை தனது வரலாற்றின் புதிய தளத்தில் நுழைந்தது. தூய ஆவியாரின் உண்மையான மூச்சுக்காற்றை வலுவாக உணர்ந்த பொதுச்சங்கத் தந்தையர், தம் காலத்து மக்களுக்குக் கடவுள்பற்றி இன்னும் எளிதான வழியில், சென்றடையும் முறையில் பேசவேண்டிய தேவையை உணர்ந்தனர். திருஅவையை மதில் அரண் போன்று நீண்டகாலமாக வைத்திருந்த சுவர்கள் தகர்க்கப்பட்டன. மற்றும் நற்செய்தியை புதிய வழியில் அறிவிப்பதற்கான காலம் வந்துள்ளது. இந்த ஜூபிலி ஆண்டு 2016ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழா திருவழிபாட்டுடன் முடிவுக்கு வரும். அந்நாளில் புனிதக் கதவு முத்திரையிடப்பட்டு மூடப்படும். ஒரு சிறப்பு அருளின் காலத்தை நமக்கு இறைவன் அருளியதற்காக அந்நாளில் நாம் நன்றி கூறுவோம். திருஅவையின் வாழ்வையும் முழு மனித சமுதாயத்தையும் கிறிஸ்து அரசரிடம் அர்ப்பணித்து ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை நாம் ஒன்றிணைந்து அமைப்பதற்கு காலைப் பனித்துளிகள்போல நம்மீது அவரின் இரக்கத்தைப் பொழியுமாறு மன்றாடுவோம்.

இரக்கத்தின் திருமுகம் என்ற திருத்தந்தையின் ஆணை அறிக்கை "இயேசுக்கிறிஸ்து வானகத் தந்தையின் இரக்கத்தின் திருமுகம்" என்று சொல்லித் தொடங்குகிறது. கிறிஸ்தவ விசுவாசத்தின் பேருண்மையை இச்சொற்கள் இரத்தினமாகச் சுருக்கியுள்ளன. இறைஇரக்கம் கருணை என்பது மறைபொருளான சொல் அல்ல. ஆனால் இது இயேசுவின் திருமுகத்தை ஏற்று தியானித்து அதற்கு பணிவிடை செய்ய அழைப்பதாகும். நாம் இறை இரக்கப் பேருண்மையை இடைவிடாமல் தியானிக்க வேண்டும். இது மகிழ்வின், சமாதானத்தின், சாந்தத்தின், மனஅமைதியின் நல்ஊற்றாகும். நம் மீட்பு இதைச் சார்ந்தே உள்ளது. இறைவனின் இரக்கம் என்ற சொல் மூவொரு இறைவனின் பேருண்மையை வெளிப்படுத்துகிறது. இது கடவுள் நம்மைச் சந்திக்கவரும் மிகஉன்னதச் செயலாகும். இறைஇரக்கம் என்பது நம் வாழ்வுப் பாதையில் நம் சகோதர சகோதரிகளின் கண்களை நேர்மையுடன் உற்றுநோக்குவது. நமது பாவநிலையையும் விடுத்து, நாம் இறைவனால் அன்புகூரப்படுகிறோம் என்ற நம்பிக்கைக்கு நம் இதயங்களைத் திறந்து, கடவுளையும் மனிதரையும் இணைக்கும் பாலமாகும் (எண் 2). இரக்கத்தின் உடல் அளவிலான மற்றும் ஆன்மீகப் பணிகள் வறுமையின்முன் நம் மனச்சாட்சிகளைத் தட்டி எழுப்புகின்றன. எனவே கடவுளின் இரக்கத்தில் சிறப்பு அனுபவம் பெற்றுள்ளதை உணர்த்தும் நற்செய்திக்குள் நாம் இன்னும் மிக ஆழமாக நுழைவோம்.

இரக்கத்தின் மறைப்பணியாளர்களை (எண் 18) அனுப்புவது பற்றியும் திருத்தந்தை இந்த ஆணை அறிக்கையில் அறிவித்துள்ளார். இவர்கள் இறைமக்களுக்கு திருஅவையின் தாய்மைப் பண்பின் அடையாளமாக இருப்பார்கள். திருப்பீடத்துக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ள பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை சில அருள்பணியாளர்களுக்கு திருத்தந்தை வழங்குவார். மன்னிப்பைத் தேடுபவர்களை இறைவன் மன்னிக்கத் தயாராக உள்ளார் என்பதன் உயிருள்ள அடையாளங்களாக இவர்கள் இருந்து அத்தகைய மக்களை வரவேற்பார்கள். இவர்களே இரக்கத்தின் மறைப்பணியாளர்கள். இந்தப் புனித ஆண்டில் இரக்கத்தின் செய்தி அனைவரையும் சென்றடைய வேண்டும். இறைஇரக்கத்தை அனுபவிக்க வேண்டும். இந்த அழைப்பை யாரும் புறக்கணிக்க வேண்டாமெனத் திருத்தந்தை கேட்டுள்ளார். இறைவனின் அருளிலிருந்து தங்களை அந்நியப்படுத்தும் நடத்தை உள்ளவர்கள் மனம்மாற வேண்டுமென்று மிகுந்த உருக்கத்துடன் அவர்களுக்கு நேரடி அழைப்பை திருத்தந்தை விடுத்துள்ளார். திருத்தந்தை இப்படிச் சொல்லும்போது திட்டமிட்ட குற்ற நிறுவனங்களைச் சேர்ந்துள்ள ஆண்கள் பெண்கள் அனைவரையும் சிறப்பாகத் தனது மனதில் நினைத்துக் சொல்வதாக அவ்வாணை அறிக்கையில் கூறியுள்ளார். பாவத்தை வெறுத்தாலும் பாவியை ஒருபோதும் புறக்கணிக்காத இறைமகன் இயேசுவின் பெயரால் இவர்களிடம் இதைக் கேட்பதாகவும் கூறியுள்ளார் திருத்தந்தை.




இதே அழைப்பை ஊழல் குற்றங்களைச் செய்பவர் அல்லது அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் முன்வைக்கிறேன் என்றும் திருத்தந்தை கூறியுள்ளார். ஊழல் குற்றம், தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வின் அடித்தளத்தையே அச்சுறுத்தவதால் இது பெரிய பாவம். ஊழல் நம்பிக்கையோடு வருங்காலத்தை நோக்குவதைத் தடைசெய்கிறது. ஏனெனில் இது வறியவர்களையும், பலவீனர்களையும் அழிப்பதற்குத் திட்டமிடும் போராசையாகும். ஊழல் ஒரு தீமை. இது துர்மாதிரிகைகளைப் பொதுப்படையாகப் பரப்புகின்றது. வாழ்வை மாற்றுவதற்கு வாய்ப்புள்ள காலம் இது. இறைவனால் தொடப்படுவதற்கு ஏற்ற காலம் இது (எண் 19). இரக்கம் யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பொதுவான ஒரு பண்பு. இறைவனின் இரக்கத்தைக் கொண்டாடும் இந்த ஜூபிலி ஆண்டில் இந்த மதங்களோடும் பிற உயரிய மத மரபுகளோடும் சந்திப்பு ஊக்குவிக்கப்படும் என்று நம்புகிறேன். ஒருவர் மற்றவரை அறிந்து, புரிந்துகொள்ள இந்த ஆண்டு உரையாடலை ஊக்குவிப்பதாக. முடியமான மற்றும் மதிப்பற்ற தன்மையை அகற்றுவதாக ஒவ்வொருவிதமான வன்முறையும் பாகுபாடும் ஒழிவதாக (எண் 23).

நம் இறைவன் நமக்குத் தொடர்ந்து வழங்கும் இரக்கம் நம் தினசரி வாழ்வில் வாழ்ந்து பகிரப்படுவதாக. கடவுள் நம்மை வியப்புகளால் நிரப்ப இந்த ஜூபிலி ஆண்டில் நம்மை அனுமதிப்போம். அவர் தமது இதயக்கதவுகளைத் திறப்பதற்கு ஒருபோதும் சோர்வடையமாட்டார். அவர் நம்மை அன்புகூர்கிறார். அவர் தமது அன்பை நம்முடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார் என்று கூறுகிறார் திருத்தந்தை. அதேசமயம் இந்த ஜூபிலி ஆண்டில் மன்னிப்பு, மனவலிமை, அன்பு ஆகிய தெளிவான செய்திகளைத் திருஅவை வழங்குகிறது. திருஅவையும் இரக்கத்தைப் பொழிவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை. எப்போதும் பரிவையும் ஆறுதலையும் வழங்குகின்றது. "ஆண்டவரே, உமது இரக்கத்தையும் உமது பேரன்பையும் நினைந்தருளும். ஏனெனில் அவை தொடக்கமுதல் உள்ளவையே" (தி.பா.25:6) என்று நம்பிக்கையோடு அனைவரும் மன்றாடுவோம். இவ்வாறு திருத்தந்தை கூறியுள்ளார்.

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 142

*தொகுப்பு : திரு ச. மாட்டின் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் ஒசேயாவின் நூல்களின் 8ம் அதிகாரத்திலிருந்து 14ம் அதிகாரம் வரையுள்ள பகுதிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன. இது ஒரு மிகக்குறுகிய நூல் என்பதோடு ஒரு குறுகிய கால எல்லையைத் தன்னுள்ளே அடக்கியுள்ளது. யூத இனத்தின் பன்னிரெண்டு கோத்திரங்களுள் மூன்று கோத்திரங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வுப் பின்னணியைச் சாடி இறைவாக்கு உரைக்கப்படுகின்றது.

இஸ்ராயேல், எப்ராயிம், யாக்கோப்பு ஆகிய கோத்திரங்களைச் சேர்ந்த மக்கள் எகிப்திலிருந்து இறைவனின் ஆணையால் மோயீசனால் மீட்கப்பட்டு வாக்களிக்கப்பட்ட மண்ணுக்கு வந்த பின்பு, தங்கள் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு சிலைகளை உருவாக்கி சிலை வழிபாடுகளில் ஈடுபட்டு வந்ததும் அதனோடு விபசாரத்தில் ஈடுபட்டு வந்ததும் யாவேயை மிகவும் புண்படுத்தியது. இந்த வேதனைகளை இறைவன் ஒசேயாவின் வழியாக வெளிப்படுத்துகின்றார்.

அவரது வேதனையின் கொடூரம் அவர் வார்த்தைகளில் வெளிப்படுகின்றது. சிங்கத்தைப்போல் அவர்களைக் கீறிக்கிழிப்பேன் என்றும் வேங்கைபோல் கரடிபோல் அவர்களை சின்னாபின்னப்படுத்துவேன் என்றும் கூறும் அவர், இவ்வளவு வேதனைகளுக்குப் பின்பும் அவர்களை மீண்டும் கட்டியெழுப்புவேன் என்று நம்பிக்கையைத் தருவதன் மூலம் தான் மன்னிக்கும் தேவன், நேசிக்கும் தேவன் என்பதையும் உறுதிப்படுத்துகிறார்.

**தொடர்ந்து நமது வினாக்களுக்கு வருவோம் :**

1. சமாரியர்கள் காற்றை விதைக்கிறார்கள். அவர்கள் அறுவடை செய்யப்போவது எதை?
2. "இறைவாக்கினன் மூடன், இறைவாக்குப் பெற்றவன் வெறிகொண்டு அலைகிறான்" என்று இஸ்ராயேல் மக்கள் எதனால் கூறுகின்றார்கள்?
3. "அவர்களின் மேன்மை பறவைகள்போல் பறந்தோடிவிடும். அவர்களுக்குள் பிறப்போ கருத்தாங்குதலோ கருத்தரிப்போ இராது. அவர்கள் பிள்ளைகளைப் பெற்றுவளர்த்தாலும் ஒருவரும் எஞ்சியிராமல் பிள்ளைகளை இழக்கச் செய்வேன்." இது யாரைப்பற்றி குறித்து உரைக்கப்பட்ட தண்டனை?
4. "அப்போது அவர்கள் மலைகளைப் பார்த்து எங்களை மூடிக்கொள்ளுங்கள். குன்றுகளைப் பார்த்து எங்கள்மேல் விழுங்கள் என்று சொல்வார்கள்." யார் சொல்வார்கள்? எப்போது சொல்வார்கள்?
5. நீங்கள் கொடுமையை உழுதீர்கள், தீவினையை அறுவடை செய்தீர்கள், பொய்மைக் கனிகளைத் தின்றீர்கள். உங்கள் தேர்ப்படைகளின்மீதும் உங்கள் போர்வீரர்களின் எண்ணிக்கையின்மீதும் நம்பிக்கை வைத்தீர்கள். அதனால் அவர்களுக்கு நிகழ்ந்தது என்ன?
6. பரிவு என்னும் கட்டுக்களால் அவர்களைப் பிணைத்து, அன்புக் கயிறுகளால் கட்டி நடாத்தி வந்தேன். அவர்கள் கழுத்தின்மேலிருந்த நுகத்தை அகற்றினேன். அவர்கள் பக்கம் சாய்ந்து உணவூட்டினேன். ஆயினும் எகிப்து நாட்டிற்கே திரும்பிப் போனார்கள். அசீரியா அவர்களை அரசாளும். ஏன்?
7. எப்ராயிம் மக்களின் பொய்க்கூற்று என்னைச் சூழ்ந்துள்ளது. இஸ்ராயேல் குடும்பத்தாரின் வஞ்சம் என்னை வளைத்துக் கொண்டுள்ளது. ஆனால் இன்னும் இறைவனோடு நடக்கின்றான். யார்? தூயவராம் ஆண்டவருக்கு உண்மையுள்ளவனாய் இருப்பவன் யார்?
8. பெரியவனாக வளர்ந்தபோது கடவுளோடு போராடிய யாக்கோப், வானதூதரோடு போராடி அவற்றை வென்ற யாக்கோப், கண்ணீர் சிந்தி அழுது அவர் அருளைப் பெற்ற யாக்கோப் ஆண்டவரை எங்கே சந்தித்தான்?
9. ஆதலால் அவர்கள் காலையில் காணும் மேகம்போலும் விரைவில் உலர்ந்துபோகும் பனித்துளிபோலும் சுழல் காற்றில் சிக்கிய களத்துத் துரும்புபோலும் பலகணி வழியாய் வெளிப்பட்ட புகைபோலும் ஆவார்கள். யார்? ஏன்?
10. இஸ்ராயலே, உன் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வா. திரும்பிவந்து இவ்வாறு சொல்லுங்கள். எவ்வாறு?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 140 இற்கான கேள்விகளுக்கு 24 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

**ம. எவெறஸ்ரா, பரிகாரிகண்டல், முருங்கன்.**

**பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும்**

### 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
2. கி. ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
3. ஏ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
4. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
5. ஜீ. ஜீவறொமா, பாரிகாரிகண்டல், முருங்கன்.
6. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
7. யோ. ஜெனோன்சி லெம்பேட், தோமஸ்புரி, வங்காலை.
8. சு. அன்ரனி டொபிக்ஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
9. து. நிஷா, பள்ளிமுனை, மன்னார்.
10. யோ. யூடிற் டலிமா, தோமஸ்புரி, வங்காலை.

**"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே, நீ எனக்கே சொந்தம்" (எசாயா 43:1)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.155

## யோபு நூல் 1 முதல் 42 அதிகாரங்கள் முடிய

உங்கள் விடைகளை ஜுலை மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❖ | 01 | | 12 | ❖ | | | | 13 | ❖ |
| 02 | | | | | 14 | | 30 | | |
| | 32 | 03 | | | | 17 | 16 | | 15 |
| 04 | | | 23 | | 29 | | | | 18 |
| | | 24 | | 33 | | 28 | | 31 | |
| ❖ | 09 | | | ❖ | | | | | ❖ |
| 08 | | 34 | | 20 | | | 05 | | |
| | | | | | | 19 | | 06 | |
| 25 | | 07 | | | 26 | 35 | | | 27 |
| ❖ | 11 | | | 21 | ❖ | | 10 | | 22 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. அவருடைய துயரின் மிகுதியைக் கண்டு எவரும் ............ ஒரு வார்த்தைகூட அவருடன் பேசவில்லை.
2. கல்லறை காணின் ............ பெய்தி அகமகிழ்வோர்க்கு, வாழ்வு வழங்கப்படுவதேன்?
3. அவர் மானிடருக்குக் கூறினார்: ஆண்டவருக்கு அஞ்சுங்கள் அதுவே ............
4. கதிர் நுனிபோல் ............ எறியப்பட்டனர்.
5. அவர் ............ சுவடுகளை என் கால்கள் பின்பற்றின.
6. கொடியவரை அவர் ............ விடார்.
7. கண்ணி அவர்களின் ___ சுருக்கு அவர்களை ............ இழுக்கும்.
8. மக்களினங்களைப் பெருகச் செய்கின்றார். பின்பு அழிக்கின்றார். மக்களினங்களைப் ............ ச் செய்கின்றார்.
9. பொன்னைப் புழுதியிலே எறிந்து, ............த் தங்கத்தை, ___ வீசிவிடும்!.
10. ஒருமுறை பேசினேன் .................... மொழி உரையேன்.
11. .......................... என்ற நாட்டில் யோபு என்ற ஒருவர் இருந்தார்.
16. பெருந்தடியைத் தாளடி எனக்கருதும்; எறி ............... ஒலி கேட்டு எள்ளி நகைக்கும்.
28. பார்த்த .......................... இனி அவர்களைப் பார்க்காது.
34. நான் பேசினாலும் என் ............ குறையாது.
35. வெறுமையான திங்கள்கள் ___ இன்னல் ............... இரவுகள் எனக்குப் பங்காயின.

### வலமிருந்து இடம்

12. ............ மூச்சு எனக்கு உணவாயிற்று.
13. காட்டுக் கழுதைக்குட்டி மனிதனாகப் பிறந்தால், அறிவிலியும் ............ பெறுவான்.
14. தீயோரின் கண்கள் ............ போம், அனைத்துப் புகலிடமும் ___ அவர்தம் நம்பிக்கை!
15. கல்தேயர் மூன்று கும்பலாக வந்து ஒட்டகங்கள் ............... பாய்ந்து ___ க் கொண்டனர்.
17. அவர்களது வாழ்நாள் முடியுமுன்பே அது நடக்கும். அவர்களது தளிர் உலர்ந்து ...................
18. ஆண்டவர் சாத்தானை நோக்கி, "இதோ! அவன் உன் கையிலே! அவன் ................... மட்டும் விட்டுவை" என்றார்.
19. ..................... வல்லவர் எனக்கு வாழ்வைக் கசப்பாக்கினார்.
20. ..................... எண்ணெய்க் கால்வாய்களிலும், தேன், ___ இன்பம் காணார்.
21. எல்லாம் வல்லவரின் அம்புகள் ___ அவற்றின் .................. என் உயிரைக் குடிக்கின்றது.
22. ............ வகை அல்லல்களினின்றும் அவர் உம்மை மீட்பார்.
24. அவர் பார்க்காவண்ணம் ............ மறைக்கின்றது.
27. இதோ! வெண்ணிலவும் ஒளி குன்றியதே! ............ மீனும் அவர்தம் பார்வையில தூய்மையற்றதே!.
32. அறத்தை அணிந்தேன்; அது என் ஆடையாயிற்று ............ எனக்கு மேலாடையும் பாகையும் ஆயிற்று.

### மேலிருந்து கீழ்

1. .............. தோன்றும் இடத்திற்குப் பாதை எது?
2. இறைவனை மறப்போரின் ............ இதுவே.
5. தந்தையிலாக் குழந்தையை ___ ஏழையின் குழந்தையை ............ வைக்கின்றனர்.
7. வன்செயல் என் கையில் இல்லை, .......................... என் மன்றாட்டில் இல்லை.
13. இருளுக்கு அவர்கள் தப்புவதில்லை, அவர்களது தளிரை ............ வாட்டும்.
18. ............... சொற்கள், தடுக்கி விழுவோரைத் தாங்கியுள்ளன.
19. மூத்த மகளுக்கு ............ என்றும் இரண்டாவது மகளுக்கு ___ அப்பூக்கு என்றும் பெயரிட்டார்.
23. ............ வேண்டலை இறைவன் கண்டிப்பாய்க் கேளார். எல்லாம் ___ மாட்டார்.
29. ஓ! இவை யாவும் அவர்தம் ___ விளிம்புகளே! எத்துணை ................. அவற்றில் கேட்கின்றது.
31. தம் மூச்சால் ...................... வெளியை ஒளிர்வித்தார், தம் கையால் ___க் குத்தினார்.
34. நாம் அவர்க்கு என்ன சொல்லக்கூடும் ___ இருளின் முகத்தே ................. தெரியாது உழல்கிறோம்.

### கீழிருந்து மேல்

5. எங்கே பிணமுண்டோ அங்கே ............ இருக்கும்.
11. கடலின் ............ வரை நீ போனதுண்டா?
14. ஏனெனில் உறைபனியை '............... மிசை விழு' என்பார்.
15. கீழே அவர்களின் வேர்கள் காய்ந்து போம். ...................... அவர்களின் கிளைகள் பட்டுப்போம்.
17. மனிதர் மாண்டால், மறுபடியும் வாழ்வாரா? எனக்கு .................. வரும் வரை, ___ பொறுத்திருப்பேன்.
19. இணங்குக இறைவனுக்கு ...................... அமைதி, ___ நன்மை வந்தடையும்.
25. ஏனெனில் எனக்கு அவர் குறித்துள்ளதை அவர் ................................. வேற்றுவார்.
26. என் ............... கருகி எரிகின்றது. என் எலும்புகள் வெப்பத்தால் தீய்கின்றன.
27. குருக்களைத் தம் நிலையிலிருந்து ........................ செய்கின்றார். நிலைபெற ___ வீழ்த்துகின்றார்.
28. இரும்புக் ................ யாலும் ஈயத்தாலும் என்றென்றும் ___ பொறிக்கப்பட வேண்டும்.
30. அவர் என்னை வெறுத்தார், வெஞ்சினத்தால் ............... ப் போட்டார்.
31. தீங்கு அவர்களின் ............... இனிப்பாய் இருப்பினும், நாவின் அடியில் ___ வைப்பினும்.
33. நான் தொலைந்தேன் .......................... போலும் என் நம்பிக்கையை வேரோடு பிடுங்கினார்.

**விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி 153ற்கு எவரும் விடைகளை அனுப்பவில்லை!**

# 201 ஆம் ஆண்டின் உலகத் தொடர்பாடல் தினத்தையொட்டிய

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

12ஆம் பக்கத் தொடர்ச்சி

குடும்பமானது நாம் உதவி தருகின்ற, உயிரைக் கொண்டாடுகின்ற, மிகவும் பலன்தரும் ஒரு சமூகமாக இருக்கின்றது. இதனை நாம் ஒருமுறை உணர்ந்து கொள்வோமானால், நாம் மீண்டும் ஒருமுறை எப்படி குடும்பமானது ஒரு பிரச்சினை அல்லது சிக்கலுக்காளான நிறுவனத்திற்கெதிராக, செழுமையான மனித மூலவளமாகத் தொடர்ந்தும் அமைகின்றதென்பதைக் கண்டுகொள்ள முடியும். சமயங்களில் தொடர்பாடல் சாதனங்களானவை குடும்பத்தை வாழும் நிஜம் என்றில்லாமல், ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது ஒதுக்கிவிடப்படவோ, பாதுகாக்கபப்டவோ அல்லது தாக்கப்படவோகூடிய வடித்தெடுத்த மாதிரியாக ஒரு குடும்பத்தை முன்வைக்கின்ற போக்கினைக் கொண்டிருக்கின்றன. அல்லாதுபோனால், அன்பைப் பெறவும் திருப்பித்தரக்கூடுமான பின்னணியில், தொடர்பாடலின் கருத்தினை நாம் எல்லோரும் கற்றுக்கொள்ளும் இடமாக அல்ல மாறாக, கற்பனைக் கருத்தாடல்களின் களமாக எடுத்துக்காட்ட முற்படுகின்றன. எங்கள் அனுபவங்களை தொடர்புபடுத்திப் பார்க்கின்றபோது, எமது வாழ்வானது ஒரு தனி நிஜமாகப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும், எங்கள் குரல்கள் பல என்பதையும், ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள் என்பதையும் புரிந்துகொள்ள முடிகிறது.

குடும்பங்கள் சமுதாயத்தின் மூலவளமாகவன்றி ஒரு பிரச்சினையாக நோக்கப்படக்கூடாது. குடும்பங்களானவை அவற்றின் உச்சமாக மனிதனுக்கும் பெண்ணுக்கும், பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் உள்ள உறவின் அழகைப்பற்றியும், செழுமைபற்றியும் தமது சாட்சியத்தை துடிப்பாகத் தொடர்பாடல் செய்கின்றன. நாம் எமது கடந்த காலத்தைப் பாதுகாக்கவென போராடவில்லை. மாறாக, பொறுமையோடும் நம்பிக்கையோடும் நாம் வாழும் உலகிற்கு சிறந்த எதிர்காலத்தைக் கட்டியெழுப்பவே உழைத்துக் கொண்டிருக்கின்றோம்.

**பாப்பரசர் பிரான்சிஸ், வத்திக்கானிலிருந்து, 23 ஜனவரி 2015, பிரான்சிஸ் டி லாசால் நினைவாலயம்.**

# மன்னார் மாவட்டச் செய்திகள்

## மன்னார் பிரதேச செயலகம் மகுடம்

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்டமட்ட விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இரு பாலருக்குமான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்களில் இரு பிரிவிலும் மன்னார் பிரதேச செயலகப் பிரிவு அணி வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

கடந்த 09.05.2015 சனிக்கிழமை அன்று முருங்கன் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 3.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 1.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

## நானாட்டான் விளையாட்டு மைதான பிரதான வீதி புனரமைக்கப்பட்டுத் திறப்பு

நானாட்டன் பிரதேச சபைக்குச் சொந்தமான 200 மீற்றர் நீளம் கொண்ட நானாட்டான் பொது விளையாட்டு மைதான வீதி புனரமைக்கப்பட்டு கடந்த 26.03.2015 அன்று வியாழக்கிழமை காலை வைபவ ரீரியாகத் திறந்துவைக்கப்பட்டது.

கடந்த வருடம் வட மாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் வழங்கிய நிதியின்கீழ் குறித்த வீதி புனரமைக்கப்பட்டது. நிகழ்வுக்கு நானாட்டான் பங்குத்தந்தை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கநாதன், வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து வீதி அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன், நானாட்டான் பிரதேசசபைத் தலைவர் அன்புராஜ் லெம்பேட், பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபைச் செயலாளர் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மூன்று முக்கிய பிரதான வீதிகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நானாட்டான் - பொற்கேணி வீதி, நானாட்டான் - முருங்கன் வீதி ஆகிய வீதிகளுக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சரின் பணிப்புரைக்கு அமைவாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் சுமார் 06 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின்கீழ் குறித்த வீதிகளின் புனரமைப்புப் பணிகள் கடந்த 26.03.2015 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.

## மன்னார் நானாட்டான் அணிகள் மாவட்ட மட்டத்தில் சம்பியன்

மன்னார் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான இரு பாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் நானாட்டான் பிரதேச செயலக அணியும் வெற்றிபெற்று சம்பியன்கள் ஆயின.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை கூடைப்பந்தாட்டத்திடலில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் மன்னார் பிரதேச செயலக அணி 35:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது. தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதிக்கொண்டது. இதில் நானாட்டான் பிரதேச செயலக அணி 18:12 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

## மடுமாதா கிண்ணம் அந்தோனியாரிடம்

மடு மாந்தை மேற்கு உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடாத்தப்பட்ட மடு மாதா கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத்தொடரின் இறுதியாட்டத்தில் நெடுங்கண்டல் அந்தோனியார் விளையாட்டுக்கழகமும், வேட்டயா முறிப்பு வள்ளுவர் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நெடுங்கண்டல் அந்தோனியார் விளையாட்டுக்கழகம் கழகம் 3 ÷ 0 என்ற கோல் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த ஆட்டத்துக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ஜீ. குணசீலன், மாந்தை மேற்கு பிரதேச சபைத் தலைவர் வரப்பிரகாசம், அருட்தந்தை றஜனிகாந், அருட்சகோதரர் விஜயதாசன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 09 10 1961 — உதிர்வு 26 06 2005

### திரு. சந்தியா நிமால் யோசவ் பீரிஸ்


(பேசாலை, மன்னார்)

"அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார். அவர் தம் இறக்கைகளின் கீழ் நீர் புகழிடம் காண்பீர்" (தி.பா 91:4)

உங்கள் ஆன்ம அமைதிக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், உறவுகள், பேசாலை, மன்னார்.*

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 11 1972 — உதிர்வு 21 06 1990

### திரு. அல்பேட் லிபோறியஸ் சிராய்வா

(பேசாலை, மன்னார்)

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு யாரிடமும் இல்லை" (யோ 15:13)

காலச் சக்கரத்தில்
கணப்பொழுதில் உமையிழந்தோம்!
தனக்கென வாழாது
பிறர்க்கென வீழ்ந்து விதையானீர்!
ஆண்டுகள் இருபத்தைந்து
உம் உலக வாழ்வோ சிறு பொழுது.
கருணையுள்ள எம் இறைவன்
சேர்த்திடுவார் தனதரசில்.

*உம் பிரிவால் துயருறும்:*
*பாசமுள்ள அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்.*

## 11ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 11 1949 — உதிர்வு 11 06 2004

### திரு. சூசை கபிரியேல்

(மாவிலங்கேணி, முருங்கன்)

"ஆண்டவரின் அன்புறவு அவருக்கு அஞ்சி நடப்போருக்கே உரித்தாகும்" (திரு.பா 25:14)

பதினோராண்டுகள் கடந்தும்
பதியே நின்நினைவு பசுமையாய்
நெஞ்சில் நிழலாடி நிற்குதையா!
விதியை வெல்வதற்கு எவரால் முடியும்? - நல்ல
கதியை இறை அருள்வார்!
அடைக்கலத்தாய் பரிந்துரைப்பாள்!

*உம் பிரிவால் துயருறும்:*
*அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.*

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 01 1930 — உதிர்வு 13 06 2011

### திரு. பேதுரு வேதநாயகம்

(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

இவ்வுலக வாழ்வை முடித்து இறை சன்னிதானம்
நோக்கிப் பயணித்து வருடமும் நான்காகிவிட்டது!
அப்பா, அன்பினிலே ஒளி விளக்காய்த் திகழ்ந்தீர்
அன்பும் அரவணைப்பும் எமக்குத் தந்தீர்
எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்?
ஒருநாள் உங்களைச் சந்திப்போம்.
உங்கள் ஆன்மா இறைவனின் கைகளில்
மகிழ்ந்திருக்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*(அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யூன் மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை சூரியகட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)*

*உங்கள் பிரிவால் துயருறும்: மகன், மருமகள், பேரப்பிள்ளைகள். (நியூஜன், திஷி, சுபின், சுவிட்சனா)*

## தயவுசெய்து அவதானிங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

கட்டணம் : கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

## மன்னார் ஆயரின் உடல்நிலை தொடர்பாக ...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போது அளிக்கப்பட்டுவருகின்ற இயன்மருத்துவம் மூலமாக அவருடைய உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றுடன் இரத்த அழுத்தம், நீரழிவு, ஆஸ்மா போன்றவைகளும் கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் ஆயர் அவர்கள் தொடர்ந்தும் மருத்துவமனையில் இருந்து மருத்துவ சிகிச்சை பெறவேண்டிய நிலையில் உள்ளார். ஆயரின் உடல்நிலையில் அக்கறையுள்ள அனைவருடைய பிரார்த்தனைக்காகவும் நன்றிதெரிவிக்கின்ற அதேவேளையில், அவருடைய உடல்நலம் தேற தொடர்ந்தும் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். 05.06.2015 வெள்ளிக்கிழமை அன்று ஆயருக்கான விசேட பிரார்த்தனை தினமாக அனுஷ்ரிக்குமாறு மன்னார் மறைமாவட்ட இறைமக்களைக் கேட்டுள்ளோம்.

## வித்தியாவின் படுகொலை ......

2ஆம் பக்கத் தொடர்ச்சி

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதி. கடந்த காலத்தில் நமக்குக் கிடைத்த அனுபவம் கடத்தல், வன்புணர்வு, கொலை, போதைவஸ்து தொடர்பான குற்றச்செயல்கள் போன்றன சமூதாயத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கும் குற்றச் செயல்களுக்கான நீதிநிலைநாட்டல் தொடர்பான செயற்பாடுகள் இழுத்தடிக்கப்படுகின்றன என்பதாகும். இச்செயற்பாடுகள் தாமதமின்றி முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அவரவர் குற்றங்களுக்குரிய தண்டனை உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

- அருட்பணி எஸ். வி. பி. மங்களராஜா, தலைவர், யாழ் கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு.

## அருட்சகோதரி ஹெலன் ...6ஆம் பக். தொடர்

அருட்சகோதரியின் பெற்றோர்களான காலஞ்சென்ற முன்னாள் அதிபர் திரு. டோமினிக் லெம்பேட், தாய் திருமதி பொன்றோஸ் லூர்துமேரி மார்க் இருவருமே சிறந்த சமூகப்பணியாளராகக் கருதப்பட்டவர்களென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

2009 தொடக்கம் மனித உரிமைக்கான துறவியர், அருட்பணியாளர் அமைப்பின் ஊடாக மனிதநேயப் பணிகளில் ஈடுபடும் அருட்சகோதரிக்கு மனித உரிமை விருது வழங்கிக் கௌரவித்தது எமக்குப் பொரும் மகிழ்ச்சியைத் தந்துநிற்கின்றது. எம் இறைமீட்பர் சபை எம் இலங்கை மண்ணில் தடம்பதித்து வைரவிழாக் கொண்டாடிய இவ்வருடத்தில் இந்நிகழ்வு எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது. அருட்சகோதரி தொடர்ந்தும் இறைப்பற்றுடனும், இறைநம்பிக்கையுடனும் ஏழைகளில் இறைபணி தொடர இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றோம்.

தகவல் : அருட்சகோதரி செபமாலை பீரீஸ்,
இறைமீட்பர் அருட்சகோதரிகள் இல்லம், குருநாகல்.

## கிறிஸ்தவர்கக்கு எதிரான வன்முறைகள் ...

ஆம் பக்கத் தொடர்ச்சி

தமது கிறிஸ்தவ சீடத்துவத்தை வாழ, கசப்பான முடிவுகளை ஏற்றுக் கொடூரமான துன்பங்களுக்கு மத்தியில் வாழும் எமது விசுவாசிகளை ஆழமாகத் தூண்டுகின்றோம். இந்தத் தீவிரவாதம் மற்றும் வன்முறைகளில் யாரெல்லாம் ஈடுபட்டுள்ளனரோ அவர்களின் செயற்பாடுகள் விரைவாக நிறுத்தப்பட்டு, எஞ்சியுள்ள அப்பாவி மனிதர்கள் அதாவது குழந்தைகள் மற்றும் வளர்ந்தவர்கள் காக்கப்பட வேண்டுமென்று இடைவிடாது இறைவனிடம் இரந்து வேண்டுவோமாக. அனைத்து மக்களுக்கும் தமது விருப்பிற்கும் சுதந்திரத்திற்கும் ஏற்ப மதங்களைப் பின்பற்றுவதற்கான அடிப்படை உரிமை இருக்கின்றது. எனவே உலகின் எல்லா அரச தலைவர்களையும் அவர்களது அதிகாரத்திற்கு உட்பட்ட வகையில், மதத்தின் அடிப்படையிலே வெளிப்படையாக நடத்தப்படுகின்ற இந்த அப்பட்டமான வன்முறைகளையும், படுகொலைகளையும் நிறுத்துவதற்குத் தேவையான தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு நாங்கள் திடமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையானது 07 ஆனி 2015 இல் கொண்டாடப்படவிருக்கின்ற கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தப்பெருவிழாவை, செபதபத்தினுடைய நாளாகப் பிரகடனப்படுத்தி, பாதிக்கப்பட்ட நாடுகளிலுள்ள இறந்தவர்களின் சகோதர சகோதரிகளுக்கு எமது உடனிருப்பைத் தெரிவிக்கத் தீர்மானித்துள்ளது. எனவே எமது பாவங்களுக்குப் பரிகாரமாகத் தன்னையே முழுமுதற்பலியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்து, தனது இறுதித்துளி இரத்தத்தையும் சிந்திய இயேசுவின் அளவில்லாத அன்பை நினைவுகூரும் இந்நாளிலே எமது அனைத்துப் பங்குகளிலும், துறவற சபைகளிலும் ஒரு செப வழிபாட்டை ஒழுங்குபடுத்தி, கடவுளின் தலையீட்டினால் இவ்வாறான மிருகத்தனமான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக.

## இத்தாலியில் இருந்து ....

2ஆம் பக்கத் தொடர்ச்சி

இது இங்கு வாழும் இந்து சமய மக்கள் கிறிஸ்தவர்கள் என்ற வேறுபாடு இன்றி மக்கள் அனைவரினது பாராட்டைப் பெற்றதுடன் குறிப்பாக இத்தாலி மொழி பேசுபவர்களே வியந்து போற்றும் அளவுக்கு மிக மிகச் சிறப்பாக இருந்தது. இவை அனைத்திற்கும் அச்சாணியாக இருந்து செயலாற்றுபவர் எமது அன்பிற்கும் மதிப்பிற்குரிய அருட்தந்தை விமல் (அமதி) அடிகளாரே.

மேலும் நாம் எங்கு வாழ்ந்தாலும் எம் தாய் நாட்டையும், தமிழையும், தமிழர் மாண்பையும் நேசித்து இறை விசுவாசத்தில் உயிரூட்டமுடன் வாழ இவர் போன்ற இன்னும் பல அருட்தந்தையர்களும், பெரியார்களும் வழிசமைத்துத் தரவேண்டும் என்று கூறி அனைத்திற்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

தகவல் : ராணி மைந்தன், பலர்மோ, இத்தாலி.

## மன்னாவை உடனடியாக விநியோகிங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம். பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

## மன்னாவுக்கு பணம் அப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No: 02002029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

# இணைபிரியாத இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து

## திரு. திருமதி. ஆனந்தம் இராஜேஸ்வரி

(பள்ளிமுனை, மன்னார்)

(16.06.1965 - 16.06.2015)

ஆழ்கடல் வற்றினாலும் அன்புக்கடல் வற்றாத அன்புத் தெய்வங்கள்! பாசமும் நேசமும் தந்து ஊட்டி வளர்த்த தெய்வங்கள்!
ஐம்பது ஆண்டுகள் நிறைவு கண்டுகளிக்க எம் கனவுகளை நினைவாக்கி ஆசீர் அளித்த அன்பு நிறைந்த ஆண்டவருக்கு நன்றி.
இன்னும் பல்லாண்டு எம்முடன் வாழ இறைவனின் அருள்வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றோம்!



வாழ்த்துக்கள் கூறும்:

அன்புப் பிள்ளைகள்:-
மெக்ஸி, ஜொய்ஸி, பேர்ஸி, பிறின்ஸி, ரெம்ஸி, ஜான்ஸி

பாசமுள்ள மருமக்கள்:-
விக்ரர் இரட்ணசிங்கம், மாளினி, நெவில் தேவராஜா, அனுலா, பூரணி, விஜிலா, ஜசிக்குமார்.

பிரியமுள்ள பேரப்பிள்ளைகள்:-
ஜேம்ஸ் எடிசன், கில்பெட் ஜெனிபர், அலெக்ஸ், யூலியன், மார்ஷல் ஜக்சன், சேர்ஜியஸ், செறின், ஜேர்ஜினி, ரியூனி, ரோணியா, சகாணி, ஜொய்னஸ், ஜானுகா, ஜனகன்.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 07 1972 — உதிர்வு 14 06 2014



### திரு. ரெட்ணேஸ்வரன் றொபேட் நிஷாந்தன்

(சின்னக்கடை, மன்னார்)

குடும்பத்தின் குலவிளக்கே!
மண்ணில் மறைந்து ஆண்டு ஒன்று ஆனாலும்
எங்கள் மனதைவிட்டு அகலவில்லை உம் நினைவு!
உடலால் எம்மைப் பிரிந்தாலும்,
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.
உங்க ஆன்ம அமைதிக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், பாசமுள்ள அப்பா, அம்மா, தம்பி, தங்கை மற்றும் உறவினர்கள்.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 08 1995 — உதிர்வு 11 06 2010



### செல்வன். நீக்கிலஸ் கனிலன்

(சிறுக்கண்டல், முருங்கன்)

கனிலன், நீ வளர்த்த கனிதரும் மரங்களும்,
மலர்ச்செடிகளும் உன் பெயர் சொல்லிக்கொண்டிருக்க
நீயில்லா இவ்வுலகில் ஆயிரம்தான் வாழ்வில் வரும்
ஆனால் நிம்மதி வருவதில்லை.
சாவே உன்னிடத்தில் நீதியே இல்லையா?
இறப்பே உனக்கு வயதே இல்லையா?
மண்ணே மனிதருக்கு விடுதலையே இல்லையா?
நோயே மனிதருக்கு மருந்தே இல்லையா?
தாய்மையே தியாகத்திற்கு எல்லையே இல்லையா?
சிரிப்பே நீ அழுகைக்கு எதிரி இல்லையா?
நினைவே துக்கத்திற்கு விடிவே இல்லையா?
கடவுளே உமது இரக்கத்திற்கு அளவே இல்லையா?

கனவிலும், நினைவிலும் உன்:
அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, உறவினர்கள்.

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 10 1969 — உதிர்வு 12 04 2015



### திரு. நீக்கிலஸ் தேவராஜா

(புத்திரகண்டான், முருங்கன்)

– பிரான்ஸ் –

"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே, நீ எனக்கே சொந்தம்" (எசாயா 43:1)

வாழும் வயதினிலே மாளவிதியாச்சே
நாளும் உம் நினைவு எம்மை வாட்டுதையா!
சூழும் துயரமெல்லாம் போக்கிடுவார் தேவபரன்
நாளும் செபிக்கின்றோம் நற்பேறு பெற்றிடவே!

ஆறாத் துயருடன்:
குடும்பத்தினர்
(பிரான்ஸ்)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 08 1962 — உதிர்வு 09 06 2014



### திரு. செ. அன்ரன் இன்பதாசன்

("மலர் வாசம்", சின்னக்கடை, மன்னார்)

அன்பின் உறைவிடமே, பாசத்தின் ஒளி விளக்கே, ஆலமரம்போல் இருந்து ஆயிரம் உறவுகளை வழிநடத்திய எம் பாசதீபமே! குடும்பத்தின் குலவிளக்காய் செல்லக் குழந்தைக்கோர் அன்பு அப்பாவாய், உடன் பிறப்புகளுக்கு உகந்தவனாய், சமூகத்தில் நற்சேவையாளனாய், ஆலயத்தில் நற்பணியாளனாய், புன்னகைபூத்த வதனத்துடன் பார் போற்றும் வண்ணம் வாழ்ந்தீரே! கண்ணிமைக்கும் பொழுதுக்குள் காலன் உம்மைக் கவர்ந்திட்டானே, பாசமெல்லாம் எம்மீது சொரிந்தபோதும் பாசமான மனைவிக்கும், மகள் அர்ச்சுக் குட்டிக்கும் உடன் பிறப்புக்களுடன், உற்றார் உறவினர் யாவருக்கும் விடை கூறாமல் - நீங்கள் விடைபெற்ற மாயமென்ன? ஒவ்வொரு நொடியும் உம் ஆன்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்.
நீங்கா நினைவுகளுடன் : அன்பு மனைவி, மகள், உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 09 1973 — உதிர்வு 18 06 1995



### செல்வி. மிக்கேல் சில்வா யூட் அன்ரனற் (நிகிலா)

பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோவில் (கனடா)

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

அன்பு எனும் விதை விதைத்து அறிவு எனும் நீர் வார்த்து
பாசம் எனும் பயிர் வளர்த்து
குடும்பம் என்னும் பசுஞ்சோலையில்
மகிழ்வுடன் எமை வாழவைத்த எமது நிகிலாவே!
மன்னவராம் யேசுவோடு உன் ஆன்மா சங்கமிக்க
ஒன்றுபட்டு வேண்டுகின்றோம்!

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.
தகவல்: திரு. மிக்கேல் சில்வா குடும்பத்தினர் (கனடா)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 10 1997 — உதிர்வு 19 06 2014



### செல்வன். சா. ஜெரூஷன்

(கோயில் வீதி, உயிலங்குளம்)

கல்வியில் நோக்கம் வைத்து, கண்ணியமாய் - நீ
களங்கமின்றிப் பயின்று வந்தாய் - அதிலும்
கணித பாடமென்றால் மிகையாய் பிடிக்கும் - ஆகவே
கணித ஆசிரியரை நன்றாய்ப் பிடிக்கும்.
மருத்துவத்துறை பயில ஆசை - அதிலும்
தாதியர் சேவை மிகையாய் பிடிக்கும்
பாரிய சேவையும், நீடிய வேதனமும் என்பதால் - இது
தரம் ஒன்பதிலே நீ போட்ட கணக்கு!
விளையாட்டில் கிறிக்கெற் உனக்குப் பிடிக்கும் - அதிலும்
பந்துவீச்சு மிகையாய்ப் பிடிக்கும்.
இவையனைத்தும் பிடித்த உனக்கு - இத்
தரணியில் வாழத்தான் பிடிக்கவில்லையோ!
முதற்கனி நற்கனியென கேட்ட இறைவனுக்கு
கண்ணீரையும் சேர்த்துக் காணிக்கையாக்குகின்றோம்.
- பாசமிகு பெற்றோர், சகோதரன், உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org